திருத்தணி

ங்கலங்கிழார்

இலக்கிய மன்ற

0-வது ஆண்டு விழா

மலர்

1983





தணிகைக்கோ

டாக்டர் என். ஏ. ரஷீத்

அவர்களின்

57-வது

# பிறந்த நாள் விழா

# மலர்

தணிகை எல்லையை மீட்கச் சிறைபுகுந்த செம்மல்,
தலைதாழாத் தன்மானச் சிங்கம்,
தந்தையாய்-தாயாய் கழகத் தோழர்களை அரவணைத்துச்செல்லும்
பண்பின் சிகரம், தானைத் தலைவர்,
**கலைஞரின் அன்புத் தம்பி,**

என் இதயத்தில் ஒன்றிவிட்ட
ஆருயிர் அண்ணன் தணிகைக்கோ அவர்களுக்கு

## 57-வது பிறந்த நாளில்
## எனது நல்வாழ்த்துக்கள்!



**ஆர். சிகாமணி,**
பொதுச் செயலாளர்,
மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத்
தொழிலாளர் சங்கம்,

மணலி, :: சென்னை-600068.

# திருத்தணி மங்கலங்கிழார் இலக்கிய மன்ற
# 10-வது ஆண்டு விழா மலர்

மற்றும்

# தணிகைக்கோ டாக்டர் என். ஏ. ரஷீத் அவர்களின்
# 57-வது பிறந்த நாள் விழா மலர்

**1983**

**மாலை தொடுப்போர் :**

| | |
|---|---|
| ந. அ. மாலிக் | க. நாகேசுவரன் |
| பெ. கிருஷ்ணன் | கோல்டன் சுப்பிரமணியம் |
| திருமலைப் பிள்ளை | உருத்திரன் |
| புலவர். கயிலாயம் | டாக்டர் சேகர் |
| டாக்டர். சிவலிங்கம் | மு. சிட்டி |
| சிவசங்கர் | த. வ. உமாபதி |
| உரியூர் ராமையா | வே. ஆறுமுகம் |
| ஜெயபிரகாசு | தணிகை இராமன் |
| துரை. சிலம்பன் | இராசசேகர் |
| சீனிவாசன் | வீரை. இஸ்மாயில் |
| M. K. இஸ்மாயில் | கவிஞர் பத்ருதீன் |
| ந. சந்திரன் | தமிழன்பன் |
| அரசு | கவிஞர் மூசா |
| தங்கவயல் வாணிதாசன் | K. T. S. மணி |
| காஞ்சி விஜயபாரதி | ஸ்ரீ சக்தி அச்சகம், காஞ்சி |

மற்றும் அன்பர்கள்

ஆசிரியர் மங்கலங்கிழாருக்கும் அவரது தொண்டினைத் தொடரும்
மன்றத்தார்க்கும் எங்கள் இதயம் நிறைந்த
நல்வாழ்த்துக்கள்

**பல்லாண்டு வாழ்க—நண்பர் திரு. ந. அ. ரஷீத் அவர்கள்**

இன்னணம்,



## கோல்டன் ந. சுப்பிரமணியம்

## கோல்டன் ந. சண்முகம்

928.948114
MAN

மற்றும்

## கோல்டன் நிறுவனங்கள்

கோல்டன் போக்குவரத்துத் துறையினர் ★ கோல்டன் திரையரங்கம்

கோல்டன் கமலம் தங்கும் விடுதி

**திருத்தணி**



# காணிக்கை

**தண்டமிழ்ச் சான்றோரே!**

**வணக்கம்.**

தன்னுணர்வற்ற தமிழ்த்தொண்டால் — நிலைத்தோராய்த் திகழும், தமிழ்ச் சான்றோர் சிலரில், "தமிழ் தழைக்க—நாம் தழைப்போம்" என்னும் உணர்வால், பட்டிதொட்டியெங்கும் — நடந்தே திரிந்து, ஆங்காங்கே உள்ள இளைஞர்களை உற்று நோக்கி, "தமிழ்ப்பயிர்" வளரத்தகுந்த உள்ளங்களைத் தேடிப்பிடித்துப் பண்படுத்தி — தமிழ்ப்பயிர் வளர்த்திட்ட பெருந்தகை "மங்கலங்கிழார்" தமிழகத்தின் வடவெல்லையாக விளங்கிடும் — திருத்தணி வட்டத்தின் வரலாற்றினை ஆழ்ந்து உணர்ந்து, அப்பகுதியின் பிறமொழியாளர் "ஆதிக்கம்" நிலைபெற்றிடக் காரணமான சூழ்நிலையை அறிவித்துத் தமிழர்கள் "தாம் தமிழர்" என உணர வேண்டும் — என்னும் இன உணர்வை வேறுபாடற்ற வகையில் உணர்த்தியவர், உருவாக்கியவர், தமிழையும் உணர்வையும் ஊட்டி, பொருளாதாரத்தில் வளம் பெற்றிலங்கினால்தான் தமிழரின் இன உணர்வு நிலைக்கும் என்று வாழ்வில் வளம்பெற, "கல்லாமை"யை விரட்டிட முனைந்த முனிவர் மங்கலங்கிழார் "தமிழ்க்கிழார்" என்றே அழைக்கப்பட்டவராவார். அறநெறிக் காப்பாளர், அறமும், தமிழும் — வேறல்ல — என்றாக்கிய மங்கலங்கிழார் ஒருவர் ஆற்றிய தொண்டு ஈடும் இணையும் அற்றது.

தமிழ்நாட்டுக்கு வந்த அயலவர்களே தமிழருக்குத் தமிழின் பெருமையையும், தமிழையுணர்வதற்கும் கற்பதற்கும் வாய்ப்பை உருவாக்கித் தந்தனர் என்பது தமிழக வரலாறு விளக்கும் உண்மை.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர், தமிழுக்குத் தொண்டாற்றி இன உணர்வு ஊட்டி, நாடு நலம்பெறச் செய்ததுடன் எழுச்சிமிகு எல்லைப்போரை நடத்திடும் மறவர்களைத் தோற்றுவித்த தகைமையாளர் இவர்போல் எவர்? என வரலாற்று நாயகராய்த் திகழ்ந்தும்—தனக்கென எதையும் ஆக்கிக்கொள்ளாத தன்மையே, நமக்கு வழிகாட்டியாகிறது — என்பதால் அவர் திருவடிகளைப் போற்றி, அவராற்றிய தொண்டினை ஏற்றவகையில் ஆற்றிடவே — அவர் பெயரால் மன்றம் அமைத்துத் தமிழ்த் தொண்டாற்றிட முனைந்தோம்! எம் கருத்தினை புரவலர் — பெருந்தகை

திரு. இல. நாராயணன் செட்டியார் — மதுரை அவர்களிடம் வெளியிட்டோம். அவர் நல்லாசியுடன் எல்லைக்காவலர் திருமிகு. பொன்னியலார் — திரு. சுப்பிரமணியனார் அவர்களின் நல்லாதரவுடன் 1973ஆம் ஆண்டு மன்றத்தைத் தொடங்கித் தொடர்ந்து இலக்கியத் தொண்டாற்றி வருகிறோம்.

எங்கள் தொண்டிற்குத் துணை செய்யும் நல்லிதயங்களின் அருள் உள்ளங்களைப் போற்றுகிறோம்.

எங்கள் பணி சிறக்க — எஞ்ஞான்றும் உதவிடும் — மாணவச் செல்வங்களை வாழ்த்துகிறோம்.

பத்தாண்டு காலமாக நாங்கள் மங்கலங்கிழார் இலக்கிய மன்றத்தைத் தொடர்ந்து நடத்துதற்குத் தலைவராயமர்ந்து எங்கள் நிகழ்ச்சிகளனைத்தையும் சிறப்புற நடத்துதற்கேற்ற அறிவுரைகளையும் ஆய்வுரைகளையும் பரிவுரைகளையும் தந்து வரும் திருமிகு. தணிகைக்கோ டாக்டர். ந. அ. ரசீத் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வணக்கங்களை இந்த நன்னாளில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

பத்தாண்டுகள் எம்மைப் புரந்த நல்லிதயங்களுக்கு வாழ்த்தும் வணக்கமும் தெரிவித்து, மேலும் பணியாற்றிட ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

விளம்பரங்கள் கொடுத்துதவிய — நல்லோருக்குப் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துகொள்கிறோம்.

எம் கருத்துக்களையேற்று, எங்களை நல்வழிப்படுத்தி, உதவி, நடாத்திடும் அருள்மிகு. சுப்பிரமணியர் திருக்கோயில் உதவி ஆணையர் திருமிகு. அருள்மலி த. நாகராசனார் அவர்களைப் போற்றி வணங்கி, வாழ்த்தி மலர் மணத்தை நுகர வழிவிடுவோம்.

— மலர்க் குழுவினர்



3

சென்னை,
16—3—1983.

# வாழ்த்துரை


பேராசிரியர் நாரண. துரைக்கண்ணன்,
(ஜீவா)


**அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு,**

வாழிய நலம். நீங்கள் திருத்தணிகை மங்கலங்கிழார் இலக்கிய மன்றத்தின் சார்பில் பத்தாம் ஆண்டு விழாவினைக் கொண்டாட முற்பட்டிருப்பதையும், அச்சமயம் மங்கலங்கிழாரின் சீரிய தமிழ்த் தொண்டினையும் அப்பெருமகனின் வழியில் பெருந் தொண்டாற்றி வரும் தணிகைக்கோ டாக்டர் ரசீத் அவர்களின் தன்னலமற்ற பணியினையும், பாராட்டும் முறையில் மலரொன்று வெளியிட முனைந்திருப்பதையும் அறிந்து பெரு மகிழ்ச்சியுற்றேன்.

நானும் மங்கலங் குப்புசாமி முதலியாரும், மகா வித்வான் வேணுகோபாலப் பிள்ளை, அர்ச்சுன முதலியார், பாலூரர் கண்ணப்பர் ஆகியோரும் தன்னேரில்லாத தமிழ்ப் பேரறிஞர் கலா நிலையர் டி. என். சேஷாசலம் ஐயரவர்களின் அன்புக்குரிய மாணவர்களாயிருந்து மேன்மை அடைந்தவர்கள்.

மிக இளமையிலேயே மங்கலங்கிழாரின் உயர்ந்த நோக்கையும் உன்னதமான தொண்டையும் அறிந்துள்ளவன் நான்.

அவர் சென்னை மாநகரை விட்டுத் திருத்தணிகைப் பகுதியில் குடியேறி அரக்கோணம் குருவராயப்பேட்டை முதலிய கிராமங்களுக்கெல்லாஞ் சென்று தமிழர்களாயிருந்தும் தாங்கள் வாழும் கிராமங்களெல்லாம் ஆந்திர ராஜ்யத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்ததால் தெலுங்கு மொழியைப் பேசியும் கற்றும் வந்த தமிழ் இளைஞர்களுக்குத் தமிழ் உணர்ச்சியையூட்டி வந்ததும் திருத்தணிகை, திருப்பதி உட்பட தமிழ் மக்கள் பெரும்பான்மையாக உள்ள ஊர்கள் தமிழ் நாட்டுடன் சேர வேண்டும். அதற்கான முறையில் முயற்சி செய்து இயக்கமொன்றை நடத்த வேண்டும் என்று வற்புறுத்திச் செயல்பட்டு வந்ததும் எல்லாம் எனக்குத் தெரியும்.

அவர் போகுமிடமெல்லாம் தமிழ்ப்பள்ளிகளை ஏற்படுத்தியும் நூற்றுக்கணக்கான கிராம இளைஞர்களைப் புலவர்களாக்கியதும் மறக்க முடியாத பெருந்தொண்டுகளாகும்.

திருத்தணிகையும் அதைச் சுற்றியுள்ள ஊர்களும் தமிழ் நாட்டின் வடவெல்லைக்குட்பட்டவையாக வேண்டும் என்று மங்கலங்கிழார்தான் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு முதன் முதலாகக் காட்டியவர்.

இவ்விதம் தமிழகத்தின் வடவெல்லையாகத் திருத்தணிப் பகுதி அமைவதற்கு முதன் முதலில் வித்திட்டுப் பாடுபட்ட பெருமகனை மங்கலங்கிழாருக்குத் தக்க முறையில் நினைவுச்சின்னம் ஒன்று இன்றுவரை நிறுவப்படாதது வருந்தத்தக்கதாகும்.

ஆகவே, நன்றியுள்ள உங்களைப் போன்ற தமிழ் இளைஞர்கள் மங்கலங்கிழார் பெயரால் பல அமைப்புகளை ஏற்படுத்தி நடத்தி வருவது எனக்கு ஆறுதலைத்தருகிறது.

மங்கலங்கிழார் பெயரால் இலக்கிய மன்றம் ஒன்றைப் பத்தாண்டு காலமாக நடத்தி வரும் உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்தை உளமார வழங்குகின்றேன்.

உங்கள் மன்றத்தின் தலைவராக உள்ள தணிகைக்கோ ரசீத் அவர்களையும் நெடுங்காலமாக நான் அறிவேன். அவர் என் அன்புக்கும், மதிப்புக்கும் உரிய நண்பர்களில் குறிப்பிடத்தக்கவராவார்.

இவருடைய தாய்மொழிப்பற்றும், இனப்பற்றும் தன்னலமற்ற தொண்டும். தமிழ் மக்கள் பலர் நன்கறிந்தவை. மங்கலங்கிழாருடனும் சிலம்புச் செல்வருடனும் இருந்து, தமிழ் பணியாற்றிச் சமூக நலனுக்காகப் புரிந்த செயல்களெல்லாம் வரலாற்றில் இடம் பெறத்தக்கவை. தமிழக வடவெல்லைப் போராட்டத்தில் தளபதிகளில் ஒருவராயிருந்து இவர் சிறை சென்றது உலகப் பிரசித்தம்.

இவர் உலகியலையும் பலதரப்பட்ட மக்களின் உளஇயலையும் நன்குணர்ந்து சிறந்த குறிக்கோளுடன் செயலாற்றி வருபவர். இலக்கியம், கலை, அரசியல் மட்டுமல்லாமல் பல துறைகளில் உள்ள நுட்பங்களையும் உய்த்தறிந்து வைத்துப் பகுத்தறிந்து பேசுவதும் செயல்படுவதுங் கண்டு நான் பல முறை வியப்புற்று இருக்கிறேன்.

என் அன்பு இளவல் ரசீத் அவர்கள் புரிந்து உள்ள சாதனைகளில் தத்துவ மெய்ஞ்ஞானியான மஸ்தான் சாகிபு அவர்களின் தத்துவப்பாடல்களுக்கு நல்ல உரை கண்டு நூல்வடிவில் வெளியிட்டுப் பேரறிஞர்களும் பாராட்டும் படியாகச் சாதாரண மக்களும் அறிவு தெளிவு பெற வைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரசீத் ஐம்பது வயதும் நிரம்பியிருக்க மாட்டார் என எண்ணுகிறேன். இப்பாராட்டு விழாவில் இவர் பிறந்த நாள் விழாவும் அடங்கியிருக்கிறது என்று நம்புகிறேன்.

இவர் ஆயிரம் பிறைகள் அதற்கு மேலும் நிறை வாழ்வு வாழ்ந்து நாட்டுக்கும், மக்களுக்கும் மொழி வளர்ச்சிக்கும் அரும்பெருந் தொண்டு புரிய வேண்டும் என்று நான் வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,

**துரை.**



உ
சிவமயம்

**L. Narayanan Chettiar**

VISALAKSHI
MADURAI-625 002.

11—3—83.

# வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய பெரியார்களுள் மங்கலங்கிழார் திரு. குப்புசாமி முதலியாரும் ஒருவர். தொடக்கத்தில் திண்ணைக் கல்வியோடு தச்சுத் தொழிலே தம் பணியாக வயிற்றுப் பிழைப்பாகக் கொண்டு வாழ்ந்தார். ஆனால் தமிழ் ஆர்வம் அவரை மீட்டது, ஆட்கொண்டது. வழக்கறிஞர் சேஷாசலம் அய்யரிடம் தமிழ் பயின்றார். பிறகு தமிழ் ஆசிரியரானார். கலையிலும் கருத்துக் கொண்டார். நாடகங்கள் பல நடத்தினார். திரைப் படத்திலும் சாணக்கியனாக நடித்துப் புகழ் பெற்றார்.

தொண்டுள்ளம் கொண்ட அவர் பல சிற்றூர்களில் இரவுப் பள்ளிகள் நடத்தி மக்களின் அறிவுக் கண்களைத் திறந்தார். வட ஆற்காடு, சித்தூர் மாவட்டங்களில் அவர் பணி பெருகிற்று.

எல்லை மீட்புப் பணியிலும் அவர் உள்ளம்நாடியது. ஆந்திர மாநிலத்தோடு சேர்க்கப்பட்ட திருப்பதி, திருத்தணி ஆகிய பகுதிகளை மீட்கப் பாடுபட்டார். திருத்தணியைதமிழகத்தோடுசேர்ப்பதில் வெற்றியும்கண்டார். அவர் பல நூல்களை படைத்தார். தமிழ்ப்பொழில், தமிழ் நாடும் வட எல்லையும், நன்னூல் உரை போன்றன அவர் பெற்ற அறிவுச் சிறப்பத்தைப் புலப்படுத்தும். மங்கலங்கிழார், திரு. வி. க., வ. உ. சி., தெ. பொ. மீ., ம. பொ. சி. போன்ற தமிழறிஞர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர் உழைப்பால் உயர்ந்தவர், உள்ளத்தால் சிறந்தவர். தொண்டால் துறவுக் கோலம் பூண்டு வித்தியானந்தராக விளங்கியவர். அவர் நாட்டுக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் ஆற்றிய தொண்டு இன்று மன்றங்களாக மலர்ந்து புகழ் பரப்புகின்றன. அதைப் போற்றுகிறேன். "வித்தியானந்தரின் நிஷ்காமிகத் தொண்டு என்னை ஈர்க்கிறது. அத் தொண்டு மேலும் மேலும் வளர்வதாக. இன்னும் அவர் வழிவழியே பல வித்தியானந்தர்கள் தோன்றுவாராக" என்று தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள் பாராட்டுகிறார்.

தமிழ்த் தொண்டர் மங்கலங்கிழார் குப்புசாமி முதலியார் பெயரால் அமைந்த இலக்கிய மன்றம் பத்து ஆண்டு பணியைப் பாங்குடன் முடித்து அதற்குச் சான்றாய் மலர் ஒன்று கொணர்வதை மனமாரப் பாராட்டுகிறேன்.

வாழ்க மங்கலங்கிழார், வளர்க அவர் தொண்டு.

# தணிகைச் செல்வர் வாழ்க!

கவிஞர் முகவை இராசமாணிக்கம்,
14, கரீம் சுபேதார் தெரு, சென்னை-5.

தணிகை தந்த செல்வர்! தன்மானச் சித்தர்! — ஐந்து
அணிசேர் தமிழ்த் தாயின் அருமைந்தர்! — குணநலன்கள்
நிறைந்த சன்மார்க்க நெறியாளர்! — இசுலாத்தின்
மறை ஓதித்தெளிந்த நற்பண்பாளர்! — நாயகத்தின்
முறை பற்றி ஒழுகும் மூதறிவாளர்! — குணங்குடியார்
நெறியுணர்ந்து பேசுகின்ற நாவல்லார்! — நற்கவிதை
நயம்பருகி! நிறை குடத்தை ஒக்கும் மதிவாணர்! — செஞ்சொல்
வயப்பட்டு, உரை நிகழ்த்தும் வாக்காளர்! — ஆண்டு
பலகண்டும், பணிபுரிய அயராத பாங்குடையார்! — மக்கள்
நலம் காக்கச் சலியாது உழைக்கின்ற வன்றொண்டர்! — வாழ்க!

தமிழ்ப்பற்றும், தமிழினத்தின் பாசமும் நிறைந்ததவர் மூச்சு!
தமிழருக்கு இன்னலென்றால், ஆவேசக்குர லெழுப்பும் பேச்சு!
தணிகை மலைக்குகந்த குணக் குன்றனைய உள்ளம்!
தமிழ்ப்பகைவர் சதி தகர்க்கும் வெகுளி பொங்கும் தீரம்!
சமதர்மக்கொள்கை நெறி தழைப்பதிலே ஆர்வம்!
சமயமெனில் சமரச சன்மார்க்க நெறி போதம்!
தமிழுள்ளம், தமிழுடலம், தமிழுயிர்ப்பே நிறைந்து
சகமுழுவதும் வாழ்கின்ற மனிதர் நலம் பேணி
சதகோடி வாழ்ந்திருந்து, தணியாத தொண்டுசெய்து
சந்ததமும் புகழ்பெற்று வாழ்ந்திடுக! தணிகை ரஷீத் தோழ!



செந்தமிழ்ச் செல்வர்
கவிரத்னம்
கவித் தென்றல்
திருவருட் கவிச் செல்வர்
கவிஞர் திலகம்
கவிச் செல்வம்
கவிக் குரிசில்
கவிராயர்
மகா கவி
கலைமாமணி
ஷாயிரே ஆஜம்
டாக்டர்

★



போன்: 842257

**கவி காமு ஷெரீப்**
21, பச்சையப்ப செட்டி தெரு,
சென்னை-600 002.

**எழுதியுள்ள நூற்கள்**

இஸ்லாமிய நூற்கள்
(கவிதை)
1. நபியே எங்கள் நாயகமே
2. ஆயிஷா நாச்சியார் பிள்ளைத்தமிழ்
3. இறையருள் வேட்டல்

(உரைநடை)

4. சீறாப்புராணச் சொற்பொழிவு
5. வள்ளல் சீதக்காதி
6. சீறாப்புராணம் (உரை)

—

**பொது நூற்கள்**

நாவல்
1. நல்ல மனைவி
2. தஞ்சை இளவரசி
3. விதியை வெல்வோம்

—

சிறுகதை
1. காதல் வேண்டாம்
2. காதலும் கடமையும்
3. கனகாம்பரம்

—

நாடகம்
1. புதுயுகம்
2. காதல் தந்த பரிசு
3. மன்னவன் காதலி

—

கவிதை நூல்
1. ஒளி
2. இன்றையச் சமுதாயம்
3. அமுதக் கலசம்
4. மச்சகந்தி (காவியம்)

—

மகளே கேள் (கடித முறை)

# நேசங் கிளர்த்தல் - வாழ்த்து!

வடக்கெல்லை தனைமீட்க வழிவகுத்த மேதை
வடுகரிடம் அகப்பட்டு வதைப்பட்ட தியாகி
திடமனத்தான் வடக்கெல்லைத் தமிழர்களின் இதயத்
தெய்வமென வாழுகின்ற தமிழாய்ந்த நெஞ்சன்

உடனுழைத்தோர் தனையேத்துப் பொருட்புகழைத் தேடா
உத்தமன்காண் மங்கலங்கி ழாரென்னும் சான்றோன்
தொடக்கமுதல் வடக்கெல்லை மீட்புக்காய் உழைத்த
தூயனவன் பெயர்போற்றும் தோழருக்கென் வாழ்த்தாம்!

தமிழகத்தின் எல்லைப்போர் தன்னின்விடி வெள்ளி!
தலைநகரைக் காக்கும்போர் தன்னிலவன் நிலவு!
தமிழ்நாடு பெயர்ப்போரில் கிளர்ந்தெழுந்த பரிதி!
தனக்கென்று வாழாத தன்மான இமயம்!

தமிழ்நாட்டின் ஆட்சிமொழி பயிற்சிமொழிப் போர்கள்
தன்னிலெல்லாம் சிறைபுகுந்து தவமிருந்த சிங்கம்!
தமிழினத்தார் உரிமைதனைக் காக்கும்படை மறவன்
தணிகைக்கோ ரஷீதிருக்க இன்னும்நூ றாண்டே!

கவி கா.மு. ஷெரீப்

★

# தமிழகத்தில் ஓர் டெமாஸ்தனிஸ்



த. நாகராசன், பி.எஸ்சி,.
(உதவி ஆணையர் / நிருவாக அதிகாரி.)

அரிய பண்பு
ஆழ்ந்த புலமை
இனிய நட்பு
ஈடு இணையற்ற தமிழ்ப்பற்று

இவற்றின் ஒட்டு மொத்தம்தான் அறிஞர் ரஷீத் அவர்கள்.
அறநெறி பிறழாத அப்பழுக்கற்ற அரசியல்வாதி.
தேசியம் — தெய்வீகம் இரண்டையும் இரண்டு கண்களாகக் கொண்டவர்.
புண்படா மனமும் புரைபடா ஒழுக்கமும் கொண்டவர்
பிறர் மனத்தைப் புண்படுத்தாதவர்
பழியஞ்சும் பண்பாளர்
அரசியலில் ஆதாயம் தேடும் அதிசய உலகில் ஓர் அற்புத மனிதர்.

"You cannot adopt politics as profession
and remain honest"

என்றுர் அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டின் செயலர் "ஹோவே" என்பவர். "அரசியலைத் தொழிலாகக் கொண்டவர் அப்பழுக்கற்றவராக இருத்தல் அரிது" என்ற ஹோவே கூற்றைப் பொய்ப்பித்தவர். நாட்டுப்பணியை வீட்டுப் பணியாக ஆக்க விழையாத ஓர் நல்ல மனிதர்.

எறும்பைப் போல துருதுருவென்றிருப்பவர். வண்டினம் போலச் சுறுசுறுப்பாக இருப்பவர். எண்டிசையும் போற்ற இணையிலாப் பணிகளைச் செய்தவர், தொண்டினை மூச்சாகக் கொண்டவர்.

இஸ்லாமிய உலகம், இலக்கிய உலகம், சமய உலகம் ஆகிய மூன்று உலகுக்கும் ஓர் பாலமாக அமைந்தவர். தமிழின்பால் தளராக் காதல் உடையவர்; தமிழ்நாட்டின் -பால் மாருத பற்றுடையவர். எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தீந்தமிழ்க்கடவுள் திருத்தணி முருகனை மீட்டுத் தமிழ் நாட்டுக்குத் தந்த தளபதி.

# தணிகை தந்த செல்வம்

**கே. சி. எஸ். அருணாசலம்,**
8/12, எல். ஐ. சி ஊழியர் குடியிருப்பு,
பத்ரோல் சாலை, கே. கே. நகர், சென்னை-78.

1. செந்தமிழில் தோய்ந்த நெஞ்சம்,
சிரித்தமுகத் தோற்றம், வாழ்வில்
சந்ததமும் உழைக்கும் ஆற்றல்,
சலிப்பறி யாத போக்கு.
பந்தெனவே நிலையற் றோடிப்
படாத பாடு பட்டும்
சிந்தையது தளரா வீரத்
திருமகள் உலவும் தோள்கள்!

2. தமிழக எல்லை காக்கும்
சமர்க்களம் தன்னில் புக்கு
குமுறுமெரி மலையே யாகி
கொள்கைவழி நிமிர்ந்து நின்றான்!
சமயநெறி பிறழாச் சீர்மை,
சமதர்ம நாட்டம், இங்கே
இமயமுதல் குமரி யெல்லாம்
எனது நாடென்னும் கொள்கை!

3. பணிவுடையான் ஆனால் என்றும்
பணத்துக்குப் பணிய மாட்டான்
அணித்தாக நின்று நாளும்
அன்புக்குத் தொண்டு செய்வான்
துணிவுள்ள சிங்கம், என்றும்
சூதுவா தறியா உள்ளம்
"தணிகைக்கோ" எங்கள் ரஷீத்
தகைமைசால் தோழன் வாழ்க!

# ஆசிரியர் மங்கலங்கிழாரும் வடக்கெல்லையும்

தி. மு. திருமலைப் பிள்ளை,
திருஆலங்காடு.

வடஆற்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டம் புளியமங்கலம் என்னும் சிற்றூரின் கிராமாதிகாரியாகத் திருவாளர் குப்புசாமிமுதலியார் அவர்கள் பணிஆற்றி வந்தார்கள். இவர் திரு. வி. க. அவர்களிடம் சிறந்த நட்பு பூண்டவர். கப்பலோட்டிய தமிழர் திரு. வ. உ. சி அவர்களிடம் தமிழ்ப் பாடம் பயின்றவர். இவர் தமிழ் ஆர்வமுடையவர். இவர் தூய உள்ளமும், பற்றற்ற மனப்பாங்கும் உடையவர். இவர் பாரதியைப்போல பஞ்சகச்சம் அணிந்து, மேல் கோட்டோடு தலைப்பாகை அணிந்திருப்பார். இவர் அடிக்கடி அரக்கோணம் வருகை புரிவது உண்டு. 1930 முதல் 1933 வரை நான் அரக்கோணம் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயிலுங்காலையில் இளைஞனாயினும் அவரோடு கலந்து பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். இவர் அன்பு, அடக்கம், பெருந்தன்மை போன்ற அரும் பண்புகளைப் பெற்றுத் திகழ்ந்தார்.

இவர் தம் பணியை இராஜினாமா செய்தார். பின் மனைவி மக்களை விட்டு சித்தூர் மாவட்டத்தில் தெலுங்கர் ஆதிக்கத்தில் உள்ள, முழுவதும் தமிழர்களே வாழும் பகுதிகளான திருத்தணி, பள்ளிப்பட்டு, வங்கனூர், அம்மையார்குப்பம், அத்திமாஞ்சேரிப்பேட்டை, பொதட்டூர், இரா. கி. பேட்டை, ஏகாம்பரகுப்பம், நகரி, புத்தூர், புதுப்பேட்டை ஆகிய இடங்களில் தமிழ்ப் படிக்க ஆர்வமிருந்தும் படிக்க இயலாத மாணவர்களின் குறையைப் போக்க ஆங்காங்கு தமிழ்ப் பள்ளிகளை நிறுவி வழக்கறிஞர் திரு. அரங்கநாத முதலியாரின் ஒத்துழைப்போடு அரசின் சலுகைகளைப் பெற்றுப் பல தமிழ் மாணவர்கள் ஆசிரியர்களாகவும், புலவர்களாகவும் தேர்ச்சிபெற அரும்பாடு பட்டார். அவரை அப்போது யாரும் குப்புசாமி முதலியார் என்று அழைப்பது கிடையாது. ஆசிரியர் ''மங்கலங்கிழார்'' என்றே அழைப்பர். இந்நிலையில் அவர் உடையிலும் மாற்றம் ஏற்பட்டது. கீழ்ப்பாய்ச்சி கட்டிக்கொண்டு கதர் ஜிப்பா அணிந்து கதர் துப்பாட்டாவோடு ஆந்திர கேசரி-பிரகாசம் பந்துலு போல காட்சி அளிப்பார். கைம்மாறு கருதாது தாய்மொழி வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அரும் பாடுபட்டார்.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் நம் நாடு விடுதலை அடைந்து விழா கோலாகலமாக பட்டி தொட்டிகளிலெல்லாம் கொண்டாடப்பட்டது. மறுநாள் 1947 ஆகஸ்டு 16ஆம் நாள் பல தமிழ்மாணவர்கள் புடைசூழ தமிழக மேலவைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்களையும், அரங்கநாத முதலியார் அவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு திரு. மங்கலங்கிழார் அவர்கள் திருஆலங்காட்டிற்கு வருகை புரிந்தனர். அடியேனும், மற்றும் சில நண்பர்களும் சேர்ந்து அன்னாரை வரவேற்று, மாலை பொதுக்கூட்டம் நடத்தினோம்.

நாடு சுதந்திரம் அடைந்துவிட்டமையால், நாடு மொழி வழியில் மாநிலங்களாக பிரிக்கப்பட உள்ளது. அப்போது இப்பகுதி திருப்பதி வரையில் ஆந்திரத்தோடு இல்லாமல் தமிழகத்தோடு இணைய வேண்டும், அதற்கு ஆவன செய்ய வேண்டுமென

வற்புறுத்தி பேசப்பட்டது. மறுநாள் கனகம்மாசத்திரம் சென்று திரு. துரைசாமி ரெட்டியாரால் உபசரிக்கப்பட்டு மாலை திருத்தணிகைக்குச் சென்று பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. மிக்க ஆர்வத்தோடு திரு. கோல்டன் சுப்பிரமணியம் அவர்கள் சகல ஏற்பாடுகளையும் செய்தார். சில ஆந்திர நண்பர்கள் கூட்டத்திற்கு இடையூறு செய்ய முற்பட்டபோது அன்று அங்கு வந்திருந்த திரு. K. விநாயகம் அவர்கள் முன்னின்று கூட்டத்தைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தது மட்டுமல்லாமல் அவரும் நண்பர் சுப்பிரமணியமும் முழுக்க முழுக்க தம்மை இப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

பின்னர் நகரி, புத்தூர், திருப்பதிவரை சென்று கூட்டங்கள் நடத்தப்பட்டன. பிறகு ம. பொ. சி., மங்கலங்கிழார், விநாயகம், அரங்கநாத முதலியார், கோல்டன் சுப்பிரமணியம், சடகோபாச்சாரி, சரவணய்யா, கண்ணப்ப முதலியார், சபாபதி தேசிகர் ஆகியோருடன் அடியேனும் சேர்ந்து திருத்தணியில் தமிழ் வளர்ச்சிக் கழகம் அமைத்துப் பல கூட்டங்கள் கூட்டியும், மாநாடுகள் நடத்தியும் தீர்மானங்கள் இயற்றியும் இப்பகுதி தமிழகத்தோடு இணைய ஆவன செய்ய வேண்டுமென அரசை கேட்டுக்கொண்டோம்.

பல ஆண்டுகள் விடா முயற்சிக்குப் பின்னும் அரசு செவி சாய்க்காமையால் "நேரடி நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டம் தீட்ட கீழ்க்கண்டவர்களைக் கொண்ட" வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது. திரு. ம. பொ. சி. அவர்கள் தலைவராகவும், திரு. K. விநாயகம் அவர்கள் தளபதியாகவும் மங்கலங்கிழார், E. S. தியாகராசன், கோல்டன் சுப்பிரமணியம், சரவண கண்ணப்ப முதலியார், N. A. ரஷீத் ஆகியோருடன் அடியேனும் மற்றும் பலரும் இடம் பெற்றிருந்தோம்.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் 1953-ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னையில் நடக்கஏற்பாடு செய்திருந்தபோது திருத்தணியில் கோல்டன் சுப்ரமணியம் N.A. ரஷீத், கோவிந்தசாமி மற்றும் சில தீவிரவாதிகள் ஒன்றுகூடி நூற்றுக்கணக்கானவர்களுடன் சேர்ந்து "பம்பாய்'எக்ஸ்பிரஸை" நிறுத்தி மறியல் செய்தார்கள். அன்று மாலை தெலுங்கில் ஒலிபரப்பிக்கொண்டிருந்த வானொலியை அகற்ற முயன்றபோது போலீஸ் தடியடி நடத்தி 144 தடை போடப்பட்டது. மறுநாள் 20—6—53 கோல்டன் சுப்பிரமணியம், N. A. ரஷீத், கோவிந்தசாமி உள்பட நவவீரர்கள் தடையை மீறி இரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தி திருப்பதி சிறையில் அடைக்கப்பட்டனர். 21—6—53-ஆம் தேதி மீண்டும் தடையை மீறி அடியேனும் மற்றும் சிலரும் கைது செய்யப்பட்டோம். 22—6—53-ஆம் தேதி ஆசிரியர் மங்கலங்கிழாருடன் வானம்பாடி, முருகன், குப்புசாமி முதலியார் ஆகியோர் தடையை மீறி சிறை சென்றனர். திருஆலங்காடு இரயில் நிலையத்திலும் "ஜனதா எக்ஸ்பிரஸை" நிறுத்தியதால் பலர் சிறை சென்றனர். அதேபோல் E. S. தியாகராசன், சரவண கண்ணப்ப முதலியார், துரைசாமி முதலியார், வங்கனூர் மணி, நரசிம்ம முதலியார், இரா. கி. பேட்டை கோவிந்தசாமி, பாலகிருஷ்ணரெட்டி, அத்திமாஞ்சேரிப்பேட்டை முத்துவேல், சித்தூர் சீனுவாச முதலியார், சுப்பிரமணியம், புத்தூர் முத்துவேல் முதலியார் மற்றும் பலர் பல இடங்களில் தடை மீறி சிறை சென்றனர்.

இறுதியில் ஜூலை 4-ஆம் நாள் ம.பொ. சியும் வெங்கடேச முதலியாரும் தடையை மீறியதால் கைது செய்யப்பட்டனர். அப்போது தமிழக முதல்வர் இராஜாஜி அவர்கள் தலையிட்டால் பாரதப் பிரதமர் நேருஜி அவர்கள் எல்லைக்கமிஷன் அமைப்பதாக

அறிவித்ததனுல் போராட்டம் நிறுத்தப்பட்டு சிறைசென்றவர் விடுதலை செய்யப்பட்டனர். பின்னும் சில மாதங்கள் வரை கமிஷன் அமைக்காததால் 1953 செப்டம்பரில் தலைவர் ம. பொ. சி,, K. விநாயகம், E. S. தியாகராாசன், கோல்டன் சுப்பிரமணியம், மௌலானு, நரசிம்மம் உள்பட அடியேனுமாக 12பேர் டெல்லிக்குச் சென்று பாரதப் பிரதமரை பேட்டி கண்டோம். உடனடியாக எல்லைக் கமிஷன் அமைப்பதாக வாக்குறுதி அளித்தார். பொதட்டூர்பேட்டையில் சில பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டு உடல் நலம் குன்றி எங்களுடன் டெல்லிக்கு வரஇயலாமல் நின்றுவிட்டிருந்த ஆசிரியர் மங்கலங்கிழார் காலமானதாகத் தெரிந்து உடனடியாக டெல்லியிலிருந்து திரும்பினோம்.

எல்லைப் போராட்டம் இனிதே நிறைவேறி 1960 ஏப்ரலில் திருத்தணி வட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. தமிழ் மொழி தழைக்க, தமிழர் நலம் வாழ என்றும் தமிழுக்காகவே குடும்பநலனைத் துறந்து ஆந்திரர் ஆதிகத்திலிருந்த தமிழர்கள் பகுதிகளில் தளராமல் சேவை செய்து தமிழ் ஆசான்களையும், அறிஞர்களையும் உருவாக்கித் தந்து தன் கடைசி மூச்சுவரை: தமிழர் நலனே தம் மூச்சாகக்கொண்டு அருந்தொண்டாற்றியது மட்டுமல்லாமல் அப்பகுதிகள் தமிழகத்தோடு இணைய டாக்டர் ம. பொ. சி., தளபதி விநாயகம் மற்றும் பலரையும் அதில் ஈடுபடச்செய்து வெற்றி வாகை சூடிய ஆசிரியர் மங்கலங்கிழார் அவர்களின் ஆன்மா சாந்தி அடையவும் அன்னரின் புகழ் ஓங்கவும்அவர் தம் குடும்பம் பல்வளம் பெற்றுச் சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

## வடக்கெல்லையும் திரு. N. A. ரஷீதும்

அத்துடன் ஆசிரியர் மங்கலங்கிழார் தொண்டைச் சிறப்பிக்க தணிகையில் அன்னர் பெயரில் மன்றம் துவக்கி அன்று முதல் இன்றுவரை அதன் தலைமைப் பொறுப்பேற்று சுமார் 10 வருடகாலமாக அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டுவரும், திரு. N. A. ரஷீத் அவர்கள் தமிழக வடகெல்லைப் போரில் ஈடுபட்டு ஆற்றிய தொண்டு சிறப்பு மிக்கதாகும். அவருக்குப் பொதுத் தொண்டுதான் பொழுதுபோக்கு. அவர் எடுக்கும் காரியத்தைச் சீராகவும் செம்மையாகவும் செய்து முடிக்கும் செயல் வீரர். அவருக்குத் தெரியாத அரசியல்வாதிகளோ அன்றி அறிஞர்களோ தமிழகத்தில் இருக்கமாட்டார்கள் என எண்ணுகிறேன். அன்னர் எல்லோரிடமும் இன்முகம்காட்டி அன்போடு பேசும் இயல்பினர். பிறருடைய தேவைகளைக் குறிப்பாலுணர்ந்து தாமே முன்வந்து உதவி செய்யும் இயல்புடையார். வடக்கெல்லைப் போரில் அவரின்றி கூட்டமோ, நாடகமோ, போராட்டமோ, மாநாடோ கிடையாது. அவர் அப்படி எல்லா வகையிலும் ஈடுபாட்டுடன் செயல்படும் நண்பர் ரஷீத் அவர்கள் ஐம்பத்தாறும் ஆண்டு நிறைவுவிழாக் காணும் பெருந்தகையாவார். அன்னர் இன்னும் பல நூறு ஆண்டுகள் உடல் நலத்தோடும் செல்வ வளத்தோடும் நீடுழி வாழவேணுமாயும்அவர் தம் வழித்தோன்றல்கள் சீரும் சிறப்புமாய் செழித்தோங்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

**தி. மு. திருமலைப் பிள்ளை,**

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு தளபதி,

திருஆலங்காடு.

14


உங்களின் சேமிப்புக்கள் மூலம் உங்கள்
எதிர்காலத்தை உத்திரவாதம் செய்யும் ஒரே நிறுவனம்



# பியர்லெஸ் பைனான்ஸ்
# &
# இன்வெஸ்ட்மெண்ட்
# பிரைவேட் லிமிடெட்

**ஏஜெண்டாக** **பாலிசிதாரராக**

**அணுகவும்**

**M. S. பாரதிநாயகம்,**
பீல்டு ஆபீசர்,
அம்மையார்குப்பம்.

**T எமரோஸ்,**
சப்-ஆர்கனைசர்,
அனகாபுத்தூர்.



மங்கலங்கிழார் மன்றத்திற்கும், தணிகைக்கோ அவர்களுக்கும்
எங்களது நெஞ்சார்ந்த வணக்கங்கள்

# உலகத் தொழிலாளர்களே
# ஒன்றுபடுங்கள்!



## சென்னை-செங்கை மாவட்ட
## கைத்தறித் தொழிலாளர் சங்கம் C. I. T. U.

**அம்மையார்குப்பம் கிளை.**



# ஆசிரியரும் நானும்

**கோல்டன் ந. சுப்பிரமணியம்,**
தமிழ்நாடு வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழுச் செயலாளர்,
முன்னாள் நகர பஞ்சாயத்து தலைவர், திருத்தணி.

இப்பகுதி மக்களாகிய நாங்கள் ''வடக்கெல்லை தந்தையென''ப் போற்றி வணங்கும் ஆசிரியர் மங்கலங்கிழார் அவர்கள் இந்தப் பகுதியில் திருத்தணி, புத்தூர் தாலுக்காக்களில் அறநெறி தமிழ்ச் சங்கம் என்ற பெயரால் சங்கத்தை நிறுவி தமிழையே மறந்திருந்த இந்தப் பகுதி மக்களுக்குத் தமிழின்பால் பற்று உண்டாக்கி, தமிழை தானே அவர்களுக்குக் கற்பித்து அவர்களைப் புலவர்களாக மாற்றிக் கண்ட பெருமை ஆசிரியர் மங்கலங்கிழார் ஒருவரையே சாரும். இந்த அறநெறி தமிழ்ச் சங்கங்கள் புத்தூர் நாராயணவனம், சிந்தலப்பட்டடை, புதுப்பேட்டை, அம்மையார்குப்பம், மத்தூர் குருவாராஜிபேட்டை, வளர்புரம் இவற்றன்றி சில இடங்களில், சித்தூர் வழக்கறிஞரும் அவரது நண்பருமான எஸ். ரங்கநாத முதலியார் பி.ஏ., பி.எல். அவர்கள் உதவியுடன் சில மேனேஜ்மெண்ட் பள்ளிகளை நடத்திய பெருமையும் அவர்களுக்கு உண்டு.

ஆசிரியர் மங்கலங்கிழார்தான் தலைவர் ம. பொ. சி. அவர்களை இந்தப் பகுதிக்கு முதன் முதலில் 1947 ஆகஸ்டு 16-ஆம் தேதி அவர்களது குழுவுடன் அழைத்துக்கொண்டு திருஆலங்காடு, திருத்தணி முதல் புத்தூர், திருப்பதிவரை சென்று மேற்படி பகுதிகளைத் தமிழ் மாநிலத்தில் சேர வலியுறுத்திய பெருமை ஆசிரியரையே சாரும், அவர்கள் மிக எளிமையான வாழ்க்கையைக் கொண்டவர். மேலே கண்ட சுற்றுப்பிரயாணம் வந்து சென்ற பிறகு நகரத்தில் உள்ள மக்களோடு நான் தொடர்பு கொண்டு திருத்தணியில் 'தமிழ்வளர்ச்சிக் கழகம்' ஒன்றைநிறுவி அதைத் திறந்துவைக்க அவர்களை அழைத்தேன். அவர்களோடு சித்தூர் வழக்கறிஞர் திரு. எஸ். ரங்கநாத முதலியார் அவர்களும் வடக்கெல்லைத் தளபதி திரு. கே. விநாயகம் அவர்களும், திருஆலங்காடு சபாபதி தேசிகர் அவர்களும் வந்திருந்து சொற்பொழிவு ஆற்றி விழாவைத் துவக்கிவைத்தார்கள். இந்தச் சங்கத்தில் திருத்தணி மக்களும், தாலுக்காவைச் சேர்ந்த தமிழ் மக்களும் பங்கு பெற்றனர் இச்சங்கத்தின் தலைவராக விநாயகமும், செயலாளராக சபாபதி தேசிகரும் ஆசிரியர் மங்கலங்கிழார் உள்பட நாங்கள் அனைவரும் அதன் உறுப்பினர்களாகவும் செயல்பட்டோம். இச்சங்கம், திருத்தணி வன்னியர் சத்திரத்தில் தொடங்கி தொடர்ந்து கூட்டங்களை நடத்தியது. இச்சங்கத்தின் நோக்கம் தமிழ் மாநிலம் அமையும்போது சித்தூர் மாவட்டம் தமிழ்ப் பகுதிகள் வேங்கடம் உள்பட தமிழகத்தில் சேர்ப்பது. அரசு பள்ளிகளில் தமிழை

கற்பிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவது, தமிழ் மக்களிடையே தமிழ்இலக்கியப் பற்றை வளர்க்க மாதம் ஒரு இலக்கியச் சொற்பொழிவு நடத்துவது ஆகும். இதிலிருந்துதான் எனக்கும் ஆசிரியருக்கும் தொடர்பு துவங்கியது.

இந்தச் சங்கத்தின் தலைவர் விநாயகமாக இருந்தாலும் பொறுப்பு, ஆசிரியர் மங்கலங்கிழாருக்கும், எனக்கும்தான் இருந்து வந்தது. அவர்கள் சொற்பொழிவுக்குத் தேவையான ஆட்களை அழைப்பார் அதை நடத்துவதற்கு ஆன ஏற்பாடுகளை நான் முன்னின்று செய்வேன். இதனால்தான் எங்களிடையே குரு, சிஷ்ய உறவு முறை வளர்ந்-தது. ஆரம்ப காலத்தில் ஒரு சில இளைஞர்கள் தவிர மற்றவர்கள் என்னுடன் சரியாக ஒத்துழைக்கவில்லை. அவர்களுக்கு எழுத வேண்டிய கடிதங்கள் கூட நானே எழுதுவேன். எனக்கே தமிழ் தெரியாது. எழுதிவிட்டு பிழை இருந்தால் மன்னியுங்கள் என்று எழுதுவேன். ஒவ்வொரு மாதமும் தவறாமல் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் எஸ். ரங்கநாத முதலியார், சபாபதி தேசிகர், திருமலைப்பிள்ளை, சரவண கண்ணப்பா, பி. கண்ணப்பா, வி. கே. சடகோபால ஆச்சாரியார், T. சரவண ஐயர். டி. சுப்பிரமணிய ரெட்டியார், ஜகதீச முதலியார், ஆர். எஸ். ராமசாமி ரெட்டியார் கே. சி. ராமசாமி ரெட்டியார் ஆகியோர் ஆவர். மற்றும் பலர் கலந்து கொள்வார்கள். தலைவர் விநாயகமும் தவறாமல் கலந்துகொள்வார். இப்படி எங்கள் பணி நடந்து வந்தது. இதனால் இப்பகுதிவாழ் தமிழர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. 1949லேயே ஆந்திரர்களின் கோரிக்கைக்கு ஏற்ப ஆந்திரப் பிரிவினைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அப்போது தலைவர் ம. பொ. சி. முயற்சியால் சென்னையில் நேரு விளையாட்டு மைதானத்தில் தமிழர் மாநாடு ஒன்றைக் கூட்டினார்கள். முன்னாள் மத்திய நிதி அமைச்சர் திரு. ஆர்.கே. சண்முகஞ் செட்டியார் தலைமைதாங்க திரு. வி. கல்யாண சுந்தரனார், ம. பொ. சி., இவர்கள் சென்னை நகரத்தை ஆந்திரர்களுக்குக் கொடுக்க முடியாது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிப் பேசினர். வடக்கெல்லைத் தமிழர்கள் சார்பில் ஆசிரியர் மங்கலங்கிழார் பேசினார். உடன் நானும் சென்றிருந்தேன். ஆசிரியர் நம் பகுதி மக்களின் நிலைமையை அடக்கத்துடன் தெளிவாக எடுத்துச் சொன்னார். அதனைப் பின்பற்றி, தமிழ்த் தென்றல் திரு. வி. க. விரிவாகப் பேசினார். ஆம்! மங்கலங்கிழாரின் நண்பரல்லவா அவர்.

அன்று மறுநாளே என்னை அழைத்துக்கொண்டுபோய் திரு. வி. க. விடம்அறிமுகப் படுத்தி "இந்தத் தம்பி தமிழ் நாட்டில் அப்பகுதி சேரவேண்டும் என்ற ஆர்வம் உடையவர்'' என்றும் "நான் இவரை நந்தி" என்றுதான் அழைப்பேன். என்றும் கூறினார். அவரை நான் பார்க்கும் வாய்ப்புகள்தான் கிடைத்தது. ஆனால் அவர் என்னைப் பார்க்கமுடியாது. இவரா அந்தக் கூட்டத்தில் சித்தூர் தமிழர்களைப்பற்றி அவ்வாறு பேசினார் என்றுஎண்ணி வியந்தேன். அப்போதுதான் ஆசிரியர் என்னிடம் சிலவார்த்தைகளைக் கூறினார். இவர்தான் என்னை உங்கள் பகுதிக்குச் சென்று தமிழை வளருங்கள். அவர்கள் தமிழை மறந்திருக்கிறார்கள். அவர்களை விழிப்புறச் செய்யுங்கள். என்று என்னை இங்கு போய் இப்பணியினைச் செய் என்று கூறினார். ஆசிரியரால் தமிழ்த் தென்றல் அவர்களைப் பார்க்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெரு மகிழ்ச்சிஅடைகிறேன். அதன்பிறகு திருத்தணியில் தமிழ் மாநாடு நடைபெற்றது. அதில் ம. பொ. சி., பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஆசிரியர், விநாயகம் போன்றவர்கள் பேசினார்கள். அதில் வரவேற்புரையாளராக வி. கே. சடகோபால ஆச்சாரியார் இருந்தார். விழா வெற்றியடைய நானும் தணிகை இளைஞர்களும் பெரிதும் உதவினோம். விழாவை வெற்றியடையச் செய்ததில் ஆசிரியருக்குப் பெரு மகிழ்ச்சி.

இதுபோலவே நாராயணவனத்தில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். மங்கலங்கிழார் அதிலும் மீனாட்சிசுந்தரனாரும், ம.பொ.சி.யும் கலந்துகொண்டனர். அங்குள்ள தெலுங்கர்கள் கலகம் செய்தபோதும் ஆசிரியர் அவர்கள் வெற்றிகரமாக விழாவை நடத்தி முடித்தார். மாதந்தோறும் நடத்திக்கொண்டுவந்த கூட்டங்களில் ஒருமாதம், இந்தப் பணியிலே நான் ஈடுபடுவதை விரும்பாத என் தந்தையோடு கோபித்துகொண்டு இந்த ஊரில் உள்ள என் தாய்மாமன் வீட்டில் இருந்தேன். ஒருநாள் தணிகைக்கு வந்தவர் என்னைக் காணாமல் என்வீட்டிற்குப் போய் விசாரித்திருக்கிறார். அவர் உடனே என்தங்கை விஜயலட்சுமியை அழைத்துக்கொண்டு என் மாமன் வீட்டிற்கே வந்து விட்டார். நான் இந்த மாதத்திற்கு சொற்பொழிவு, செய்ய ஏற்பாடு செய்து விட்டேன். அதற்கான ஏற்பாடுகளை நீ செய்யவேண்டும். எப்படிச் செய்யலாம் என்று நினைக்கிறாய் என்று கேட்டார். அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். இங்குள்ள பஜனைகோயிலிலேயே கூட்டம் நடைபெறும். அதுவும் இராமாயணத்தில் ஒரு பகுதி என்று சொல்கிறீர்கள். ஆகவே இங்கேயே நடத்திமுடிக்க ஏற்பாடு செய்கிறேன் எனச் சொல்லி அங்கேயே நடத்தி முடித்தேன் இந்தச் சங்கமும் தமிழர் என்ற குரலும் எதிரொலிக்க தெலுங்கர்கள் தமிழை அழிக்க முற்பட்டார்கள். சித்தூர் ஜில்லா போர்டு தலைவராக ஒரு தெலுங்கர் செங்கல்ராய நாயுடு 1950-ஆம் ஆண்டு வெற்றி பெற்றார். அவர் ஜில்லாபோர்டு பள்ளிகள் அனைத்திலும் 6ஆம் வகுப்பு முதல் தமிழ் கற்பிக்கக்கூடாது என்று உத்தரவைப்போட்டார். அதை எதிர்த்து ஆசிரியர் மங்கலங்கிழாரும் அவர் நண்பர் சித்தூர் எஸ். ரங்கநாத முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்களும் சென்னை மாநிலத்தின் அன்றைய இயக்குநரான அமிர்த கணேசன் அவர்களையும், கல்வி அமைச்சர் திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களையமண்டி இந்தஉத்தரவை ரத்து செய்து தமிழைக் கற்பிக்க எந்தத் தடையும் வராமல் செய்த பெருமை ஆசிரியரையே சாரும். அவர்கள் 1953ஆம் ஆண்டு நடந்த வடக்கெல்லைப் போராட்டத்தில் சிறை தண்டனை பெற்று திருப்பதியில் இருந்தார். நானும் நண்பர் ரஷீத், முனுசாமி ஆகியோர் அங்கு முன்பே சிறை வைக்கப்பட்டிருந்தோம். இதுதான் அவர் போராட்ட வாழ்க்கையின் முதலும் கடைசியுமான சிறைவாசம். அவர்கள் மிகவும் எளிமையானவர். காந்தியத்தில் பற்றுடையவர். அவர்கள் கூட்டங்களில் மற்றவர் மனம் புண்படாத வகையில் தன்கருத்தை எடுத்துக் கூறும் ஆற்றல் பெற்றவர். அவர் ஒரு தன்னலம் அற்ற தொண்டர். வாழ்க்கையில் அவருக்குப் பல சங்கடங்கள் இருந்த போதிலும் அதை அவர் முகத்தில்கூட காணமுடியாது. அவர் தணிகைக்கு வரும் போது அவரை அன்புடன் விசாரித்து அனுப்புவதிலே எனக்கு ஒரு தனிமகிழ்ச்சி. அவருக்குப் பல தமிழ்ப் பெரியார்கள் நண்பர்களாக இருந்திருக்கிறார்கள். தமிழ்த் தென்றல் உட்பட அவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையிடம் திருக்குறள் பாடம் கேட்ட தாகவும் கூறியுள்ளார். இந்தப் போராட்டத்தில் ஆசிரியர் அவர்களால் கவரப்பட்ட வர்களில் தலைவர் ம. பொ. சி. யிடம் அவருக்குத் தனி பக்தியுண்டு. கே. விநாயகம், எஸ். ரங்கநாதமுதலியார், கோல்டன் என். சுப்பிரமணியம், ஈ.எஸ். தியாகராஜ முதலியார், ஈ. எஸ். சுப்பிரமணிய முதலியார், பி. கண்ணப்ப முதலியார், சபாபதி தேசிகர், டி.எம். திருமலைப்பிள்ளை, சரவணய்யர், வி.கே. சடகோபாலாச்சாரி, அம்மையார்குப்பம் சரவண கண்ணப்பா, புத்தூர் முத்துவேல் முதலியார், ஏ. முனுசாமி, என். எ. ரஷீத், புதுப்பேட்டை வி. கே. வரதப்ப முதலியாரும் மற்றும் பலரும் ஆவர்.

போராட்டம் முடிந்தவுடன் என்னை அழைத்து அவர் நான் உனக்குத் தமிழைக் கற்பிக்கிறேன். மாதம் இருமுறை வருகிறேன். அதற்கான ஏற்பாடுகளை நீ செய்து கொள் என்றார். நீ டெல்லிக்குப் போய் வந்துவிடு என்றும் தான் பொதட்டூர் தமிழ்

ஆசிரியர்பள்ளி வேலையையும் முடித்துவிடுகிறேன் என்றார். ஆனால் விதி வேறுவிதமாக முடிந்துவிட்டது. நாங்கள் டெல்லியில் விநாயகம் தலைமையில் நேரு அவர்களைச் சந்தித்து எல்லைக் கமிஷனை வற்புறுத்திவிட்டு நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்தோம். எங்களுக்கு அதிர்ச்சி தரும் தந்தி ஒன்று கிடைத்தது. அதில் வந்த மங்கலங்கிழாரின் மரணச் செய்தி கண்டு நாங்கள் அழுது புரளத்தான் முடிந்தது. எங்களுக்குள்ளே ஆறுதல் அடைந்து அன்று மாலையே சென்னையை நோக்கிப் புறப்பட்டோம். இறுதி மரியாதையில் கலந்துகொள்ளமுடியவில்லை. இறுதி வணக்கத்தைத்தான் எங்களால் தெரிவிக்க முடிந்தது. சென்னையில் இருந்து நேராக ஆசிரியர் பிறந்து வளர்ந்து ஆளான அரக்கோணம் அருகில் உள்ள புளியமங்கலத்திற்குச் சென்றோம். அவரது குடும்பத்தோடு எங்கள் துக்கத்தைப் பரிமாறிக்கொண்டோம். அவர் எடுத்த காரியத்தில் வெற்றியைக் கண்டுவிட்டுத்தான் மறைந்தார். அவர் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் போராடினோம். அதன் விளைவு 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அவரது கனவு நினைவாகியது. ஆம்! அவர் திருப்பதி வரை வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அதிலேயும் ஓரளவு குறைவாகவே நமக்கு கிடைத்தது. இந்தப் பெருமை ஆசிரியரையே சாரும். அதை நினைவு கூறும்வகையில் 1960ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் அன்னாரின் உருவச் சிலையொன்றை ஊராட்சி மன்றத்தில் நான் மன்றத் தலைவனாக இருந்தபோது வைக்கக் கிடைத்த வாய்ப்பை எண்ணிப் பெருமைப்படுகிறேன். அவரது பெயரால் கடந்த பத்து ஆண்டுகளாக இலக்கிய மன்றத்தினை நடத்தி மக்களிடம் தமிழ் இலக்கியப் பற்றினை வளர்த்துவரும் மன்றத்தாருக்கும், எனது நண்பரும் இந்தப் போராட்டத்தில் என்னுடன் இணைந்து செயல்பட்டவரும் திருப்பதி, சென்னை, ராஜமந்திரி சிறைகளில் இணைந்துஇருந்து இந்த போராட்டத்தின் இறுதிவரை அயராது உழைத்துத் தனக்கென வாழாதவருமான ந. அ. ரஷீத் அவர்களுக்கும் பொறுப்பை ஏற்று நடத்தி வரும் ந. அ. மாலிக், எம்.ஏ., அவர்களுக்கும் என் நன்றி.

இப்பணி மேலும் மேலும் தொடர்ந்து வளர எனது நல்வாழ்த்துக்கள்!




# S. K. ARTS

Painting Contractor &
Specialist in Sign Boards,

**No. 4, Panagal Street,**
**TIRUVALLORE.**

Prop: K. S. KOTEESWARA RAO, B.Sc.,

# விடுதலைப் பேரொளி

புலவர் குமர. சு. முனுசாமி,
குருவராயப்பேட்டை.

அமெரிக்க விடுதலைக்கு ஒரு ஆபிரகாம் லிங்கன்; சீனவிடுதலைக்கு ஒரு சன்யாட்சன்; இந்திய விடுதலைக்கு ஒரு மகாத்மாகாந்தி தோன்றி அவ்வந்நாட்டு விடுதலையை மக்கட்கு வாங்கித்தந்தார்கள். அதுபோல் ஆசிரியர் மங்கலங்கிழாரும் தன் உயிரைப் பணயம் வைத்து அயராத உழைப்பால் தமிழ்நாட்டிற்கு வடக்கெல்லையை மீட்டுத் தந்தார்கள். தொண்டு செய்வதைத் தம் கடமையாகக் கொண்டவர். நேரும் பிழையினைத் தனதெனவும், கிடைத்திடும் புகழைப் பலர்க்கும் அளித்து மகிழும் இயல்பு வாய்ந்தவர் அவர்.

ஒருவிளக்கு பல விளக்குகளை ஏற்றி வைத்துத் தானும் பேரொளிவிட்டுப் பிரகாசிப்பதைப் போலப் பேரறிஞர்கள் தம் அறிவினால் பலரை அறிஞர்களாக்கித் தாமும் தம் அறிவால் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறார்கள். எண்ணெய் மட்டும் நிரம்பி திரி சீராக அமையாவிட்டால் விளக்கு நன்றாக எரியாது. சுடர் மங்கி, தானே அணைந்துவிடும். நம்முடைய ஆசிரியர் மங்கலங்கிழார் சிறந்த விளக்காகவும், நிரம்பிய அறிவாற்றலும் சொல்லாற்றலும் பெற்று விளங்கினார்.

மங்கலங்கிழார் மற்றையப் பெரியோர்களைப்போல் தாம் பெற்ற அறிவுச்செல்வத்தைத் தமக்கு மட்டுமே பயன்படுத்திக் கொண்டவரல்லர். பல நூல்களை யாத்து பணம் பண்ணியவரும் அல்லர். மாறாக அறியாமையில் மூழ்கிக் கிடந்த பன்னூறு இளைஞர்களை ஒன்று திரட்டி அவர்களது அறிவுக் கண்களைத் திறந்து தமிழகத்திற்கு பன்னூறு புலவர் நன்மணிகளைத் தோற்றுவித்தவர்கள். "அவர் தொண்டின் பெருமை அளவிடற்கரியது" என்று தமிழ்க் கடல் திரு. வி. க. அவர்களால் பாராட்டப் பட்டவர்.

"தொண்டைநாடு சான்றோருடைத்து" என்ற முதுமொழிக்கு ஏற்ப விளங்கும் வடஆற்காடு மாவட்டம் அரக்கோ-ணத்தை அடுத்து, ஒருகல் தொலைவில் உள்ள சின்னஞ்சிறு ஊர் புளியமங்கலமே நமது, மங்கலங்கிழார் பிறந்த ஊராகும். 1897-ஆம் ஆண்டில் அய்யாசாமி முதலியார் பொன்னுரங்கம் அம்மாள், என்பவர்களுக்கு மகவாய்ப் பிறந்தார். அவரது 86ஆம் ஆண்டு நினைவுநாளாக ஒரு மலரினை திருத்தணியிலே உள்ள மங்கலங்கிழார் இலக்கிய மன்றத்தினர், அவர் மறைந்த 30-ஆம் ஆண்டில் கொண்டுவருவது செய்ந்நன்றி மறவாத செந்தமிழ்நாட்டு மக்களின் இயல்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்த செயலாகும்.

# ஆசிரியர் மங்கலங்கிழார்

உ. த. கோவிந்தசாமி

நான் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் ஐந்தாம் வகுப்புவரை படித்தவன். என் போன்றவர்களை அழைத்து சிறுசிறு வகுப்பு களாகப் பிரித்து மங்கலங்கிழார் வகுப்பு நடத்தி வந்தார். பதினாறு நூல்களில் பாடங்களை நடத்துவார். அரசுத்தேர்வு களை எழுதஎங்களை ஊக்குவித்து, எங்களைக் கல்லூரியில் சேர்க்க விரும்பி கல்லூரியின் நிலைகளை எங்களுக்கு விளக்கி அழைத்துச் சென்றார். எங்களுக்கு மூத்தவர் திரு. முனுசாமியிடம் ஒப்புவித்தார்.

இல்லத்துறவியாக இருந்தவர். ஒழுக்கத் தில் முழுத் துறவியாக இருந்தார். மங்கலங்கிழார் எப்போதும் சைவச் சின்னத்தோடு காட்சியளிப்பார். நாங் களும் அப்படியே இருந்தோம். அவரைச் சாமியார் என்று அழைத்ததோடு மட்டு -மன்றி ஊரில் உள்ளோர் அப்படியே அழைத்து நகையாடுவர். ஆயினும் அவர் அதைப் பொருட்படுத்தியதில்லை. எளிய உணவை, கட்டுப்பாடுடனும் குடும்ப சூழ்நிலை அறிந்தும் உண்பார். மாணக்கர் உள்ளம் பண்பட காலை 8மணிமுதல் இரவு வரை பாடம் நடத்துவார். மாணவர்களை முன்னால் உட்காரவைத்து சலிப்பேற்படா வண்ணம் கீழ் வகுப்பில் உள்ளோர்க்கும் புரியும்படி ஆற்றலோடு அவர் பாடம் நடத்துவது தனி ஓசையாகவே இருக்கும். அவர் விரும்பிய பாடம் திருக்குறள். இலக் கியங்கள் நடத்தும் போது அதில் உள்ள கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்வதோடு மட்டுமின்றி இலக்- கணத்தை, அதுஎந்த இலக்கணமாக இருந் தாலும் தெளிவாக அதையும் இலக்கியம் போல் எடுத்துரைக்கும் ஆற்றல் வாய்ந் தவர்.

தன்கால் பலம் உள்ளவரை வண்டி வேண் -டாம் என்று சொன்ன கிழார் 16 ஊர் களில் பாடம் நடத்தி வந்தார். கிழாரின் புலமையைப் பாராட்டி சின்மயானந்தா அவர்கள் "வித்தியானந்தர்" என்னும் பட் -டத்தை அளித்தார். பொருள் சேர்க்கும் ஆசையின்றி, தன்குடும்பம் என்பதையும் மறந்து மாணவர்களே என் குழந்தைகள் என்று வாழ்ந்த ஆசான் அவர். ஆந்திரா வோடு போய்விட இருந்த தமிழகத்தை மாற்றி அமைத்தவர்.

ஒருமுறை திரு.வி.க. அம்மையார்குப்பம் வந்து தலைமை ஏற்று விழா நடந்துகொண் டிருந்தபோது கிழாரின் மகன் திருபுரம் பூனாவிற்குப் போய்விட்டதாகத் தகவல் வந்தது அதைப்பற்றி கவலைப்படாமல் மேடையிலேயே அதை அறிவித்துவிட்டு செயல்பட்ட பண்பாளர் அவர். நான் உங்களுக்குச் செய்வதை நீங்கள் ஊருக்குச் செய்யவேண்டும் என்று அறிவுறுத்துவார்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

எனும் குறட்பாவுக்குச் சான்று அவரே. சிறையிலிருந்து மீண்டவுடன் கிழார் 'சித்தப்பன்' திருமணத்திற்கு வருகைதந்த போது கண்ணப்பனின்தாய் வந்திருந்தார். அவர்கள் வந்த குறிப்பைஉணர்ந்து சிறையின் பெருமையைக் கூறினார். எதிர் காலமறிந்து கூறும் ஞானச்சுடராகத் திகழ்ந்தவர் அவர். நாடறிந்த திரு.வி.க. அவர்களின் நெஞ்சில் இடங்கொண்டவர்.

ஊருக்கு ஊர் மன்றங்கள் அமைத்துத் தமிழொளி பரப்பியவர். அறிஞர் பலரை அழைத்து வந்து விழா நடத்தியவர். "ஆசிரியர் குப்புசாமி (மங்கலங்கிழாரின் இயற்பெயர்) எப்போது அழைத்தாலும் ஓடிச்சென்று அவரின் தொண்டராக இருப்பேன்" என்று திரு வி. க. தன் வாழ்க்கைக் குறிப்பில் வெளியிட்டுள்ளார். மங்கலங்கிழாரால் தணிகைப் பகுதிமக்கள் தமிழராக வாழும்நிலை ஏற்பட்டது என்பதை திரு. வி. க. நன்கு உணர்ந்திருதார்.

குடும்பத்தை, இனத்தை மறந்து எல்லோரும் ஒன்று என்று தொண்டாற்றினார் திரு.வி.க. அவர்கள். அதே நிலையில் கிழாரும் வாழ்ந்தார். திரு வி. க. தமிழ் வாழும் பகுதியில் வாழ்ந்தவர். ஆனால் கிழாரோ ஆந்திரப் பகுதியில் தமிழர் படும் தொல்லையை உணர்ந்து பணியாற்றினார்.

அரசியலுக்கு ம.பொ.சியையும், போராட்டத்திற்கு விநாயகத்தையும் தொண்டராக எங்களையும் வைத்திருந்த தொண்டர், எல்லோரையும் கவரும் பேச்சாற்றல் பெற்றவர். பகைவரையும் வசப்படுத்தும் இவரது பேச்சு. கிழாரின் மாணவர்களால் கல்லூரிக்குத் தீமை ஏற்படுவதில்லை என்ற நற்பெயர் காரண-மாய் கல்லூரி முதல்வர்கள் இடம் கொடுத்து வந்தார்கள்.

இலக்கிய இலக்கணத்திலும் வேதாந்-தத்திலும், மதத்திலும் சிறந்தவர். மக்களை உணாந்து நடந்துகொள்ளத் தெரிந்தவர். எதிர்காலத்தை உணர்ந்து செயல்பட்டவர். பலர் பல நடையைக் கொண்டனர். திரு. வி. க. தனது தனி நடையைக்கொண்டு பேச்சையும் எழுத்-தையும் ஒரே நடையாகக் கொண்டார். திரு.வி க.நெஞ்சில் இடம்பெற்றுத் தமிழ்த் தொண்டு புரிந்த மங்கலங்கிழார் பள்ளிப்பட்டில் இயற்கை எய்தினார். அவர் உடலை எடுத்துச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய உடலம் மறைந்துவிட்டாலும், அவருடைய தொண்டு நிலைபெற்றுள்ளது.

வாழ்க அவர் புகழ்!




மொழியால் உயிர் வாழ்ந்து
தமிழ் காத்த ஆசிரியர்
மங்கலங்கிழார் நினைவால் அமைந்த மன்றமும்
தமிழினத் தலைவர்
டாக்டர் கலைஞர் வழிநின்று ஒளிவீசும்
எல்லைப் போராட்ட வீரர் எனதருமை அண்ணன்
தணிகைக்கோ
டாக்டர் **ந. அ. ரசீது** அவர்களும்
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

அன்பன்,
**மு. தண்டபாணி**
முன்னாள் தலைவர்
**ஆர்.கே பேட்டை ஒன்றிய திராவிட முன்னேற்றக்கழகம்**
சஞ்சீவிபுரம் அஞ்சல். செங்கை மாவட்டம்.



# அறிவுலகைப் பணிந்திடுவோம் !

புலவர். க. நாகேசுவரன், திருத்தணி.

சிரித்தமுகம் பெருத்தஅகம் புலமைக் குன்று
சேர்ந்தார்க்கும் மற்றோர்க்கும் நன்மை தேடும்
அறத்தினுக்கோர் திருவுருவம் மங்க லப்பேர்
அணிபெறுநற் கிழார்தமிழின் கிழாராய் நின்று
உரித்துவைத்து வாழையினை ஊட்டல் போல
உளம்பதியத் தமிழ்த்தேனை ஊட்டிச் சென்றார்
வெறுப்பில்லா நடைநடந்து வீதி தோறும்
விதைத்ததமிழ் பழுத்துநிற்கும் தணிகை தன்னில்

மங்கலங்கி ழார்பெயரை மறப்பதுண்டோ
மனங்குளிர உரைபகர்ந்த மாண்பு மற்றும்
எங்கெங்கும் தமிழ்ப்பாலே செழிக்க உண்டு
எல்லோர்க்கும் முப்பாலை உரைத்த மேன்மை
செங்கதிரோன் வாய்மையெனும் செம்மை வாழ்க்கை
சேரனென நிமிர்ந்துநிற்கும் தோற்றம் மற்றும்
பொங்கிவரும் மொழிப்பற்றும், நமது வாழ்வில்
பொலிந்திடவே நாம் செய்யும் நற்றொண்டாகும்

இரசிதென்ற பெயர்சொன்னால் தணிகை தோன்றும்
இன்பமெல்லாம் இயைந்துநிற்கும் - முகமும் தோன்றும்
அரசர்போல் நடக்கின்ற நடையும் தோன்றும்,
அறுபதினை நெருங்கியுள்ளார் என்னும் போது
விரவுமொரு வியப்புளத்தில் காட்சி தன்னில்
வேர்விட்ட இளமையினை என்றும் காண்போம்
வரவிருக்கும் சமுதாயம் அன்னார் காட்டும்
வழிவகைகள் பின்பற்றின் வளங்கள் தோன்றும்

சாதிமத பேதங்கள் தாண்டி, நிற்போர்
சதிராடும் சதிச்செயல்கள் அலறி யோட
நீதியினை வகுத்திட்ட ஈ.வெ.ராவின்
நிலைத்தகொள்கை அதுவொன்றே. அன்னார் வாழ்க்கை
ஆதியிலே இல்லாத வேறு பாட்டை
அருந்தமிழர் அடைந்ததனால் அமைதி, குன்றி
சேதமுற்ற நிலையெண்ணில் புழுங்கும் நெஞ்சம்
சென்னைவளர் தணிகைக்கோ வாழ்க வாழ்க.

23

## ‘பகுத்தறி வுலகப் பாதையில் நடப்பவர்’

**V. D. இராமன், குருவராயப்பேட்டை.**

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டெனப்
பலகலை யுணர்ந்த பண்புளோர் பகர்வர்
பண்புடையாளர் பலரிருப் பதனுல்
பாரகம் உளதெனப் பகர்ந்தனர் வள்ளுவர்
எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி
செவ்வழி யென்றே உரைத்தனர் ஔவை;
எத்தனை ஊழிகள் தோன்றினும் மாறினும்
சித்தம் செறிந்த சீரோர் இருப்பதால்
வையம் நிலைத்து வாழ்வும் செழிக்கும்
செய்யும் செயல்களும் சிறப்புற ஓங்கும்
இந்நிலை தன்னைத் தன்னிலை யாக்கினோர்
செந்நெறி கண்ட மங்கலங் கிழாரும்
இரவு பகலாய் இணையிலாத் தொண்டுசெய்
பரவரும் பன்மைசால் இரசீதும் ஆவர்
முன்னவர் வாழ்வும் மூச்சும் தமிழாம்
பின்னவர் முன்னவர் காட்டிய பாதையில்
தமிழக மக்களைத் தகுமுறை செலுத்திடும்
தணிகைக் கோவாய்த் தன்னல மற்றே
பகுத்தறி வுலகப்பாதையில் நடப்பவர்
தமிழ்கூறு உலகம் தலைசாய்த்து வணங்கி
வாழ்த்து கூறிட வருக வருகவே!


# கணபதி தட்டச்சுப் பயிற்சி நிறுவனம்

[அரசு அங்கிகாரம் பெற்றது]

கந்தப்ப நாய்க்கன் தெரு, திருத்தணி

எளிய சீரிய பயிற்சிக்கு ஏற்ற இடம்
தமிழ் ஆங்கிலத்தில் தட்டச்சோடு, சுருக்கெழுத்தும்
பயிற்சி அளிக்கப்படும்.

நிறுவனர்: P. V. நடராசன்

24

# வான் புகழோடு வாழ்!

இரா. குலோத்துங்கன்,
தங்கவயல்

எல்லையினை மீட்பதற்கு ஏற்ற சிறைவாசத்
தொல்லை நடுவும் துவளாது—எல்லையிலாத்
தொண்டுகளைச் செய்திட்ட தூயவராம் நம்மேதை
தண்டார் தணிகைக்கோ தான்

அடக்கமுடன் வாய்மையொடு ஆன்றதமிழ் மாண்புயர
தொடக்கமுதல் தொண்டு,பல,செய்து—திடமுடனே
தள்ளா துழைக்கும் தணிகைக்கோ என்றென்றும்
வள்ளலென வாழ்க மகிழ்ந்து

காலத்தை வெல்லும் கலைச்சேவை செய்ததனால்
ஞாலத்து மக்களறி ஞானியாட்ட சீலங்கள்
ஆர்தணிகைக் கோரஷீத் அன்புடனே தொண்டுசெய்து
பார்புகழ வாழ்த்திடுகத் தான்

சாரதா டெக்ஸ்டைல்ஸ்

மாறாத கொள்கை
மறையாத வறுமை
தீராத தொல்லை
தீப்பட்ட போதும்
அஞ்சாத நெஞ்சம்
அடைந்தவர் ரஷீத்
அன்புடன் வாழ்த்தும்
ஆருயிர் நண்பன்



மொத்த ஜவுளி வியாபாரம்,
3/23, மடாலய வீதி,
விளாப்பாக்கம். வ.ஆ.மா.

# நன்னலம் காட்டும் கொடையாளர்

கவிஞர். க. ப. செயவேலன், திருத்தணிகை.

தணிகைத் தமிழகத்தோ டிணையத்
தளரா முயற்சி ஊக்கமுடன்
அணிஅணி யாகத் தொண்டர்களை
அழைத்து முன்னே வழிநடத்திப்

பணிவாய் மங்கலங் கிழாரோடு
பண்பாய் கலந்து ஒத்துழைத்து
மணியாய் வெற்றி கண்டவராம்
மதிக்கும் எங்கள் 'தணிகைக்கோ'

சிலம்புச் செல்வர்க் குறுதுணையாம்
சிறப்புத் தளபதி விநாயகமும்
நலமாம் கோல்டன் சுப்பிரமணியம்
நல்ல தியாக ராசனுடன்

பலமாய்க் கூடிச் செயல்பட்டார்
பாசப் பிணைப்பால் ஒன்றுனர்
நிலவும் அன்புக் கடையாளம்
ந.அ. ரஷீத் என்பவரே!

அன்பிற் கினிய பண்பாளர்
ஆர்வ மிக்க பேச்சாளர்
இன்பத் தமிழின் எழுத்தாளர்
எல்லா முணர்ந்த அறிவாளர்

நன்னலம் காட்டும் கொடையாளர்
நாக ரீக நெறியாளர்
உன்னிப் பார்க்கும் ஆய்வாளர்
உழைப்பா லுயர்ந்த ரஷீத்தண்ணன்

அண்ணன் ரஷீத்தவர்கள் அன்பாய் மணிவிழாக்
கண்டு களிப்படையக் கார்தோன்றும் வண்மையால்
ஓங்கிப் புகழ்பெற்று உற்றபல நன்மைகளைத்
தாங்கி வளர்கவே தான்.

கனிவாய் விழாக்காண் கவிஞர் ரஷீத்தே
இனிமையொடு ஏற்ற மிலகுபவர்—வானிகரும்
ஆன்ற ஒழுக்கத்தார் ஆயுள்பல் நூற்றுண்டு
சான்றோனாய் வாழ்க தழைத்து.

26

# மங்கலங்கிழார் நினைவு விழா வாழ்க!

K. S. பார்த்தசாரதி,
தலைவர், தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனம்.

மங்கலங்கிழார் நினைவுமலர் வெளியிட இருப்பதுகண்டு பெரிதும் மகிழ்கிறேன். மங்கலங்கிழார் தமிழ்த்தாயின் தவப் புதல்வர் என்பதைத் தன் தொண்டினால் நிலைநிறுத்தி விட்டார். அன்னாரைத் தமிழகத்தையும், தமிழையும், பெருமை படச்செய்த பெரியாரெனப் போற்றத் தகும். தமிழக எல்லைப் போராட்டத்தில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதில் ஏற்பட்ட விளைவுகள் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டியது இன்றையஇளைஞர்கள் தமிழ்த்தாய்க்காற்றும் கடமையாகும்.

எங்கள் தலைவர் தோழர். ப. ஜீவானந்தம் அவர்களும் நானும் பொதட்டூர் பேட்டைக் கைத்தறி நெசவுத்தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாகப் பேச வந்தோம். எல்லைப் போராட்டம் பிரச்சினை மௌனம் கலையாமலிருந்த நேரமது. அன்றைய பொதுக்கூட்டத்தில் கைத்தறி நெசவுத் தொழிலாளர் பிரச்சினையைப் பேசுவதைவிட எல்லைப் பிரச்சினையைத்தான் தோழர். ப. ஜீவானந்தம் பேசினார். அந்தப்பேச்சில் அவர் அடிக்கடி பெரியவர் மங்கலங்கிழார் அவர்களைச் சுட்டிக்காட்டிப் பேசியதுதான் அதிகம். பெரியவர் மங்கலங்கிழார் அவர்களின் தமிழ்ப்பற்றும் செயலாற்றலும், அந்தப்பேச்சின் மூலம் அனைத்து மக்களும் அறிய நேர்ந்தது போன்றே நானும் அறிந்தேன்.

தமிழ்மக்கள் அவரிடத்தில் எத்தகைய பற்றும், செயல் ஊக்கமும் வைத்திருக்கிறார்கள் என்பதைக் காணும் வாய்ப்பு அன்று எனக்குக் கிடைத்தது.

எல்லைப் பிரச்சினையை இவ்வளவு பெரிதாக்குகின்றார்களே என்று பேசும் மக்களைச் சென்னையில் கண்டதுண்டு. ஆந்திர அரசும், தமிழகஅரசும் தனித்தனியானாலும். ஒரே கட்சியால் ஆளப்படுவது தானே, இதில் எந்தக்கிராமம் எதிலிருந்தாலென்ன? என்று பேசியவர்களைப் பார்த்து வேதனைப்பட்டதுண்டு. எதிர்த்துப் பேசாமல் மௌனம் சாதித்ததுமுண்டு. எல்லை பிரிந்தபின் அந்த எல்லைக் கிராமங்களிலுள்ள மக்கள் மொழி அமைப்பு எப்படிச்சென்றது என்பதை உணர்ந்து பார்த்தபோதுதான் ஒருகட்சி இரண்டு மாநிலத்தை ஆளுவதன் மூலம் அந்தப் பிரச்சினை தீராது. வாழ்க்கை அனுபவத்தின் வியக்கத்தக்க மாறுதலைக் காணும்போதுதான் எல்லைப் பிரச்சினையென்பது எல்லையோடு நிற்பதல்ல! தாய் மொழியோடு கலந்துள்ள பிரச்சினை என்று அறிய முடிகிறது.

சத்யவேடு ஆந்திர மாநிலத்தில் சேர்ந்து விட்டது. சத்யவேடு கிராமத்திற்கு அடுத்துள்ள மாதர்ப்பாக்கம், பாதிரிவேடு, தமிழகத்துடன் சேர்ந்துள்ளது. இவ்விரு எல்லைக் கிராமங்களிலும் உள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்களிடம் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. நெசவுத் தொழிலாளர்கள் அநேகமாக தெலுங்கு பேசக்கூடியவர்கள். ஆனால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் எண்ணிக்கையைவிட விவசாயிகள் மற்ற பிரிவினர் எண்ணிக்கை அதிகம்.

சத்யவேடுக்கும், மாதர்பாக்கத்திற்கும் சமீபத்தில் கைத்தறி நெசவுத்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# அறிஞர் அண்ணாவால் அறிமுகமானவர்

**K. T. S. மணி,**
(காஞ்சிபுரம் முன்னாள் நகரமன்றத் தலைவர்)

**1949** செப்டம்பர் 17-ல் தி.மு.க. துவக்கம் தி.மு. கழகத்தின் முதல் போராட்டம் வட நாட்டு அமைச்சர்கள், கவர்னர்-ஜெனரல் தமிழகம் வரும்போது கருப்புக்கொடி காட்டுவது. அதன் அடிப்படையில் திவாகர் என்ற மத்திய அரசு அமைச்சர் காஞ்சிக்கு வரதராசப் பெருமாள் கோயில் தரிசனத்திற்கு வரும்போது கருப்புக்கொடி காட்டினோம். அமைதியாக முடிந்தது. யாரும் கைது செய்யப்பட-வில்லை.

**1950**ல் இராஜாஜி அவர்கள் கவர்னர்-ஜெனரலாக சென்னைவருகிறார். கோட்டை பகுதியில் அவருக்கு கருப்புக்கொடி காட்ட தி.மு. க. தலைவர்களும், தொண்டர்களும் வீதியின் இருபகுதிகளிலும் வரிசையாகக் கருப்புக்கொடி காட்ட நின்றுகொண்டிருக்கிறோம். திடீர் என்று போலீஸ், குதிரைப் படையை ஏவி தடியடி நடத்துகிறது.


ந. அ. ரசீத்

பன்மொழிப் புலவர். க.அப்பாதுரையாருக்குப் பலமான அடி, அனைவரையும் கலைத்து விட்டது போலீஸ். இது காலை நிகழ்ச்சி. இராஜாஜி மாலையில் மைலாப்பூரிலுள்ள அஜந்தா ஓட்டலைத் திறக்க வரும் இடத்தில் அன்று எப்படியும் கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டு ஓட்டல் நுழைவு வழி அருகே மிகக் கம்பீரமாக உடை அணிந்து பெரிய மனிதர்கள் மத்தியில் நின்றிருந்தேன். இராஜாஜி வந்தார். இடுப்பில் மறைத்து வைத்திருந்த கருப்புப் பை ஒன்றை வெளியே எடுத்தேன். அவ்வளவுதான் சூழ்ந்திருந்த போலீஸ் என்மீது பாய்ந்து பந்தாடினார்கள்.

தி. மு. கழகம் தொடங்கி, முதல்முதல் சிறைக்குப்போகும் வாய்ப்பு அப்போது பெற்றவர்கள் மொத்தம் 18 பேர்கள். அறிஞர் அண்ணா, மத்திய சிறைவாசலுக்கு வந்து எங்களை உற்சாகப்படுத்தி, சிறையில் அனைவரையும் உற்சாகப்படுத்த வேண்டிய பொறுப்பை என்னிடம் ஒப்படைப்பதாகக் கூறி வழி அனுப்பி வைத்தார்.

---

முன்பக்கத் தொடர்ச்சி...

தொழிலாளர் பிரச்சினை பற்றிப் பேசச் சென்றிருந்தேன். இந்த இடைவெளி முப்பதாண்டில், சத்தியவேடு கிராமத்தில் தமிழ் பேசுவோர் எண்ணிக்கை குறைந்துள்ளதையும், மாதர்பாக்கம்,பாதிரிவேடு கிராமத்தில் தெலுங்கு பேசுவோர் எண்ணிக்கைகுறைந்துள்ளதையும் பார்க்க முடிந்தது. இந்த அனுபவத்தைக் கொண்டு எல்லைப் பிரச்சினையை எண்ணிப் பார்க்கிறேன்.

தாய்மொழி எதுவானாலும் ஆளும் அரசின் மொழி,ஆதிக்கம் செலுத்தத்தான் செய்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த அனுபவத்தைக் கொண்டு பெரியவர் மங்கலங்கிழார் அவர்களின் எல்லைப் போராட்டத்தையும் அவர்தம் தமிழ்ப் பற்றையும் நினைவுபடுத்திக் கொள்வது தமிழகத்தின் கடமையாகும்.

வாழ்க மங்கலங்கிழார் நாமம்!
வளர்க தாய்மொழிப்பற்று!

அந்த 18 பேரில் இன்று வெளியே தெரியும் படியாக நானும் சில ஆண்டுகளுக்குமுன் தி. மு. க வை விட்டு அ. தி. மு. க.வில் சேர்ந்துள்ள சென்னை-மைலாப்பூர் நண்பர் T. K. கபாலியும்தான் உள்ளோம்.

சிறைமீண்டபின் காஞ்சியில் எனக்கும் என்னுடன் சிறைக்கு வந்த காஞ்சி நண்பர் பரமசிவத்திற்கும் அறிஞர் அண்ணு தன் வீட்டிற்கு அழைத்து பகல் உணவு அவருடன் சாப்பிடப் பணித்திருந்தார்கள் அவர் அன்புக்குக் கட்டுப்பட்டு அவருடன் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்போது ஒல்லியாக ஒரு இளைஞர் திருத்தணிகையிலிருந்து வந்துள்ளார். கழகத் தோழராம் என்று அண்ணுவின் கார் ஓட்டியான நண்பர் சுந்தா அண்ணு விடம் கூறினர்.

அண்ணு வந்தவரை உள்ளே கூப்பிட்டு அவர் வந்த விவரம் கேட்டார். திருத் தணிகையில் முதல்முதல் பெரும் சிரமத் திற்கு மத்தியில் தி மு. கழகக் கிளை துவக்க விழா; இன்று திரு. ஈ. வி. கே. சம்பத்தை வைத்து ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டேன். ஆனல் அவர் வர இயலவில்லை என்று தந்தி வந்துள்ளது. எப்படியும் கூட்டம் நடத்த வேண்டும் என்ற துடிப்பில் தங்களிடம் வந்துள்ளேன் என்ருர் அந்த இளைஞர்.

சரி உட்கார்ந்து சாப்பிடு, கூட்டம் நடத்த—சம்பத் இடத்தை நிரப்ப—நான் தோழர் K. T. S. மணியை அனுப்பிவைக் கிறேன் என்று அண்ணு கூறினர்.

அளவற்ற மகிழ்ச்சியோடு அந்த இளைஞர் அண்ணுவிற்கு நன்றி கூறிவிட்டு, "நான் உடனே திருத்தணிகைக்குச் சென்று ஆவன செய்கிறேன். நீங்கள் மாலை 6-மணிக்குத் திருத்தணிகைக்கு வந்து விடுங்கள் என்றும் கூட்டம், கோயிலுக்குப் போகும் வழியில்தான்" என்றும் கூறிப் புறப்பட்டார்.

நானும், நண்பர் பரமசிவமும் அன்றைய நகர தி. மு. க. செயலாளராக இருந்த செ. கோ. பெருமாளும் காஞ்சியிலிருந்து புறப்பட்டு, மாலை 6-மணியளவில் திருத் தணிகைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

கூட்டம் எங்கே என்றுகேட்டு அவ்விடத் திற்குப் போய்ச்சேர்ந்தோம்.அவ்விடத்தில் யாரும் இல்லை. அப்போது — இப்போது போல் மேடை அமைக்கப்படுவது என்பது அபூர்வம். பெஞ்சும், நாற்காலியும் போடப்பட்டு, கிடைத்தால் எதிரில் மேஜை, அதுவும் இல்லாவிட்டால் ஒலி பெருக்கி மட்டும். ஆனல் இந்தஏற்பாடுகள் கூட அங்கு இல்லை. ஒரு அரைமணி நேரம் அங்கேயே இருந்தோம். எங்களை அண்ணுவின் வீட்டில் வந்து அழைத்த அந்த இளைஞர் வருவார் என்று எதிர் பார்த்துக்கொண்டு இருந்தோம்.

அப்போது ஒரு நபர் வந்து இங்கு கூட்டம் நடத்தவிடாமல் தடுக்க, அந்த இளைஞரை காவல்துறையாரிடம் கூறி ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் விட்டனர். அதோ † உள்ள சினிமா கொட்டகைக்காரரிடம்தான் மைக்குக்குச் சொல்லிவைத்தார். போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போகும் வழியில் என்னைப் பார்த்து, "காஞ்சி புரத்திலிருந்து பேசுவதற்குத் தோழர்கள் வருவார்கள். அவர்களிடம் என் நிலையைக் கூறி, நான் காவலில் வைக்கப்பட்டது பற்றிக் கவலைப்படாமல் கூட்டம் மட்டும் நிற்காமல் நடத்தச்சொல்" என்று கூறிச் சென்ருர் என்ருர் அந்த நண்பர்.

நிலைமை எனக்குத் தெரிந்துவிட்டது. விவரம் கூறிய அந்தத் தோழரைக் கொஞ்சம் அந்தசினிமா கொட்டகைவரை

---

†இன்றையதினம் தேவஸ்தானக் குடியிருப் புக்கள் உள்ளஇடம் அப்போதுமைதானம். அதில் வரதராஜுலு நாயுடு என்பவரும், தர்மப்பிள்ளை என்பவரும் இணைந்து 'குமரன் டாக்கீஸ்' நடத்திவந்தார்கள்.

வந்து, நாங்கள்தான் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என்றுகூறி ஒரு பெஞ்சும் ஒரு நாற்காலியும் தரஆவன செய்யச் சொன்னேன். அவர் ஓரளவு உதவினர். நானும், நண்பர் பரமசிவமும் இரண்டு நாற்காலிகளைத் தூக்கிக் கொண்டு வந்து கூட்டம் நடக்கும் இடத்தில் போட்டோம். மைக் கேட்டால் தரமறுத்து விட்டார். ஒரேஒரு விளக்குமட்டும் வாங்கிக்கொண்டு வந்து கூட்டம் நடக்க இருப்பதாய் நான் உரத்த குரலில் கூறினேன்.

சுமார் 30 அல்லது 40 பேர் கூடினர்கள். நான் எழுந்து காஞ்சி நகரச் செயலாளர் தோழர் செ. கோ. பெருமாள் தலைமை தாங்குவார் என்று முன்மொழிந்தேன். பரமசிவம் வழி மொழிந்தார்.

தலைவர் பேசத் தொடங்கினர். கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து "பேசாதே! கூட்டம் நடத்தக் கூடாது" என்ருர். உடனே நண்பர் பெருமாளை உட்கார வைத்துவிட்டு நான் எழுந்து ஏன் நடத்தக் கூடாது? போலீஸ் அனுமதி வாங்கியுள்ளோம். நாங்கள் என்னதான் பேசுகிருேம் என்று பார்த்து, அதன்பின் உங்கள் கருத்தைக கூறுங்கள் என்றேன். கடவுள் இல்லை என்பீர்கள் கூட்டம் நடத்த விடமாட்டோம்!! என்ருர். அதற்குள் கல் வந்து விழ ஆரம்பித்தது. நண்பர்களைத் தூரப்போகச் சொல்லிவிட்டு ஒரு நாற்காலியைத் தூக்கித் தலையில் கவிழ்த்துக் கொண்டு. வரும் கல் தலை, முகத்தில் படாமல் நாற்காலியைப் பாதுகாப்பாக மூடிக் கொண்டு பேசத் தொடங்கிவிட்டேன்.

நான் ஒவ்வொரு கிருத்திகைக்கும் இந்த முருகன் கோவிலுக்கு வந்து கொண்டிருந்தவன்தான் என்று பேச்சைத் தொடங்கி நான் பக்தனுக இருந்தபோது நடந்தவைகளைக் கூற வரவரக் கல்விழுவது நின்றது. நாற்காலியைக் கீழேபோட்டு, அதன் மீது நின்று கொண்டு கழகக் கொள்கைகளை சுமார் இரண்டு மணி நேரம் பேசி கழகம் துவக்கப்பட்டதாகக் கூறி இதுவரை அமைதி காத்துவந்தவர்களுக்கு நன்றி கூறி இரவு 9 மணியளவில் கூட்டத்தை முடித்தேன். சுமார் 100 அல்லது 150பேர் கூட்டத்தில் இருந்தனர். லைட்டையும், நாற்காலியையும் வாங்கி வந்தவரிடம் ஒப்படைத்துவிட்டு எங்களை அழைத்த வாலிபரைத் தேடிப்போனேம்.

அவரைப்போலீஸ் கடுமையாக அடித்து விட்டதாகவும், அப்போதும் கூட்டம் நடந்தே தீரும் என்று கூறிக்கொண்டே இருந்தார் என்றும் இப்போது அவரை எங்கு வைத்துள்ளார்கள் என்று தெரிய வில்லை என்றும் கூறினர்கள். அதனுடன் நீங்களும் சற்று பாதுகாப்போடு ஊர் போய்ச் சேருங்கள் என்ருர்கள்.

நேரே இரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து விடியற்காலை 3 மணியளவில் வந்த எக்ஸ்பிரஸ் வண்டியில் ஏறி அரக்கோணம் வந்து காஞ்சிபுரம் வந்துவிட்டோம். இரண்டு தினங்கள் கழித்து அந்த மெல்லிய உருவம், திடசித்தம் கொண்ட கொள்கை மங்காவீரன் காஞ்சி வந்தார். அண்ணவை சந்தித்தார். அப்போது நானும் அங்கு இருந்தேன்.

அறிஞர் அண்ணு அந்த நண்பரை அருகில் அழைத்து நடந்த விபரத்தைக் கேட்டு-உடம்பைத் தடவிக் கொடுத்து அடி பலமா என்று கேட்டார். அதைப் பற்றிக் கவலையில்லை அண்ணு! அன்று கழகம் தொடங்கப்பட்டதே! கூட்டத்தை நான் இல்லாத காரணத்தால் நிறுத்தி விடாமல் என் மனநிலையைப் புரிந்து அவ்வளவு எதிர்ப்பிற்கு மத்தியிலும் கூட்டம் நடத்தி என் மானத்தையும், கழகத்தின் நிலைமையையும் காத்தார்களே அதற்காக நான் இன்னும்கூட அடிபடத் தயார்தான்! என்று அஞ்சாநெஞ்சினனுக எடுத்த பணி முடிக்கும் செயல்வீரனுக நெஞ்சுறுதியுடன் முழக்கம் இட்ட அந்தக் காட்சி இன்றும் என்கண்முன் நிற்கிறது! அண்ணு பூரித்துப்போனர். தம்பி! நம்

கழகம் வளரவேண்டியதுதான்! அதற்காக அவசியம் இல்லாமல் நீங்கள் எல்லாம் அடிபட நான் விடமாட்டேன் என்ருர்.

அன்று இல்லாவிட்டால் வேருெரு நாளில் நமக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படும்படி வலுவேற்றிக் கொண்டு கழகத்தைத் தொடங்கலாம். ஆர்வம் உள்ள உன்போன்ருேர் இருக்கும்போது காலம் சற்றுத் தாழ்ந்து கழகம் உருவாகுமே தவிர, கழகம் வளராமல் போய்விடாது. உன் நிலைமையைச் சற்று எச்சரிக்கையாக வைத்துக்கொள் என்று அண்ணு கூறியபோது ஆனந்தமடைந்த அந்த நண்பரை இன்று என் மனக்கண் முன்ஞல் நிறுத்திப் பார்க்கிறேன். மகிழ்கிறேன்; அவரை வாழ்த்த-அவர் புகழை எழுத-ஓர் வாப்ப்பு தந்த திருத்தணிகை மங்கலங்கிழார் இலக்கிய மன்றத்திற்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வளவு நிகழ்ச்சிக்குக் கதாநாயகர் யார்? அவர் பெயர் என்ன என்று எழுத வில்லையல்லவா? ஆம்! தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக உள்ள உறுதியுடன் எந்த இன்னல் வந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு புன்முறுவலுடன் கொள்கை வெற்றி பெறப் பாடுபடும் என் இனிய நண்பர்-என் அன்பு நண்பர்-என் மதிப்பிற்குரிய நண்பர் -திருத்தணிகை **ரசீத்**தான்.

அன்று முதல் அவர் பொது வாழ்க்கை ஆடாமல் அசையாமல் வளர்ந்து, வட எல்லைப் போராட்டத்தில் உச்சநிலை பெற்றது. தன்னையே அதில் இரண்டறக் கலக்கச் செய்து கொண்டார். சிறை கண்டு அஞ்சியதில்லை! தேவை இல்லாமல் சிறை தேடிப் போனதுமில்லை வளம்பெரும் வாழ்வு கிடைக்கும் என்பதற்காகக் கட்சியில் சேர்ந்ததும் இல்லை. நாடு வளம் காண தன் வாழ்வைப் பணயம் வைத்த வீரர். தி. மு. க. வில் தொடங்கி தமிழர் வாழ்வு தழைக்க தன் மனம் சரி என ஏற்ற பாதையில் நடந்து அன்றுமுதல் இன்று வரை கொள்கையை முன் நிறுத்தி பொதுப்பணி ஆற்றும் நண்பர் தணிகை தந்த தங்கம்—டாக்டர் **ந. அ. ரசீத்** அவர்கள்.

தியாகம் செய்ய வேண்டிய நிலைவரும் போது எவ்விதத் தியாகத்திற்கும் உட்படுத்தப்பட்டவஞக இருக்கவேண்டும் என்றநிலை இருந்தகாலம் ஒன்று இருந்தது. அரசியலில் இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் காந்தி அடிகள்

கொள்கை இல்லாத அரசியல்
தியாகம் இல்லாத சேவை - இவைகள்

பாவங்கள் என்று கூறினுர். இன்றைய பொது வாழ்க்கைக்கு இவைகள் எல்லாம் தேவை இல்லை.

சொல்லும், செயலும் வேறுவேருக இருக்க யாரை எப்படி சொக்க வைக்கலாம் என்று உணர்ந்து செயல்பட்டு தன் வாழ்வை பளபளப்பாக்கிக்கொண்டு ஏழைக்கு உழைப்பதாய் வேடம் போடும் இந்தக்காலத்தில் தன் நிலைபற்றிக் கவலைப்


**தணிகைக் கோ நீடுழி வாழ்க!**

★

## ஸ்ரீ தேவி இரத்தப் பரிசோதனை நிலையம்,

**65/1, வள்ளலார் தெரு,**
**பெரியகுப்பம்,**
**திருவள்ளூர் ரயிலடி-602001.**

எங்கள் நிலையத்தில்
இரத்தம், சளி, நீர், மலம்
இந்திரியம் முதலியவற்றைத்
தகுதி வாய்ந்த
தொழில் நுட்பநர்களால்
சிறந்த முறையில்
பரிசோதிக்கப்படும்.

படாமல் - தான் ஏற்ற கொள்கைக்காக வாழும் நண்பர்கள் இன்று மிகமிகக் குறைவு. அந்த அளவில் - சிறியதில் பெரிய அளவாக வாழ்ந்துகாட்டும் டாக்டர். ரசீத் அவர்களைப் பெருமைப் படுத்த முன்வந்த மன்றத்தாரையும் நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

தணிகைப்பகுதியில் நல் இளைஞர்கள் தமிழ்ப்பற்றோடும், தமிழ்இனப்பற்றோடும் பகுத்தறிவுப்பாசறை பரவலாக அமைத்தும். தமிழ்த்தென்றல் திரு. வி. க. நினைவாக,மங்கலங்கிழார் மன்றம் கண்டும் சிறிது காலமாக மிகச்சிறப்பாகத் தமிழ் வளர்த்துவரும் பாங்கினை அவ்வப்போது பத்திரிக்கைகளில் பார்த்து உளம் மகிழ்ந்து வருகின்றேன். அப்பணியின் உச்சமாக வடஎல்லைப் போராட்டத் தளபதிகளில் ஒருவராக விளங்கும் என் அன்பு நண்பர் டாக்டர் ரசீத் அவர்களுக்குப் பாராட்டு செய்யும் வகையில் அவர் மொழிப்பற்றை முன்நிறுத்தி "தமிழ்த்தொண்டர் மலர்" வெளிவர எடுத்துள்ள நன்முயற்சியை மீண்டும் மீண்டும் பாராட்டுகிறேன்.

தானும் வளர்ந்து தன்னோடு உள்ளவர்களையும். வளர்த்த பெருமை அறிஞர் அண்ணாவுக்கு மட்டுமே உண்டு. அவர் வழியில் தொடங்கி,அவர் கொள்கைக்குத் துணையாக இருந்து பணியாற்றும் யாரும் எங்கிருந்தாலும் சிறப்புப்பெற வேண்டியவர்களே! அவ்வாறு சிறப்புப்பெற வைக்கும் பணி மேற்கொண்டுள்ள மங்கலங்கிழார் மன்றம் வளரட்டும்! அவர்கள் தொண்டு சிறக்கட்டும்!! எனக்கும் அதில் பங்கு தந்தமைக்கு மீண்டும் என் நன்றியைக் கூறி — நண்பர் **ரசீத்** பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நலமோடு உள்ளத் திடமோடு—கொள்கை நெறியோடு வாழ்க வாழ்கவெனக் கூறி மகிழ்கின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் இனப்பற்று!!

வெல்க தந்தை பெரியார் — அண்ணா கொள்கைகள்.


**இளைய தலைமுறையின் இணையற்ற வழிகாட்டியாம்**
**சிந்தனைச் செம்மல் தணிகைக்கோ**
**டாக்டர் என். ஏ. ரசீத் அவர்கள்**
**சிறந்து வாழ்க என வாழ்த்துகிறேன்**

அன்பு
**வீரை. இஸ்மாயில், பி.ஏ.,**

Phone: **34915**



**NAMCO SHOE COMPANY**
10, Kasi Chetty Street,
Madras-600 001.

DISTRIBUTORS FOR:
**B. S. C. & C. S. C.**

# சிலேடையில் ரஷீத்

*நல்லிசைப் புலவர் சி. கயிலாயம்,*
காஞ்சிபுரம்.

### பூமியும் ரஷீத்தும்

நல்லுணவு தானளித்தே நாளு(ம்) உதவிடலால்
பல்பொருளைக் கொண்டொழுகும் பண்பதனால்—வல்லமைசேர்
பாரு மிரஷீத்தும் பண்பிலே யொப்பரென
ஊருக் கெலாமெடுத் தோது.

### சூரியனும் ரஷீத்தும்

ஒளியைத் தருவதுடன் ஊர்சுற்றி வந்து
களிதரவே கண்பயனைக் காணும்—அளிமிக்க
அன்பர்ர ஷீத்துடனே ஆதவனும் இவ்வுலகில்
மன்னிபுக ழொப்பார் மகிழ்ந்து.

### ஏகலைவனும் ரஷீத்தும்

குறைகல்வி கற்றும் குவலயத்தோர் மெச்ச
நிறைகல்வி ஆக்கியதோர் நீரால்—குறையாத
ஏகலைவ னொப்பரே எம்மிரஷீத் என்றேநீ
ஆகம் மகிழ அறை.

### ராணுவமும் ரஷீத்தும்

எல்லைப்போர் கண்டதனால் ஏற்றிட்ட காவலினால்
அல்லு பகலயராத் தன்மையினால்—வல்லமைசேர்
நாடுகண்ட ராணுவமும் நல்லார் ரஷீத்தும்
பீடுறவே யொப்பரெனப் பேசு.

### ஆழியும் ரஷீத்தும்

பல்லோர் பகரும் பரந்த பரப்புடனே
நல்லோர் நலங்காணும் நன்மையால்—கல்லாரும்
கண்டுபுக ழாழியும் கண்காண் ரஷீத்துடனே
திண்ணமா யொப்பரெனத் தேர்.

வண்ணங்கள் பலசேர்ந்து அழகாம் போல
வலிவான பல்கருத்தால் நூலைச் செய்து(ம்)
திண்ணமுள அறிவுடனே தேனைப் போன்ற
தெவிட்டாத உரைநிகழ்த்தி மகிழ வைத்து(ம்)
கண்ணகன்ற ஞாலத்தில் புகழைப் பெற்ற
கனமிக்க நண்பரஷீத் நலங்கள் கொண்டு
உண்மையுடன் தமிழ்நாட்டிற் குழைத்து நாளும்
ஒப்பின்றி வாழ்கவென வாழ்த்து கின்றேன்.

அல்லாஹு அக்பர்

ரஷீத் ஜிந்தாபாத்

# வடஎல்லை வீரர் ரஷீத்

உத்மானியா
மகமது இஸ்மெயில் நாகூரார்,
பேஷ் இமாம், மக்காமசீத்,
திருத்தணி.

தணிகைக்கோ திரு. ரஷீத் அவர்களின் 56-வது ஆண்டு நிறைவு நாளைக் கொண்டாடுவது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நான் திருத்தணி மக்கா மசூதியில் 40 ஆண்டுகள் பேஷ்இமாமாகப் பணியாற்றி வருகிறேன். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்ற முதுமொழிக் கிணங்க நல்ல துடிப்பும், சுறுசுறுப்பும், தமிழ்ப்பற்றும் கொண்டவர் திரு. ரஷீத். அவரது இள வயது முதல் அவரை நன்கு தெரியும். திரு. ரஷீத் அரசியலில் நுழைவதற்கே நான் காரண மாக இருந்தவன். முதன் முதலில் முஸ்லீம்லீகில் சேர்ந்தோம். பிறகு நானும் திரு. ரஷீத், வி. ஆறுமுகம் மற்றும் சிலரும் தி மு. க-வில் சேர்ந்து பணியாற்றினோம். சிலகாலம் சென்றதும் நான் காங்கிரசில் சேர்ந்து பணியாற்றி வருகிறேன்.

அரசியலில் திரு. ரஷீத் பெரும் அளவில் ஈடுபாடு கொண்டவர். மேலும் தமிழ் நாட்டு வடஎல்லைப் போராட்டத்தில் திரு. கே. விநாயகம், கோல்டன். சுப்பிரமண்யம், இ. எஸ். தியாகராஜன் மற்றும் பல தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து முழு மூச்சுடன் போராடி சிறைக்கும் சென்று இறுதியில் வெற்றி கண்டார். அதன் விளைவு இப்பகுதி தமிழ் நாட்டுடன் இணைந்தது.

இவரது தமிழ் ஆராய்ச்சி மேடைப் பேச்சும், நண்பர்களுடனும் தொண்டர் -களுடனும் பழகும் பாணியும் மிகப் பாராட்டுக்குரியது.

அண்மையில் திரு. மஸ்தான் கவிகளுக்கு சிறப்பான தமிழ்உரை எழுதி அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் "டாக்டர்" பட்டம் பெற்றது தமிழுக்கும், தமிழர்களுக்கும் குறிப்பாக—முஸ்லீம் இனத்தவர்களுக்கும் பெருமை தருவதாகும்.

திரு. ரஷீத் வரலாற்று நூல்களை வெளியிட முயன்று வருகிறார். இம் முயற்சியில் அவருக்கு வெற்றி கிடைக்க ஆண்டவன் அருள் புரிவானாக. மேலும் பற்பல தமிழ் நூல்களை திரு. ரஷீத் வெளியிட வேண்டும். தமிழுக்கு அவரு -டைய தொண்டு தொடர்ந்திருக்க அவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் சந்தோஷத்தையும் அருள ஆண்டவனை வேண்டுகிறேன்.

வணக்கம்.

அறிவுக்கு விருந்தூட்டும் பெரியாரும்
அறிவோர்க் கிடை பெரு விளக்காம் [அண்ணாவும்
முத்தமிழ் வித்தகராம் கலைஞரும்
நித்தம் போற்றிப்புகழும் நந்தமிழை
தானே அதுவாகி உணவில் மறைந்த [உப்பன்ன
கோனும் மங்கலங் கிழார் மன்றம்
புரவலராம் சீதக் காதி வழி
திறலோன் ந.அ. ரசீத் நின்னை
இன்னாளில் நீடு வாழ்கவென வாழ்த்தி
இன்றமிழால் யாம்பாடும் பாட்டு.

**சீ. சுப்பிரமணி,**
நகர தி.மு.க. செயலாளர்,
**வே. வீ. இராகவன்,**
நகர தி.மு.க. துணைச் செயலாளர்
நகர திராவிட முன்னேற்றக் கழகம்
திருவள்ளூர்

# நினைவில் நிற்பவர்

கே. எஸ். நரசிம்மன்
"ஹிந்து" பத்திரிகை நிருபர்,
திருத்தணி.
12—3—83.

எனது இனிய நண்பர் திரு. ரஷீத் அவர்களின் 56-வது ஆண்டு நிறைவுநாளை யும் தமிழ்ப்பெரியார் மங்கலங்கிழார் அவர்களின் நினைவுநாளையும் கொண்டாடு வது மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் தருகிறது. இதுமேலும் தமிழ்த்தாய்க்குப் பெருமை சேர்ப்பதாகும்.

எனக்கும் நண்பர் திரு.ரஷீத் அவர்களுக் கும் சுமார் முப்பத்திமூன்று ஆண்டுகளாக நெருங்கிய தொடர்புண்டு. வடஎல்லைப் போராட்டத்தில் தீவிரமாகச் செயல் புரிந்ததையும் இதுபோல் திரு. மங்கலங் கிழாரும் திரு. கோல்டன் சுப்ரமணியம் மற்றும் பல தமிழன்பர்களின் தொண்டை யும் மறக்க முடியாததாகும்.

இனியவர்; கடும் உழைப்புக்குப் பின்வாங்காதவர்; பண்பாளர்; சிறந்த கடல் அலைபோன்ற பேச்சாளர்; தமிழ் ஆராய்ச்சியாளர்; எழுத்தாளர்; தமிழ் அறிஞர் நண்பர் ரஷீத் என்ருல் மிகை ஆகாது.

அண்மையில் மஸ்தான் கவிகளுக்கு சிறப் பாக உரை எழுதியதற்கு அமெரிக்க பல்கலைக் கழகம் "டாக்டர் பட்டம்" இவருக்கு அளித்தது. இதன்மூலம் தமிழுக் கும், தமிழர்களுக்கும் பெருமை தேடித் தந்தார்.

தமிழ்ப் பட்டி மன்றங்களைத் தொடர்ந்து நடத்தி, பல தமிழ்ப் பேச்சாளர்களை உருவாக்கினர். தவிர தேசியகவி ஸ்ரீ சுப்ர -மண்ய பாரதியாரின் நூற்ருண்டு விழாவைக் கொண்டாடிய நேரத்தில் பல இளம் கவிஞர்களை அறிமுகப்படுத்தினர் என்பதை எல்லாம் அறிய, பெருமையும் உவகையும் உண்டாகிறது.

இந் நன்னுளில் நண்பர் திரு. ரஷீத் அவர்கள் மேன்மேலும் தமிழ் வளம் பெற பாடுபடுவதற்கு அவருக்கு நல்லஆரோக்கி-யத்தையும் நீண்ட ஆயுளையும் அளிக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

"சுதந்திரத்திற்குப்பின் இந்தியா" என்ற வரலாற்று நூலைப் பதிப்பிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார் என்று அறிய, மேலும் மகிழ்ச்சி.

இதே நாளில் மதிப்பிற்குரிய திரு மங்கலங்கிழார் அவர்களை நன்றியுடன் நினைக்கக் கடமைப் பட்டுள்ளேன். திருத்தணி ஆந்திரத்தின் பகுதியாக பல ஆண்டுகள் இருந்தமையால் பெரும்-பான்மையினராக வாழும் இப்பகுதித் தமிழர்கள் தாய்மொழியைக் கற்க வகை யில்லாது தமிழை மறந்து வாழ்ந்து வந்தனர். இப்பெரியார் கிராமம் கிராம மாகச் சென்று அவர்களை ஒன்றுகூட்டி தமிழைக் கற்றுத்தந்து தமிழ் அறிவை ஊட்டி தமிழர்களாகத் தலைநிமிர்ந்து வாழ வகைசெய்தவர். வட எல்லைப் போராட்டத்தில் தமது முதுமையிலும் இளைஞர் போன்று தொண்டு புரிந்தது இப் பகுதித் தமிழர்கள் மனத்தில் என்றும் நினைவிருக்கும். எனது தகப்பஞர், காந்தி ஜோஸியர், திரு. சடகோபாலாசாரியார் எல்லைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டதற்கு திரு. மங்கலங்கிழார் அவர்கள்தான் காரணம்.

இப்பெரியாரை நினைவுபடுத்திக் கொளல் நமக்குநாமே பெருமை தேடிக்கொள்வ தாகும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

வணக்கம்.

# வாழ்த்து

**தி. நா. அறிவுஒளி,** க.மு.கல்.இ.,
அமைப்பாளர் தமிழ் ஆய்வரங்கம்.
23, மந்தைவெளித் தெரு,
நால்வர்பேட்டை,
திருக்கழுக்குன்றம்-603109
செங்கை மாவட்டம்.

**பேரன்பு கெழுமிய நண்பர்க்கு,**

வணக்கம். நலம்; நலமறிய ஆவல். தமிழ்த்திரு. ந. அ. இரசீது அவர்களுக்கு பிறந்த நாள் விழா நிகழவிருப்பது கண்டு கழிபேருவகை கொண்டு தமிழ் ஆய்வரங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களை உரிமையாக்குகிறேன்.

தமிழ் மறவராக, முற்போக்குக் கருத்துகளின் காவலராக, எழுச்சிமிக்க பணியாற்றிய நல்லறிஞர் மேலும் பல்லாண்டுகள் பணியாற்றி நாடும் மொழியும் தமிழினமும் நலமுறப் பாடுபடவேண்டும்; பீடு பெறவேண்டுமென வாழ்த்துகிறேன்.

அன்பு
**தி. நா. அறிவுஒளி**

நீல வானத்து நித்திலக் குவியல் நடுவே
நீந்துகின்ற நிலவாய் எங்கள்
நெஞ்சக வானத்தில் கொஞ்சும் — நிலவே!
ரசீத் அண்ணனே! வாழ்க! வாழ்க!



**M/s. சந்திரா டெக்ஸ்டைல்ஸ்,**

மொத்த ஜவுளி வியாபாரம்,

**3/26, மடாலய வீதி, விளாப்பாக்கம்,**
**வ. ஆ. மா.**

36

# வாழ்க வையகம் !

**பொன். சௌரிராசன்,**
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

**அன்பார்ந்த திரு. மாலிக் அவர்கட்கு,**

தமிழ்மண் நலத்தையும் தமிழ் மனவளத்தையும் வளர்த்துத் தமிழ்க்களங்களை உருவாக்கித் தமிழ் வீரர்களைத் தோற்றுவித்த ஒரு இயக்கம் மங்கலங்கிழார்; அந்த இயக்கத்தின் மையத்தூண் தணிகைக்கோ ந.அ. ரசீத் அவர்கள். இவ்விருவரை நினைந்து தாங்கள் வெளியிட விழையும் மங்கலங்கிழார் மன்றப் பத்தாம் ஆண்டு மலர் சீரும் சிறப்பும் பெற்று முதியோர்க்குத் தெம்பினையும் இளையோர்க்குத் தெளிவினையும் தந்தருள வாழ்த்துகிறேன்.

தங்கள்

பொன். சௌரிராசன்

வாடிடும் மலர் எனினும் வட்டமிடும் வண்டு
சளைத்ததில்லை என்றும்!

**M/s. மயூர் டெக்ஸ்டைல்ஸ் & ஏஜென்சீஸ்**
மொத்த வியாபாரம்,
70, கிடங்குத் தெரு,
சென்னை-1.

**M/s. உஷா எண்டர்பிரைசஸ்,**
மொத்த ஜவுளி வியாபாரம்,
9, M. C. ரோட்,
வண்ணாரப்பேட்டை, சென்னை-21.

# "வள்ளுவமும் - வள்ளுவரும்"

ந. அ. அப்துல் மாலிக், M.A.,
அண்ணா நகர், திருத்தணி.



தண்டமிழ் நெறியினை அவனிக்கு அறிவித்த சான்றோர்களுள் சிறப்பானவர் திருவள்ளுவர் என்பதாலேயே

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாராட்டிப் பரவினான், இன்றைய நூற்றாண்டுக் கவிஞனாகத் திகழும் யுகப் புரட்சிப் பாவலன் "நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா"என அவன் தாசனும் புரட்சிக் கவிஞரால் பாராட்டப்பட்ட பாரதி.

உலக கவிஞர்களுள் வாழ்க்கை நெறி-யினை எளிமையாக உள்ளங்கொள்ளும் வகையில் புகழ்ந்தவன் 'வள்ளுவனே' எனப் போற்றாதார் யாருமில்லை. அவனைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளோ, அவன் வாழ்ந்த வாழ்க்கை முறையோ, செய்த தொழிலோ, காலமோ, குறிப்பிட்டு யாராலும் சொல்ல முடிந்த வரலாற்று ஆதாரங்களோ நம் தமிழகத்தில் எங்கும் இல்லை! தமிழகத்திற்கு வெளியே எங்கும் கிடைத்ததாகச் சான்றும் இல்லை என்பதால் அவனைப் பார்த்தவர்கள் "அவன் எம்மவன்" என உரிமை கொண்டாடத் தொடங்கிவிட்டனர்.

"நவில் தொறும் நூல் நயம் போலும்" என அவன் கொடுத்த தொடரைக் கொண்டே அவரவர்கள் பேசும்போதெல்-லாம் அவனை அவரவர் சமயத்தவராக, அந்த சமயங்களிலே சொல்லிக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர் எச்சமயத்-தாரும்.

வள்ளுவன் என ஒருவன் வாழ்ந்தான் என்பதற்குச் சான்று தருவது நமக்குக் கிடைத்திருக்கும் 'திருக்குறள்' என்னும் ஒப்பில்லா மணியாய் திகழும் அரிய பெரு நூல். அளவாலே குறுகியதால் 'குறள்' எனும் பெயரையே பெற்றிருப்பினும் விரிவாலே பெருமைக்குரியதாகக் கருதத் தகுந்த நூல். இந்நூல் காட்டும் நெறியில் வாழமுடியுமா என்னும் ஐயத்தைக் காட்டியே இதனை 'உலகப் பொதுமறை' என்று அழைக்கலாமா என வாதிடுவர் உளர். உலகளாவிய நூல்கள்எனக் காணும் மறைகள் எவையும் முரண்பாடற்-றவையா? அந்தவகையில் திருக்குறளையும் போற்றலாமே என்றால் 'வேதங்கள்' என வழங்கும் மறைகள் மக்களுக்கு மறைக்கப் பட்டவை. இறைவனாலே அருளப் பட்டவை, இறையருள் பெற்றவரே பயிலத்தக்கவை, என்றெல்லாம் கூறப் பட்டும், கருதப்பட்டும் வருகையில் திருக் குறள் திருவள்ளுவன் என்னும் மனிதனால் செய்யப்பட்டது. எனவே மறைக்கப் படாதது, மறுக்கப்படாதது இதனைப் பொது மறையாக ஏற்றுக்கொள்வதா? என்னும் மருட்சி பலருக்கும்இருக்கத்தான் செய்தது. எனவே

சங்கப் புலவர்களால் திருக்குறள் அரங் கேற்ற வாய்ப்பளிக்கப்படவில்லை என ஒரு புனைந்துரையும் வள்ளுவரின் பெற்றோர்கள் இன்னார் அவர்கள் பிறந்த குழந்தைகளை ஆங்காங்கே விட்டுச் சென்றனர். அத்தகையவர்கள் யாராலோ வளர்க்கப் பட்டு தமிழுக்கும், தமக்கும் நிலைத்த

புகழைச் சேர்த்துக்கொண்டார்கள் என வழங்கப்பட்ட கதைகளிலும், வள்ளுவர் நெசவுத்தொழில் செய்து வந்தார். "நான்முகன்" என வள்ளுவ மாலையில் பாராட்டப்பட்டுள்ளமையால் கலைமகளே வள்ளுவனாகப் பிறந்தார் என்பன போன்ற கதைகளும் கயிலாயத்திலே கூத்தனின் கூத்தில் நிகழ்ந்த சம்பவத்தை இங்கிருந்த வாறேகண்டு, காட்டிய பெருந்தகையோர் எனினும் இப்படி எண்ணற்ற கதைகளைச் சொல்ல முடிந்தவர்கள் சொன்னவை தமிழில் நிறைந்துள. என்றாலும் அவர்களால் மட்டுந்தான் இப்படிப்பட்ட கதைகளைச் சொல்ல முடியுமா? எங்களாலும் முடியும் என்று சொல்லத்தொடங்கினர். பிற்காலத்திலும் தமிழில் கிடைத்துள்ள நூல்களில் தொன்மையானது "தொல்காப்பியம்" என்பதில் தமிழிலக்கிய வரலாறு எழுதியவர்களுள் யாருக்கும் மாறுபட்டநிலை இல்லை.

தொல்காப்பியர் காலத்தையொட்டி அதன் பின்னர் தோன்றியதாகத் திருக்குறள் இருந்திருக்க வேண்டும் என்பதற்கு வரலாற்றறிஞர் பல்வேறு சான்றுகளைத் தருகின்றனர். தொல்காப்பியத்திற்கு முன்னதாக எழுதப்பட்ட நூலாகத் திருக்குறள் இருக்கலாம் என்று யாரும் எண்ணவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது.

சங்க நூல்களாக ஏற்றுக்கொள்ளும் பதினெண் மேற்கணக்கு நூல்களும் ஒரு காலத்தில் எழுதப்பட்டவையல்ல. பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பான 'தொகையும்' பல புலவர்களால் வெவ்வேறு காலங்களில் பாடப்பட்ட பாடலும் கொண்டதாக விளங்குவதால்.

திருவள்ளுவரைப் போல முழுமையான ஒரு நீதி நூல் மற்றவர்கள் யாரும் செய்யாதபோது இவர் செய்ததற்குக் காரணத்தை ஆய்வோர் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை.

இதுபோன்ற நூல்கள் பல இருந்தும் திருக்குறள் ஒன்று மட்டுமே நிலைத்த தன்மையைப்பெற்றும் மற்றவைஅழிந்தும் போயிருக்கக் கூடும். விசாகதை சரவண பெருமாள் ஐயர் அவர்களைப் போல திருக்குறள் போன்று வெளியிட மற்றவர்களுக்கு வாய்ப்பில்லாதிருந்திருக்கலாம். எனவே திருக்குறள் ஒன்று மட்டுமே இப்போது கிடைத்திருப்பதில் தொன்மையான அறிவுரை தருகின்ற "தமிழ் மறை" எனலாம்.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு முதல் தமிழக இருண்ட காலம் என வரலாற்று ஆசிரியர்கள் கூறிடும் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் ஆதிக்கஞ் செலுத்தியதாக இருந்த, அகப்புறச் சுவடுகள் அதற்கு முன்பு தோன்றிய காப்பியங்களிலும் காட்சியளிக்கின்றன.

தமிழர்க்கே உரிய வாழ்க்கை முறையாக இருந்த சில ஒழுகவாறுகளின் சிறப்பு அந்தச் சமயங்களிலும் பரவி ஒளிர்ந்திருக்கக் கூடும். இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் அந்த ஒளிக்கதிர் வீச்சு இருந்தாலேயே இந்திய வட திசையில் தோன்றிய சமயங்கள் தமிழகத்தில் பரவியும் தமிழகத்தில் வேரூன்ற முடியாத நிலையைப் பெற்றிருக்கலாம் எனத் தனித்தமிழ் இயக்கத் தோன்றல் மறைமலையார் அவர்கள் தமது "தமிழர் மத"த்தில் வலியுறுத்தும் கருத்து ஏற்புடைத்தே.

எனவே, தமிழர்கள் தம் உணர்வை இழந்து பிற வீச்சுக்களைக் காணும் நிலையில் தமிழர் தம் கடமையை, வாழ்க்கை முறையை அறிவிக்கும் நோக்கோடு "வள்ளுவம்" தோன்றியிருக்கக் கூடுமென்று எண்ணுவதே ஏற்றதாகும்.

மலைப் பொழிவைக் கேட்ட சீடர்கள் எங்கெங்கோ சென்று தாம் கேட்டவைகளை பரப்பினர். அவர்களின் தொடர்பால் தமிழர்களுக்கு அறிவுரை வழங்கிட முனைந்த வள்ளுவரும் அதனையே வலியுறுத்தினர், என்று கருதுபவர்கள் தம் கருத்துக்களுக்கு "ஆராய்ச்சி" வீச்சை அளித்து வள்ளுவரும் கிறித்தவரா? என்று ஒரு கேள்வியை எழுப்பி, திசை திருப்பும்

முயற்சியில் ஈடுபடுபவர்கள் உலகம் தோன்றிய நாள்முதல் கிறிஸ்து தோன்றும் வரை -யில் உலகில் வாழ்ந்தவர்களில் சிந்தனையாளர்கள் இருந்திருக்கக்கூடும் என்பதனையோ, அந்தச் சிந்தனையாளர்களின் சிந்தனைகள் மக்களுக்குப் பயன்பட்டிருக்க வேண்டும் என்பதையோ சிந்திக்கவே மறந்து விடுகிறார்கள். "புத்தன்" அத்தகைய சிந்தனையாளன். அருகன் அத்தகைய சிந்தனையாளன். கான்பூசியஸ், சாக்ரடீஸ் அத்தகைய சிந்தனையாளர்கள் என்று ஏற்றுக்கொள்வார்களாயின் திருவள்ளுவரும் தமிழகத்தில் வாழ்ந்த தொலைநோக்குச் சிந்தனையாளர் எனக் கொண்டால் இன்னொரு சிந்தனையாளரின் தொண்டர்களின் சில செயல்களை விளக்கினார் என்று கருதுவது ஏற்றதாகாது என்பது போதறும்.

"அன்புடைமை"யை வள்ளுவம்போல் வாழ்க்கையில் பயன்படும் வகையை விளக்-கியவர்கள் இல்லை எனலாம். உயிர் வாழ்க்கையின் உயிர் அன்பு, அன்பு இல்லா உயிர் ஏதாவது இருக்குமானால் அது உயிருடன் இருப்பது அல்ல. அன்பில்லா உயிர் இருந்தால் அது பிணத்திற்கு ஒப்பாகும் என்பது "அன்பின் வழியது உயிர்நிலை" என்பதால் வலியுறுத்துவதுடன் "அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என விளக்கும் சிறப்பு அன்பில்லாத உயிர் இல்லை; இருந்தால் அது உயிராக இருக்க முடியாது. உயிரற்ற "பிணம்"தான் என்பதனை எலும்பும் தோலும் கொண்டதாக உள்ள "உடம்பு" என்பது, நீக்க மட்டும் பயன்படுவது என்பதின் அழுத்-தமே வாழ்வுக்கு அன்பின் அவசியத்தை வலியுறுத்தும்.

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது தோமையர் வாழ்க்கையில் நடைபெற்ற அருள் நிகழ்ச்சி. அதனைக் கண்ட பின்னரே வள்ளுவர் வள்ளுவத்தின் அன்புடைமையைக் கூறினார் என்பது பேதமை.

தோமையர் தமிழகம் வருமுன் அன்பை அறியாதார் தமிழர் என்பதும், உலகம் உணராதது என்பதும், முறையானதல்ல! அருட்செயலால் தோமையரின் செயல்கள் என்பது மனிதனாகப் பிறந்தவர் மறந்து மீண்டும் எழுந்த அருட்செயலுக்குப் பின் உபதேசித்த சொற்களைக் கேட்டவர்களால் இறைவன் அருளால் மட்டுமே நிகழ்வது. வள்ளுவன் மனிதர், அருட்செயல்களைச் செய்ய வல்லவரோ? என வியப்பால் கூறத் தொடங்கிய கதைகளே ஆகும். இவை இதனால்தான் பிற்காலத்து கதையாளர்கள் செவிவழிச் செய்திகள் என வள்ளுவரைப்பற்றி பலவேறு புனைந்துரைகளைப் புகுத்தி அவரைச் சிந்தனையாளர் நிலையிலிருந்து மறைத்துவிட்டனர்.

"வள்ளுவம்" பேசும் திருக்குறளை ஆக்கித் தந்த "வள்ளுவரின்" வாழ்க்கை, சமயம், செயல் இவைகளைச் சிந்திப்பதும், ஆய்வதும் சரியான செயல்கள் அல்லது தமது பொழுதுபோக்கிற்குரிய செயல்கள் எனக் கருதாமல் சிந்தனையாளர் வள்ளுவர் அவரின் சிந்தனையில் விளைந்தது "வள்ளுவம்" வள்ளுவம் வாழ்க்கைக் கூறும் நெறிமுறைகள் இன்றும் பின்பற்றக் கூடிய நெறிமுறைகள். இவைகளில் எண்ணங்களைச் செலுத்தி, ஆய்வுகளைப் பயனுள்ள வகையில் நடத்தி மாண்பயன் எய்துக. மக்களினம் தமிழினம் என தமிழ்த் தொண்டர்களின் வழி நின்று நன்னெறியில் படர

"தமிழர் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு"

என்ற உணர்வுகளுடன், நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்து தமிழைப் புறக்கணித்து வாழ்தல் நன்றோ?

ஏற்புடையதை எண்ணித் துணிக!

★



# தமிழ் மகன் தணிகைக்கோ

புலவர் கே. பி. இராமமூர்த்தி, M.A., B.Ed.,
தங்கவயல்

இலக்கியம் தேர்ந்த மேதை
இணையிலா ரசீது கோவாம்
இலக்கணக் கடலாம் தேனின்
இன்சொலால் கவரும் மேலோன்
பலகலை அறிந்த சீலன்
பண்பையே அணியாய்ப் பூண்ட
திலகமே! உமது சேவை
திசையெலாம் போற்றி வாழ்த்தும்

திருத்தணி தமிழில் சேரத்
தியாகத்தைச் செய்த தீரர்
ஒருத்தனிப் புகழை ஏற்றீர்
ஒப்பரும் சேவை மூலம்
கருத்தெலாம் இமயம் போன்று
காப்பியச் சொல்லில் தோன்றும்
அருத்தியே மிகவும் பெற்ற
அறிஞராம் ரஷீத்தே வாழ்க!

மணிமணி அமுதம் சொற்கள்
மதிநலம் கூட்டு சேர்ந்த
அணியணி புலவ ரோடு
அறிஞர்கள் பாசக் கேண்மை
பணிபணித் தமிழுக் காக
பயன்கரு தாத சேவை
துணிதுணி எல்லை காக்கத்
துயரினை ஏற்ற கோவே!

வாய்மைக்கு எடுத்துக் காட்டு
வான்தமிழ் வளர்க்கும் சேவை
தூய்மைக்கு எடுத்துக் காட்டு
துலங்கொளி ரசீது கோவாம்!
ஆய்வுதான் கோடி செய்தும்
அடக்கமே பெற்றீர் பாரில்
தாய்மொழி யோடு ஒன்றி
தனிச்சிறப் போடு வாழி!

குணங்குடி மஸ்தான் பாடல்
குன்றென விளக்கங் காட்டி
மணங்கமழ் ஆய்வு மூலம்
மாமேதை உம்மை நாளும்
வணங்கிடும் புலவர் கோடி
வையகம் புகழும் நாளும்
நுணங்கிய தமிழ்த்தாய் சேயே
நுவலரும் ஆண்டு வாழி!

# தணிகைக் கோ வாழ்க !

புலவர். பொன்னரசன், M.A.,

கண்களிலே கனிவிருக்கும்; நீண்ட மீசைக்
கற்றையிலே தமிழ்வீரம் கலந்தி ருக்கும்;
பண்ணுடனே இசைவதுபோல் மென்மை இன்பம்
பாங்கான குரலினிலே நிறைந்தி ருக்கும்;
தண்மைமிகு குரலெனினும் தமிழைக் காக்கும்
தழற்கணையே அக்குரலில் தாவி நிற்கும்;
திண்மைமிகு உடலமைப்பும், மனத்தில் அன்பும்
சேர்ந்திருக்கும் உயர்மனிதர் இரஷீத் ஆவார்!

பகுத்தறிவுச் சுடர்ஏந்தித் தமிழர் நாட்டில்
படர்ந்திருக்கும் அறியாமை இருளை ஓட்டும்
மிகச்சிறந்த செயலாலே பெரியா ராக
விளங்குபவர்; தெளிவான அறிவி னாலும்
பகைவரையும் மயக்குகின்ற பேச்சி னாலும்
பார்போற்றும் அண்ணனைப்போல் வாழும் நல்லார்!
தகவுடைய தமிழ்மானம் காத்து நிற்கும்
தன்மையினால் கலைஞரைப்போல் திகழும் செல்வர்!

போராட்டக் களத்தினிலே பூத்து வந்து
பூந்தமிழின் மணம்பரப்பும் புதிய முல்லை!
ஈரோட்டுப் பாதையிலே செல்லு கின்ற
எழுச்சிமிகு பெரும்படையின் தலைமை வேழம்!
நீரோட்டத் தில்ஓடம் செலுத்தி டாமல்
நெருப்போட்டத் தில்தூய கருத்தென் கின்ற
தேரோட்டம் செலுத்துகின்ற மன்னர்! என்றும்
செந்தமிழ்போல் இனிதாக வாழ்க! வாழ்க!

விழா நாயகருக்கு வாழ்த்துக்கள் !

சுந்தரம் ஸ்டுடியோ
காமராஜர் தெரு,
திருவள்ளூர்-602001,



# கொள்கை வேந்தன்.

க. சுப்பு, பி.ஏ., பி.எல்.,
R. 5, லாயிட்ஸ் குடியிருப்பு,
சென்னை-14.

கொள்கைப் பிடிப்பும் அயராத உழைப்பும் தன்னம்பிக்கையும் கொண்டு தளராது பணியாற்றி வரும் 'தணிகைக்-கோ' டாக்டர் என். ஏ. ரஷீத் அவர்களின் 57வது பிறந்த நாளையொட்டி மங்கலங் கிழார் மன்றத்தார் மலர் ஒன்று வெளி-யிடுவது கண்டு பெருமைப் படுகிறேன். மன்றத்தினரை மனமாரப் பாராட்டு கிறேன்.

மொழி இன உணர்வுகள் மங்கிக் கிடக்-கின்ற நேரத்தில் திரு. ரஷீத் போன்றவர் களின் பொது வாழ்வை எண்ணிப் பார்ப்பது நம் மக்களின் எழுச்சிக்குப் பெரிதும் பயன்படும். மனித உரிமைகளுக் :காகவும், மொழி உரிமைக்காகவும் ரஷீத் அவர்களோடு இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அவர் கண்துஞ்சாது பணியாற்றிய நேர்த்தியினை எந்தக் கழகத் தோழனும் எண்ணிப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அந்தப் பேராளருக்கு ஐம்பத்தேழு வயது ஆகிவிட்டதுதான் நம்பமுடியாத செய்தியாக இருக்கிறது. அவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கும், மொழிக்கும் தொடர்ந்து பணியாற்ற விழைகிறேன், வாழ்த்துகிறேன்.

சிறந்த முறையில் ஒலி, ஒளி அமைக்கச் சிறந்த இடம்:

**அம்பிகா சவுண்டு சர்வீஸ்,**
திருவள்ளூர்-602001.

உரிமையாளர்:
**T. S. சண்முகம்,**
தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி



# தணிகைக்கோ ரசீது வாழ்க!

கவிஞர். நாவலாசிரியர் செந்தமிழ்ச்செழியன், M.A.,
129, எம். ஆர். நகர், சென்னை-51.

மலையினைப் போன்ற தோற்றம்
மலைத்திடும் மீசைக் காட்டில்
கலையெனும் சொற்றேன் வீழக்
கலந்ததோ கறுப்பு வண்ணம்?
நிலையினில் திரியா நெஞ்சர்
நேர்மையில் பெரிய வீரர்
தலையினில் ஐம்பத் தேழாம்
அகவையைக் கண்டார் வாழ்க!

மதியாதார் வாசல் தம்மை
மதிப்பவர் தமிழுண் டென்றால்!
நதியாவார் பேச்சில் நல்ல
நயமான வார்த்தைக் கோட்டை!
சதியாவார் தமிழுக் கென்றால்
சாட்டைகள் உண்டென் றோதும்
புதியநல் ஒட்டக் கூத்தர்
பொய்யிலாப் புரட்சி வீரர்!

**இரசீத்தாம்** தோழர் மூத்தார்
இன்றமிழ் எல்லை மீட்டார்
பரிச்சித்துப் பார்த்தால் உள்ளம்
பச்சிளங் குழந்தை இல்லம்!
வரட்சியாய் ஒதுங்கு வோர்க்கும்
வந்துநல் மழைபோல் பெய்வார்!
இரட்டைநாக் கில்லார் நெஞ்சில்
நேர்ந்ததைப் பிரச விப்பார்!

தணிகையில் தோன்றி எங்கள்
தமிழுக்குள் உள்ள மூன்றி
பணிகையில் போற்றிப் பாழும்
பகைவரைச் சொல்லம் பேற்றிக்
குனிகையில் குட்டார் குட்டக்
குனியவும் மாட்டார் எங்கள்
தணிகைக்கோ ரசித் தென்றும்
தனியான தலைவன் என்பேன்!



# தீருமோ வேதனைகள்......?

குருவை. உலகநாதன் எம்.ஏ.,பி.எட்.,
முதுநிலை ஆசிரியர், (P. G. Teacher)
அரசினர் மேநிலைப் பள்ளி,
திருத்தணி-631209.

பாரதிக்கு நூறாண்டு பாரதம் காணும்இன்று
ஊரென்ன சொல்லுமடா—தமிழா
பேருக்கு வாழ்த்துகின்றாய்.

"பா"ரதத்தின் சாரதியாய்ப் பைந்தமிழைக் காத்தவனே
தீரனென்று சொல்லிவிட்டால்—தமிழா
தீருமோ நன்றியெல்லாம்.

ஆயிரம் சாதிவைத்து "அவனை"யும் போற்றுகின்றாய்
தீயினை உண்டுவிட்டாய்—தமிழா
தீருமோ வேதனைகள்.

மாதரைத் தாழ்த்துகின்ற மூடரைக் கொல்லு என்றான்
மாதையே கொல்லு கின்றாய்—தமிழா
மானத்தைக் கொன்றுவிட்டாய்

எச்சிற்குப் போராடும் ஏழையை மறந்துவிட்டாய்
பிச்சரைக் காத்தலின்றி—தமிழா
மெச்ச நீ வாழ்தலுண்டோ.

ஆயிரம் தெய்வமென்றே மக்களைப் பிளந்துவிட்டாய்
தாயன்பு போற்றிநின்றால்—தமிழா
தரணியில் போரு முண்டோ.

உங்கள் சுவைக்கு ஏற்ப அறுசுவை உணவுகளைச்
சமைத்துப் படைப்பவர்

**B. K. விஸ்வநாத அய்யர்,**
29, கனகவல்லிபுரம் தெரு,
திருவள்ளூர் - 602001.

மஞ்சள் நீராட்டு விழா — காதணி விழா — வரவேற்பு விருந்துகளுக்கு
அணுகவும்.

# உரை தந்த வேந்தன்

பெருங்கவிக்கோ. வா. மு. சேதுராமன்,
சென்னை.

> வேகச் செயலும் நல்வெற்றி உழைப்புகளும்
> தாகப் பிறர்க்குதவும் சால்புச்சீர்—மோகம்தான்
> முத்தமிழ் பற்றும்தி முன்னேற்றக் கழகத்தின்
> உத்தமர சீத்தண்ணன் ஓர்!

அல்லாவின் அருளினாலே
  ஐம்பெரும் கண்டத்துள்ளும்
நல்லாரைப் பழகியுள்ளேன்!
  நாநிலத் தவர்கட் குள்ளே
எல்லா நற் பண்பும் அன்பும்
  இதயத்தால் உயர்வும் கொண்ட
வல்லபேர் உழைப்புக்கே என்
  வாஞ்சைகொள் இரசீத்தண்ணன் ஆம்!

நெஞ்சினை நிமிர்த்தும் போக்கு!
  நெறிபிற ழாத நோக்கு!
தஞ்சமாய் வறுமை சூழத்
  தான் வாழ்ந்த நிலையிலேயும்
கிஞ்சிற்றும் சோரம் போகா
  கிளர்ச்சிக் கொள் மேன்மை வாழ்வு!
அஞ்சாத ஆற்றல் யார்க்கும்
  அடங்காத செறிவின் மேன்மை!

ஊருக்கே உழைப்ப தற்கு
  ஓடிடும் கால்கள் ஏழை
யார்க்கும் வாழ்வு தேட
  நன்குழை கைகள் சொந்த
சீருக்கே வாடக் குடும்பம்
  செப்பத்தைக் கூடப் பாரா
பாருக்கே நன்மை தேடப்
  பறந்திடும் இதயம் கொண்டார்!

தனக்கென்ன கிடைக்கு மென்ற
  தாகத்தை விட்டு நம்மின்
இனம் தமிழ் தமிழர்க் காக
  என்னென்ன கிடைக்கு மென்று
மனத்தினால் எண்ணி மு.க
  வழியினில் செப்பமாக
தனம் பணம் கருதாவாறு
  தானுழை ஆற்றல் தொண்டர்!

எப்படித் தானிவர் தம்
  இல்லத்தி லுள்ள மக்கள்
செப்புநல் குடும்பம் ஓங்கு
  செம்மையில் வாழ்கின்றாரோ?
தப்பாக கூறேன் ஆனால்
  தன் பெண்டு பிள்ளை எல்லாம்
அப்பப்பா இவர் மறந்து
  ஆற்றிடும் பணியோ விஞ்சும்

தன்மான வீரர் செவ்வேள்
  தணிகையை மீட்டுத் தந்தோன்!
நன்மான கொள்கைக்கோ எந்
  நாட்டுள்ளும் துணிந்து சென்று
கன்னல் நேர் தமிழுயர்த்தும்
  கடமையின் காவலர் கோ!
மின்னல் போல் பேச்சு நேரம்
  வீணாக்கா குறித்த ஆக்கம்!

ஈழத்தின் நாடு சென்றேன்
  இவரோடே அங்கே, ஆற்றல்
வாழத்தான் வழிகள் காட்டும்
  வரலாற்றைப் படைத்தல் கண்டேன்
ஆழநற் புலமை யாளன்!
  அருங்குணக் குடியான் பாட்டு
பேழையைத் திறந்தே செம்மை
  திற உரை தந்த வேந்தன்!

எத்தமிழ் கூட்டம்! எங்கே
இலக்கியம் அரசியல் சேர்
அத்தமிழ் கூட்டமெல்லாம்
ஆங்காங்கே செவி செல்வத்தை
உத்தமன் கேட்பான் ஏதும்
ஒழுங்காகச் செய்வான் சின்னப்
புத்திகள் அண்டாச் சிங்கம்
புடம் போட்ட மான வேந்தன்!

சிறந்தபேர் தி.மு.க. வாம்
செந்தமிழ் இன இயக்கம்!
அறந்தவறாத பாதை
அயராமல் செல்லல் இன்னோர்

துறந்தவர் போல வாழும்
தூய்மையால் அன்றோ? விந்தைப்
புறநானூறுக்கும் அண்ணன்
பூரித்தே வாழ்த்துகின்றேன்.

மதிக்கின்றேன் ரசீத்தண்ணன்தன்
மனிதாபி மானம் தன்னை!
மதிக்கின்றேன் அவரின் தாள்கள்
வழிபோகும் பாதை தன்னை!
மதிக்கின்றேன் எனது உள்ளம்
மாண்புசால் சிறையில் வைத்து
மதிக்கின்றேன் அண்ணா! வாழ்த்தி!
மறவாதே என்னை வாழ்த்து!




தடைகள் பல வந்தாலும்
தனித்தேதான் வாழ்ந்தாலும்
தளராத மனதுடைய தணிகைக்கோவே-
தமிழார்ந்த சான்றோனே!

வாழிநீ பல்லாண்டு!

அன்பன்,

**மணவைத் தம்பி**

**மணவை அச்சகம்**

75, கே. ஆர். கோவில் தெரு,

சென்னை-33.




# “ தமிழுக்குத் தேவை ”

டாக்டர் தமிழன்பன், M.A., Ph.D.,
புதுக்கல்லூரி, சென்னை-14.

பால்நிறம் மாறாத
அடர்ந்த மீசையால்-தமிழ்ப்
பகையை அதட்டும்-இவர்,
இலக்கியத் தும்பிகளுக்கு
ஒரு
பொதுவுடைமைப் பூங்கா.

கனிவும் இனிமையும்
இவர் மேற்பார்வை போட்டே
மற்றவர்க்குக்
கடிதம் எழுதும்!

காஷ்மீரச் சரிவுகளில்
ஈரம் தீரும் போது-இந்த
ரஷீதின் இதய வங்கிக்கு
மனுப் போடலாம்!

வளரும் வயதுகளை
வாலிபத்தால் கத்தரிக்கும்
தணிகைக் கோ-
முற்போக்கு எண்ணங்களின்
முகாம்!

புகழுவோம்—அதனால்
இவருக்குப்
போய்ச்சேருவதும் ஒன்றுமில்லை-தமிழ்
மகளுக்குச் சில
மகுடச் சிறகுகள் கிடைக்கலாம்!

இவர்
இன்னும் பல்லாண்டு வாழ்வது
இவருக்குத் தேவையில்லை-
தமிழுக்குத் தேவை!

''இந்துஸ்தானமே! எல்லாக் கதைகளிலும்
உனது கதைதான் சோகமயமானது''
கவி இக்பால் சொன்னான்! இன்றளவும் உண்மை!
அறிந்தே தொண்டாற்றும் அண்ணன் வாழ்க!



**M/s. குலமாதா டெக்ஸ்டைல்ஸ்,**
**2-வது தெரு, சஞ்சீவிராயன்பேட்டை**
திமிரி அஞ்சல்

வ. ஆ. மா.

# அதிசய ஆலமரம்



திரு. த. சலாவுத்தீன், M.A., M.Ed.,
தலைவர், புஷ்கின் இலக்கியப்பேரவை, சென்னை.

ஆஜானபாகுவான தோற்றம்.
வீரியமுள்ள மீசை
எப்போதும் ... ... ... ... ... ...
வெண்மையான உடைகளில்
தோற்றமளிக்கும் வசீகரம்.

தீட்சண்யமான பார்வை.
அநீதிகளுக்குத் தலைசாய்க்காத
உறுதியான நெஞ்சம்.

தமிழகத்தின் இலக்கிய அசைவுகளைப்
பதிவாக்கி வைத்திருக்கும்
நடமாடும் இலக்கியப் பெட்டகம்.

இலக்கியச் சுவைஞராயிருப்பதில்
சுவையதிகம் என்றறிந்தவர்.

தன்னை இசுலாமியரென்று
தானே சொன்னாலன்றி
தெரிந்து கொள்ள முடியாத
வெளித் தோற்றம்.

ஈமான் நிறைந்த உள்ளம்.
இறைவழியில் இளைஞர்களை
நடக்கச் சொல்லி
உயர்வழியைக் காட்டிநிற்கும
தென்றல் காற்று.

நிலாக் கவியரங்கங்களை நடத்தி
உலா வரும்
இலக்கியத் தாரகை.

அரை நூற்றாண்டு
அனுபவங்களை
அடக்கியாளும்
அழுத்தமான சொல்லாட்சியின்
சொந்தக்காரர்.

ஞான வள்ளல்
கான வள்ளல்
குணங்குடி மஸ்தானென்னும்
ஜோதி வள்ளல்
பாடல்களுக்கு
இவரின் கைகளும்
அர்த்தம் சேர்த்தன.

இவர் யார்?
இவர் தான்
திருத்தணி ந. அ. ரஷீத்.

திருத்தணி
வேரின் பெயர்
ரஷீத்
மரத்தின் பெயர்.

ஐம்பத்தேழு ஆண்டுகளாய்
அழுத்தமாக
இலக்கிய விழுதுகளை இறக்கி
வேடிக்கை பார்க்கும்
இவர் ஓர்
அதிசய ஆலமரம்.

# இலக்கியச் சித்தர் வாழிய !

பாவலர். கு. ஆதிகேசவன், M.A.,
தங்கவயல்

வெளிர்நீல தேகம் வெளுத்த உள்ளம்
வென்பனியால் வரைந்தவெண்பட்டு மீசை
தெளிவூட்டும் செயல்கள் தோற்றமோ நெடுங்குன்றம்
தெளிவான சிந்தனைகள் தேங்கிய திருநெற்றி
சுளையாக இனிக்கின்ற செந்தமிழ் சொல்லாடல்
சுடர்விட்டொளிரும் சுவர்ணக் குவியல்
திளைக்கும் அன்பில் தோயும் இவர்தான்
தணிகைக்கோ எங்கள் தகைசால் ரசீதண்ணு!

தூங்கும் புலிகளைத் தட்டி எழுப்பி
தணிகையை மீட்டிட தனிப்போர் கண்டார்
தீங்காய் வரைந்த தமிழ்தேசப் படத்தை
துகைத்து வடக்கெல்லையை வென்ற போர்வாள்!
தாங்குபுகழ் வரலாற்று தர்பாரில் தொங்குமீசைக்கு
சிங்காதனம் போட்டுவைத்து தூரநின்ற ஏனுதி!
வீங்குதோள் பூரிக்க வெஞ்சிறை தனையேற்று
வியன்மிகு தணிகையை மீட்ட தணிகைக்கோ!

கவிமணி குணங்குடியின் கவிமழைத் தேக்கம்
கரைபுரள வடிகால் கவினூற வெட்டியவர்!
விவரமாய் வார்த்தைகளின் வயிறுமுட்ட தேனூற்றி
வரகவி குணங்குடியின் மணிபாடல் உரைகண்டார்!
அவியாத புகழோடு, அவரிங்கு தமிழ்ச்சிவிகை
ஏறி உலாவரும் இலக்கியச் சித்தர்!
கவிந்திடும் காழ்ப்பு நெடிச்சல் களைந்தோட
கடிமணம் பரப்பிவரும் காட்டு மல்லிகை!

கனித்தமிழர் விடுகின்ற கண்ணீர்க் கடலில்
கலமாக மிதக்கின்ற கரிஈழத்தீவு, அதில்
நனிகெட்டு நலிகின்ற நந்தமிழார் அவலந்தனை
நேரில்கண்(டு) நெஞ்சம் நெகிழ்ந்த வள்ளல்!
கனிவுடன் அவர்கவலை களைந்திட ஏங்கி
கண்ணீராய் சிந்தியவை இரத்தத்துளிகளே!
குனித்தது தமிழ்பெருங்குடிதான் என்றால்
கொதித்திடும் அவரது குருதிப்புனல்! உண்மை

மங்கலங்கிழார் இலக்கிய மன்றம் தலைவருக்கு
மனமுவந்து எடுக்கும் விழாவிற்கு ஈடுண்டோ?
சிங்கக்குட்டிக்கே சிங்காரம் செய்கின்றார்
சிறந்திடுக அவர்தம் சீரியச் செஞ்செயல்கள்!
பொங்கருவி ரசிதண்ணு பொழிகின்ற பாசத்தால்
பண்பின் உச்சிக்கோடு பைந்தேன் தமிழ்க்கூடு
தூங்காமணி விளக்காக துலங்குக அவர்புகழ்
தூயவர் ரசீதண்ணன் தொண்டுபல வாழியவே!

# "அவருக்குப் பேராசை"

— இன்குலாப் —

54, ஜானிஜான்கான் சாலே, சென்னே-14.

திருத்தணி ரஷீது அவர்கள் இன்றும் ஒரு மக்கள் தொண்டராய்ச் செயல்படுவதற் -காகவும், தேசிய விடுதலேப்போரில் சிறை புகுந்த இப்போராளி இன்னும் தேசம் விடுதலே பெறவில்லே என்ற உண்மையை உரைப்பதற்காகவும்

உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உண்மையான விடுதலே கிடைக்கப் புரட்சியை முன் மொழியும் துணிவிற்காகவும்,

தமிழினம், எல்லா ஆதிக்கங்களிலும் இருந்தும் விடுதலே பெறவேண்டும் என்ற தன்மான உணர்விற்காகவும்,

வன்முறைக் கருவியான அரசின் கோர நகங்கள் மக்களேக் காயப்படுத்தும்போ தெல்லாம் எதிர்ப்புக் காட்டும் இவரது ஜனநாயகப் பணிக்காகவும்,

இவர் பல்லாண்டு வாழ்க என்று வயதி லும் அனுபவத்திலும் குறைந்த நான் வாழ்த்த விரும்புகிறேன்.

திரு. ரஷீது அவர்கள் பதவியில் அமர வேண்டியதில்லே — மக்கள் மனங்களில் அமர்ந்திருக்கின்ருர்.

அவருடைய பேச்சும், எழுத்தும், செய லும் சமூக மாற்றத்திற்காகப் போராடும் சக்திகளுடன் இணேந்து நிற்க வேண்டும். —இதுவரை நின்றதுபோல.

'தியாக வடுக்களின் சுவடாகப்போன அவர் இன்னும் பல வடுக்களே ஏற்பார்'' ஏனெனில் அவருக்குப் பேரகாசை உண்டு மக்கள் மீது.

அவரை வாழ்த்தும் வயதும் எனக்கில்லே. என்னுடைய வாழ்த்தால் உயரும் நிலேயும் அவருக்கில்லே.

பதவியிலிருக்கும் எவருடைய கடைக்கண் அசைவுக்காகவும் அசையாத எனது பேனு திரு. ரஷீது அவர்களுக்காக நகருகின்றது என்ருல்..

அவர் இதுவரை உழைத்ததற்காக ஓய்வு கொள்ள விரும்பாத ஐம்பத்தேழு வயது இளேஞர் என்பதற்காகத்தான்.



உங்கள் குழந்தைகள் சிறந்த முறையில் கல்வி பயில இன்றே எம் பள்ளியில் சேர்த்திடுவீர்!

**கண்ணன் நர்சரி பள்ளி**

**&**

**பிரைமரி பள்ளி**

பெரிய தெரு,
கடம்பத்தூர்-631203.

# வளமோடு தழைத்து வாழி!



தத்துவக் கவிஞர்
குடியரசு
சென்னை.

பொன்னளந்து வாழ்த்துவனோ! மங்கி டாத
புகழளந்து வாழ்த்துவனோ! இரஷீத் அண்ணன்
தன்னலமே இல்லாத சேவைக் காக
தமிழளந்து வாழ்த்துகிறேன் தணிகைக் கோவே!
உன்வயது ஐம்பத்து ஏழென் றாலும்
உன்னிளமை தமிழிளமை! இல்லை இல்லை
என்கவிதை போலிளமை! நீங்கள் என்றும்
ஈடற்ற வளமோடு தழைத்து வாழி!

மஸ்தானின் பாடலது வாழ்வை வெல்லும்
மருந்தான உனதுரையால் தமிழும் நிற்கும்
ஞானத்தால் உயர்ந்தோனே காலம் வென்றாய்
"ஞானத்தின்" உரிமையுளான் வாழ்த்து கின்றேன்.

M/s. ஞானம் டெக்டைல்ஸ்ஸ்,
மொத்த ஜவுளி வியாபாரம்,
செல்வ விநாயகர் கோயில் தெரு,
விளாப்பாக்கம். வ. ஆ. மா.

52



# தணிகைக்கோ ரசீத் வாழ்க!

கவிஞர். அரு. அருமைநாதன்
ஆசிரியர் ''தாய்மண்''
சென்னை.

தணிகையை மீட்பதற்கே தலையாய தியாகம் செய்து
தளராமல் பாடுபட்ட தன்மான வீரரிவர்!
பணிசெய்தே இந்நாட்டு பண்பாட்டை வளர்ப்பதற்கே
பகல் இரவாய் பம்பரமாய் ஓடி ஆடும்தொண்டரிவர்
இனிஒரு விதி செய்தே இன்பத்தமிழ் மொழியதனை
இடர் ஏற்றே இல்வாழ்வை துறந்தே நாட்டில்
கனி இருக்க காய்கவர்ந்தே கடமை யாற்றி
கன்னித் தமிழ் காப்பவனே கனிவே வாழி!

எழுத் தாற்றல் பேச்சாற்றல் சொல்லி லாற்றல்
எழுச்சிக் கொள் செயலாற்றல் எதிர்ப்பில் ஆற்றல்
மழுப்புவதில் வல்லவர்தம் மனத்தாற்றல் மாய்த்து வெற்றி
காண்பதிலே இருக்கும் ஆற்றல் அடடா தியாக
விழுப்புண்கள் ஏற்பதிலே உடலில் ஆற்றல்
வீண் வித்தை தெரியாத உள்ள ஆற்றல்
வழுவாத தூய்மையுள்ளம் பெற்ற அண்ணன்
வாழ் நாளில் ஏற்றம் பலபெற்று வாழ்க!

மீசை வைத்தார் மேதினியை காப்பதற்கே கள்ள
மீசையரின் வலைகிழித்தே மீண்டு வந்தார்
ஆசை காட்டி அவனிதனை ஏய்க்கும் பொல்லா
அற்பர்களின் தலைமைத் தள்ளி தன்மா னத்தின்
பாசநிலை தவழுகின்ற பண்பாட்டின் தலைவர் என்றும்
பழந் தமிழர் வழிகாக்கும் ''கலைஞர்'' காட்டும்
நேசவழி சென்று மோசு வழியை மாய்க்கும்
நேர்மை யாளன் **தணிகைக் கோரசீத்** வாழ்க!

# வெற்றி கொள்க!

பொன்னடியான்
"முல்லைச்சரம்"
சென்னை-26.

தணியாத தமிழ்ப்பற்றின் வடிவ மான
தணிகைக்கோ ரஷீத்அண்ணன் எந்த நாளும்
பணிவுக்கே இலக்கணமாய் விளங்கும் மேலோர்;
பண்பிற்கும் பண்பூட்டும் பாங்கு கொண்டார்;
அணிதமிழின் பெருமைக்குப் பெருமை சேர்க்க
அன்றாடம் உழைத்திருக்கும் அவரின் உள்ளம்
கனிந்தினிக்கும் செம்பழமாய்க் கனிந்த உள்ளம்;
கற்களையும் கனிந்துருக வைக்கும் உள்ளம்!

திருத்தணிகை மீட்புப்போர் வெற்றி கொள்ள
தேனீபோல் பறந்துழைத்த அவர்உ ழைப்பைத்
திருத்தணிகை மட்டுமல்ல தேய்வில் லாத
தென்னகமும் நன்கறியும், எந்த நாளும்
ஒருத்தர்தயை இல்லாமல் வாழும் அன்னார்
உயர்விந்த தமிழ்நிலத்தின் உயர்வே என்று
குறித்துக்கொண் டால்நமது மனத்தில் வந்து
கொஞ்சுமவர் இல்லத்தில் மகிழ்ச்சி என்றும்!

இந்நூற்றாண் டில்வாழ்ந்த அறிஞ ருள்ளே
இணையில்லாப் பேரறிஞர் திரு. வி. க. இம்
மண்பெருமை பெறுவதற்கே பாடு பட்ட
மாபெரிய பாட்டாளர் தலைவ ராகும்!
தன்நலமே அணுகாது வாழ்ந்த அந்தத்
தமிழ்ப்பெரியார் வழிநடந்து தமிழ்ச்சீர் காத்த
அண்ணல்மங் கலங்கிழார் அடியை ஒற்றி
அன்றாடம் வாழும்ரஷீத் அண்ணன் வாழ்க!

வெண்மீசை வீரரிவர் இன்னும் நூறு
வெற்றிகளைப் பெற்றிடவே வாழ்க! வாழ்க!
அன்பிருக்கும் தேன் நெஞ்சம் தெளிந்த நெஞ்சம்
அறிவுநெஞ்சம் அயர்வறியா உழைப்பு நெஞ்சம்
பண்படுத்தப் பட்ட நெஞ்சம் துயரண்டாது
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க!
தன்மானத் தடம்பற்றித் தளர்வில்லாமல்
தலைநிமிர்ந்து போகுமிவர் வெற்றி கொள்க!

# அறிஞர் ரசீது வாழ்க!

கவிஞர். சி. சே. அறவாணன்,
தங்கவயல்.

ஒளிமிக்க கண்களிலே
கருணைத் தேக்கி!
ஒப்பிலா சிந்தையிலே
கொள்கை தேக்கி!
விளிக்கின்ற வார்த்தையிலே
இனிமை தேக்கி!
விரிந்திட்ட இதயத்தில்
தூய்மை தேக்கி!
தெளிந்திட்ட ஞானத்தில்
கலைகள் தேக்கி!
தெளிவுரையில் மஸ்தானின்
பாடல் தேக்கி!
அளிக்கின்ற கரங்களிலே
கொடையைத் தேக்கி!
அருந்தொண்டு ஆற்றும்மேதை
ரசீது வாழி!

கடமையினை பிறப்புரிமை
என்று சொல்லி!
கணக்கற்ற சேவை செய்து
புகழ்ச மைத்து!
மடமையினை தடம்புரள
வைத்த கோவாம்!
மனமறிய பிறர்க்கின்னா
செய்யாத் தீரர்!
உடமையெனக் கொண்டதெல்லாம்
நலிந்த மக்கள்
உரிமையுடன் வளவாழ்வு
வாழ்வ தற்கே
அடலேறு என விளங்கி
எல்லை மீட்ட
அறிஞருள் அறிஞர்நம்
ரசீது வாழி!

பெரும்புலவர் சிவ சங்கரனார்
**வாழ்த்து**

தாங்கள் நூறு ஆண்டு வாழ்ந்து
பொதுப் பணி வீரராக ஈரோடு
அய்யா அவர்களைப் போல், வாழ்க என
வாழ்த் துகிறேன். வணக்கம்.

**பாச. சிவசங்கரன்,**
சிவம் லாரி சர்வீஸ்
ஆற்காடு, வ.ஆ. மா.



# இன மொழித் தொண்டர் இரசீத்

சிலம்பன்

(துரை. சிவசுப்பிரமணியன், திருத்தணி)

வடவெல்லைப் போர்க்களத்தில் வீரங் காட்டி
வாளெடுத்த கைகளுக்குச் சொந்தக் காரர்!
திடமிக்க தளபதியின் உற்ற தோழர்
தினவெடுக்கும் தமிழ்வீர மறவர்; நாங்கள்
"விடமாட்டோம் வேங்கடத்தை, பண்டை நாட்டின்
வரலாற்று எல்லையிது" என்றொ லித்த
இடமாகும் தணிகைநகர் வீதி யெல்லாம்
எதிரொலிக்கும் பெயருக்கும் சொந்தக் காரர்!

சொல்லடியும் சோதனையும் பட்டுப் பட்டு
சுடர்விட்ட தொண்டுமனங் கொண்ட தாலே
'இல்லை'களே இல்லத்தில் இனிது வாழ
இடங்கொடுத்து இடர்ப்பட்டு இருந்த காலத்
தொல்லைகளை நினையாமல் சிறையில் வாடித்
துயர்பட்ட வரலாற்றின் வரிக ளானார்!
எல்லையிலே அமைந்திட்ட ஞான தேவன்
எதனாலோ இவர்நினைவை மறந்து போனான்!

மனங்குடிக்கும் பக்திநெறி நீர்சு ரக்க
மதிநிலத்தைத் தோண்டுங்கள் கிட்டும் என்று
குணங்குடியார் எழுதிவைத்த பாட லுக்குக்
குறைவில்லா உரையாத்த அடியார்; இவரால்
மணம்வீசும் மங்கலத்தார் மன்றம்; தணிகை
மாணவர்க்குத் தமிழ்ஊக்கத் தேர்வு; என்று
இனமொழிக்குத் தொண்டுசெய்யும் இரசீத் எந்தன்
இதயத்தில் இடம்பிடித்தார் வாழ்க! வாழ்க!

# தாயுமானவர் தமிழ்க்கிழாரே!

*பொதட்டூர்* **புவியரசன், எம்.ஏ.,பி.எட்.,**
மாவட்ட அமைப்பாளர், பகுத்தறிவாளர் கழகம்,
2, காந்தி சாலை, திருத்தணி-631209.

உச்சி வேளையில்
வயல் சோலையில்
உதிரத்தைப் பாலாக்கி
வியர்வை இனிப்பிட்டு
எமக்களித்துத்தம்
மனிதக் கூட்டை
ஒட்டைக் கூடாக்கிய
எம் அன்னையரைப்போல்,
எந்த நேரமும்
தறியோரம் வந்து
உயிரைத் தமிழாக்கி
எமக்கூட்டி வளர்த்ததால்
தாயுமான தமிழ்க்கிழாரே!
சூத்திரனுக்கு
சூனிய அறிவே
சூத்திரமென்ற
பிரமன் எழுத்தை
மாற்றி எழுதியதால்
பிரமனுக்கும்
பிரமன் நீ
உயிர்க்காற்றை
உள்ளிழுத்த போதெல்லாம்
உன்
மோகனக்குரலால்
தமிழ்க்காற்றாக்கி
புண்ணுக்குப் புனுகு
பூசிக் கொண்டிருந்த
எங்களை
கண்ணுடையோராய்
ஆக்கியவன் நீ

நடந்து நடந்து
உன் பாதக் கமலம்
அழுக்கேறிய
போதுதான்
எங்கள்
கல்லாமை அழுக்கு
கரைந்தது கொஞ்சம்
புழுதியில் நடந்து
நெடும்பயணம் கண்ட
உன் சமுதாயக் கால்கள்
தூசி படிந்தபோதுதான்
பல தமிழ்ச்சுவடிகள்
இங்கே
தூசிதட்டப்பட்டன

அன்று
கைத்தறி நாடாகூட
நீ தந்த
தமிழைத் தான்
சுமந்து ஓடியது
நாடி நரம்புகளில்
மூளைச் சுவடிகளில்
உன் எழுத்தாணி
நாவால்
எழுதிவைத்து
உயிரெழுத்துக்கு
உயிர் கொடுத்து
மெய்யெழுத்தின்
மெய்யுரைத்துப்
போனதால் இன்று

வடக்கில் வாழ்கிறது
வேங்கடத் தமிழென்று.
தேர்தலுக்குமுன்
ஏழைக்காக
உருகி உருகியே
தேர்தலுக்குப்பின்
இதயம்
இல்லாமற்போன
அரசியல்வாதி,
வீட்டுக்கு வீடு
ஓட்டுப்பிச்சை
கேட்பது போல்,
இராப்பிச்சைக்காரனாய்
கதவுகளைத்தட்டி
அன்று நீ
தமிழ்ப்பிச்சை
தந்ததைத்தான்
இன்று
சோற்றுப்பட்டைக்கு
சொகுசாய் விற்கிறோம்.
அன்று
தீபாவளியில் மட்டுமே
துக்கம் கொண்டாடினாய்;
இன்றிருந்தால்
தன்மானத் தமிழரின்
தமிழுணர்வுகண்டு
தொடர்துக்கம்
கொண்டாடித்
தொலைந்தே
போயிருப்பாய்.

## அவர் வழிவந்த எல்லைப் போர் வீரா! தப்பி விட்டாய் நீ

தொண்டை மண்டலத்துத்
தொன்மைத் தமிழனை
சுந்தரத் தெலுங்கு
சுவீகாரமெடுக்குமுன்
மந்திரத் தமிழைத்
தெளித்து மீட்ட
எல்லைப் போர்வீரா!
உன்
வெற்றிக் குவியலுக்கு

பட்டயங்களைப்
பரிசளிப்பதென்றால்
உன்
மீசையில் ஓடும்
வெள்ளியிழைகள்
ஒவ்வொன்றுக்கும்
ஒருகோடி
தரவேண்டுமே.
எனவேதான்

தமிழர் தம்
இதயத் தாமரையில்
இரும்பாய்ப்
பதிந்து விட்டாய்
எப்படியோ
தரமற்றோர் தரும்
தாமிரப்பட்டயத்தில்
தப்பிவிட்டாய்
சரிதான்.

# தணிகைக்கோ ரஷீது அவர்கள்

P. கிருஷ்ணன், M.A., B.Ed.,

தணிகைக்கோ எனும்பெயரைத் தாங்கும் நல்லோன்
தணிகைநலம் தன்னலமாய் எண்ணும் வல்லோன்
தணியாத உழைப்பதனுல் கல்வி கற்ருேன்
தன்பணியே கடமையென உழைக்கும் மேலோன்,
பிணியாகித் துன்பங்கள் தந்திட் டாலும்
பின்னிடையா துழைத்துயரும், துறவி போன்ருேன்
அணியான தமிழுக்கே சேவை செய்வோன்
ஆண்டுபல வாழ்கவென வாழ்த்து கின்றேன்.

கல்லூரிச் சென்றவரும் கற்ற தில்லை;
கற்றவர்கள் களித்திடவே கவிகள் செய்வான்,
நல்லூழால் தணிகையிலே பிறந்த நல்லோன்
நன்மைசெய முன்னணியில் நிற்கும் வல்லோன்,
வில்லூன்றி விடுபட்ட அம்பைப் போன்று.
வீரவுரை யாற்றுவதில் நிகரில் லாதான்.
தொல்லூழால் தொல்லைபல வந்த தேனும்
சோர்வின்றி தொண்டாற்றும் தூய்மை யாளன்.

பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசை யற்று
பொதுத்தொண்டே கொள்கையெனக் கடமை யேற்று
தன்னலமே கருதாமல் தமிழ்த்தொண் டாற்றி
தரணிக்குப் பலநூற்கள் படைத்துத் தந்து,
சொன்னலமும், சுவைநலமும் மொழியில் கண்டு,
சுயநலமே காணுமல் பணிகள் ஆற்றி
இந்நிலத்து மக்க ளெலாம் ஒன்றே யென்று
இனபேதம் பாராமல் சேவை செய்வார்.

வடக்கெல்லைப் போரினிலே முதன்மை யாகி,
வந்துற்றத் தொல்லைகளை தாங்கி நின்று,
நடத்துகின்ற போராட்டம் அனைத்தும் கண்டு,
நாட்கள்பல வெஞ்சிறையில் வாடி நின்று,
அடக்கிநின்ற ஆந்திரத்தின் ஆட்சி தன்னில்
அநியாய வழக்குகளில் தொல்லை யேற்று,
நடக்கின்ற நம்நாட்டுப் பணிகள் எல்லாம்
நான்என்று முன்னிற்கும் ரஷீதே வாழ்க!

பணமேதான் குறிக்கோளாய் வாழும் நாளில்
பணமற்றுப் பொதுச்சேவை யாற்றும் அண்ணல்
கணமேனும் நேரத்தை வீணுக் காது
கருத்தாகப் பொதுநலமே ஆற்றும் நல்லோன்.
குணங்குடிக்கு உரையொன்று கண்ட சான்ருேன்,
கொள்கைதரும் நூல்பலவும் தந்த நல்லோன்
மணங்கமழும் தாய்மொழிக்கே சேவைசெய்து
மாமலைபோல் பல்லாண்டு வாழ்க வாழ்க.

# மங்கலங்கிழார் இலக்கிய மன்றம் வாழி!

**திருமதி. நிர்மலா சங்கர்,** *பி.எஸ்ஸி.,*
**அண்ணாமலைபுரம்.**

சோலைகளிலே சுந்தரச் சோலைகள்
ஆயிரம் ஆயிரம் இருக்கலாம்
அதனிடை தேரும் கனிமரங்கள் சிலவே
மன்றங்கள் இலக்கிய வீதியில்
ஆயிரம் ஆயிரம்

ஆயினும் பாயிரம் ஆயிரம் பயின்ற
பன்மொழிப் புலவரும் இருக்கலாம்
அதனிடை அடிக்கல் நாட்டி
பத்துக்கால் பந்த லிட்டு
மண்டபமாய் நாட்டிய
மங்கலங்கிழாரின் இலக்கிய மன்றமே
நீ வாழி!

நல்ல இலக்கியம் வளர்க்கும் கொல்லறையில்
நாலாந்தர நற்கவிகள் போய்ச்சேரும் கல்லறையில்
அவை யெல்லாம் அனலிடைப்பட்ட தூசாகும்
தீக் கொழுந்தினிடை புடம்போடும்
பசும் பொன்னே
பத்துக்கல் பதித்துக் கொண்ட புனைவடமாய்
மங்கலங்கிழார் இலக்கிய மன்றமே
நீ வாழி

**இணையிலா மொழித் தொண்டர்**
**தணிகைக்கோ பல்லாண்டு**
**நலமும் வளமும்**
**பெற்று வாழ வாழ்த்தும்**

அன்பன்,

**நாகபூஷணம்,**
ஒப்பந்தக்காரர்,
பொதுப்பணி மற்றும் பெருவழித்துறை
**பத்மாபுரம், திருத்தணி**



# அவர் ஒரு தொடர்கதை......

நா. குப்புசாமி,
ஆசிரியர்,
குடிகுண்டா, திருத்தணி வட்டம்

தணிகைக்கோ... ஆம் திருத்தணியில் இளவலாய் வந்து-வளர்ந்து இருப்பவர். சின்னஞ்சிறுவயதிலே, "மக்கள் பணியே மகேசன் பணி" என எண்ணிக்கெண்டவர். 'விளையும் பயிர் முளையிலே' எனும் முது மொழிக்கேற்ப மங்லங்கிழார் மக்களுக்குப் பசி அழியாக் கல்விப் பணியைச் செய் ததைப் போன்று பள்ளிச் சிறுர் முதல் பகுத்தறிவில்லாதார் வரைக்கும் பகுத் தறிவுப் பாசறை அமைத்து மொழி-இனம் — கலை — பண்பு — பாசம்—அன்பு பகுத்தறிவு ஆகியவற்றைப் பெற்றுத்தரச் செய்து பின்னர், தந்தை பெரியாரின் சீரிய சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றி அண்ணன் வழியில் அரசியலில் தொண்-டாற்றியவர். தமிழ் இனம், கலாச்சாரம் முதலியவற்றை முதன்மையாகக்கொண்ட மரியாதைக்குரிய சிலம்புச்செல்வர் அவர் களுக்குச் செயலாளராய் பல்லாண்டு காலம் பணியாற்றி அரசியலில் அவருக்கு உரிய இடத்தைத் தேடித்தந்து பின்னர் பழையபடி தன்னை மீண்டும் அண்ணனின் பாசறையில் இணைத்துக் கொண்டவர். அரசியல் பணியோடு அமரர் மங்கலங் கிழார் விட்டுச்சென்ற தமிழ் இலக்கியப் பணியைத் தொடர்ந்து செய்துவருபவர்.

ஞான வள்ளல் குணங்குடியாரின் பாடல் களுக்கு உரையமைத்துப் பதிப்பித்துத் தந்தவர். பல் சமயங்களிலுமிருந்தும் பன்னூறு புத்தகங்களிலிருந்தும் ஆய்ந்து உரிய மேற்கோள்களைக் காட்டியவர். இத்தனைச் சிறப்புக்கு உரிய எங்களது இளைய தலைமுறையின் முன்னேடியாம் திருத்தணி ரஷீத் அவர்களுக்கு—மன்னிக்கவும் — டாக்டர் தணிகைக் கோவுக்கு அவரது களப்பணிகளுக்கு காணிக்கையாக அவரது 57ஆம் ஆண்டு பிறந்த நாளில் அழகுமலர் இதழ் விரிக்க நண்பர்கள் செய்யும் முயற்சிக்கு நெஞ்சார்ந்த நன்றி யைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக", என்ருர் வள்ளுவப் பெருந்தகை. இவரது செயல் புகழுக்காகச் செய்யப்பட்டது— செய்யப்படுவது இல்லை. தான் தமிழ் மண்ணில் பிறந்துவிட்டதால் தனக்குரிய கடமை என்று எண்ணிச் செயல்படுபவர் தணிகைக்கோ!

இவரது செயலின் சிகரமென யான் மதிப்பது மறைந்துவிட்ட வன்மையான உள்ளத்தின் காவலர் தளபதி விஞயகம் அவர்களும், சிலம்புச் செல்வர், மங்கலங் கிழார் மற்றவர்களும் சேர்ந்து புத்தூரில் தர்மராஜா கோவில் திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரம்மாண்டமான கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிருர். அந்த கூட்டத்திற்கு என்னை என்னுடன் நண்பர்கள், அன்புவாசன், கோவிந்தசாமி, கெங்காதரம், அன்பழகன், கிருஷ்ண மூர்த்தி, சம்பந்தம், நடராாசன் ஆகியவர் களையும் அழைத்துச் சென்றிருந்தார்கள். எங்களுக்கு எல்லாம் தனித் தனியாக இடங்களை ஒதுக்கிக்கொடுத்து இங்கேயே நில்லுங்கள்—அசம்பாவிதங்கள் தோன்றிஞல் எப்படியும் ஊருக்குப்போய் செய்தியைச் சொல்லுங்கள் என்று ஆணையிட் டிருந்தார். கூட்டம் நடந்துகொண்டிருக் கிறது. எதிர்புரத்திலேயிருந்து போலீசார் புடைசூழ ஆந்திர கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளர் சிவய்யா ஒரு கும்பலுடன் வந்து கல்லெறி நடத்திஞர். சரமாரியாகக் கற்கள்—இல்லை கல்மழையே பொழிகிறது. கூட்டத்தின் மத்தியில் தன்னந்தனியாக

இருந்து தலைவர்களுக்கு அரண் அமைத்து தமிழகத்துக் காவல் துறையின் லாரியிலே ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்.

கொஞ்ச நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பயங்கரம் சூழ்ந்துகொண்ட நேரம். நானும் நண்பர்களும் எதிரே வந்த பாரதி பஸ்ஸில் ஏறிக்கொண்டு வருகிறோம். புத்தூரைத் தாண்டியதும் பரமேஸ்வர மங்கலம் என்ற ஊரில் பஸ்ஸை நிறுத்தி பயங்கர ஆயுதங்களுடன் எங்கே ரசீத் என்று அலசி ஆராயப்படுகிறார். அவர் இல்லை என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு பஸ்ஸை விட்டார்கள். நாங்கள் வந்து சேர்ந்தோம்.

போராட்டம் என்று தணிகைக் கோ இல்லாத நிகழ்ச்சியே இல்லை, எங்களைப் போன்றவர்களுக்கு அவர் வழிகாட்டி மட்டுமல்ல. ஆசானுகவும் விளங்கியவர்— விளங்குபவர். அவரைப் பற்றிய நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்லப்புகுந்தால் மலரின் பக்கங்கள் அனைத்தையும் நானே உட்கொண்டவனுவேன். அந்த நாள் வந்தால் தனி நூலே வெளியிடுவேன்.

நேரத்தைப் பொன்னேபோல் கருது பவர், ஆடம்பரத்தை அறவே ஒதுக்கு பவர், பணத்துக்காகப் பல்லிளிக்காதவர், ஈன்ற தாயே பசித்தழுதாலும் பிறனிடம் கை நீட்டாதவர். மாற்றுரிடமும் மனந் திறந்து பேசுபவர். தன் எண்ணத்தினைத் தெளிவாகவும் — வன்மையாகவும் எடுத் துரைப்பவர். நல்லதென நினைப்பதை அப்பொழுதே செய்து முடிக்கும் ஆற்ற லாளர். கடமையாற்றுவதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர் — தன்னலம் பேணுதவர்—இதுவரை தன் குடும்பத்துக் கென எதையும் சேர்த்துக்கொள்ளாதவர். சொன்ன சொல் தவறினுலும், நேரத்தை வீணுக்கினுலும் கடுமையாக் கோபிப்பவர், ஏன், விசுவாமித்திரர் என்றே அழைக்கப் பட்டவர், சுருங்கச் சொல்வதானுல் குடும்பப்பாசத்தோடு பழகும் பண்பாளர். கடும் பணியையும் எளிதில் முடித்திடும் ஆர்வலர். அவருக்காக விரிக்கும் மலரில் ஒரு இதழாக என்னை அனுமதித்த விழாக் குழுவினர்க்கு நன்றி.


USE ALWAYS

**CAT BRAND**

Food Flavouring Essence for Syrups, Ice Creams, Aerated Waters, Confectionary & Also for Coolinary Purpose.

Manufacturers:

**The Aromatic Chemical & Oil Co.,**

**Ponpadi R S & P. O. 631213.**

# செந்தமிழ்த் தேனீ சிறந்து வாழ்க!

பேராசிரியர். சாகுல் அமீது,
தலைவர், சென்னை மாவட்ட இலக்கிய அணி

" தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதான்
[செத்ததுண்டோ?"

என்றார் பாவேந்தர். நாளும் தமிழ்த் தொண்டு செய்து வருபவர் நல்லார் ந. அ. ரஷீது. அவரது மீசை நரைப்பினும் தமிழ் ஆசை நரைப்பதில்லை! முப்பதாண்டுகளுக்கு முன்னர் ஒருகால் தமிழக எல்லைகளுக்கு இழப்பு ஏற்படுமோ என்னும் நிலை ஏற்பட்டது. சிங்கநிகர் செந்தமிழ் மறவர் சீறி எழுந்தனர். அங்ஙனம் சீறி எழுந்த சீரிய மறவருள் சிறந்தவர் இவர். சிலம்புச் செல்வரின் தலைமையை அன்று ஏற்றிருந்தார். தணிகையிலிருந்து தருமமிகு சென்னைக்குக் கால்நடைப் பயணம் மேற்கொண்டு வந்தவருள் இவரும் உண்டு. நன்றி மறவா நம் தமிழர் இவரைத் "தணிகைக்கோ" என்று இன்றும் அழைப்பர்; இதயங்களிப்பர்.

தமிழுக்கும், தமிழருக்கும் முறையாகத் தொண்டாற்ற ஏற்றதோர் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகமே என்பதை இவர் உணர்ந்தார்; தம்மை இவ்வியக்கத்தோடு, இணைத்துக்கொண்டார்.

சென்னை மாவட்ட இலக்கிய அணியின் புரவலராகப் பொறுப்பு வகிக்கும் இவர் பண்புநலம் நிறைய உடையவர்.எப்பொழுதும் சுறுசுறுப்பாகச் செயல்படும் இவரையும் ஒரு "செந்தமிழ்த் தேனீ" என்று அழைக்கலாம்.

இலங்கைத் தமிழர் பட்ட இன்னலைக் கண்டு கலங்கியவர் இவர். அந்நாட்டுக்குச் சென்று நிலைமையை நேரில் அறிந்தார். "நெஞ்சு பொறுக்குதில்லையே!" என நொந்தார். தரணியெங்கணும் வாழும் தமிழரெல்லாம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்னும் தணியாத ஆசை தணிகைக்கோ அவர்களுக்கு உண்டு. அது நிறைவேற நாளும் செய்து வருகின்றார் நல்தொண்டு.

தணிகைக்கோ அவர்களின் தமிழ்த் தொண்டின் தரமும் திறமும் நன்கறிந்தவர் திருத்தணி மக்கள். அவர்கள் ஐம்பத்தேழாம் ஆண்டு மலர் ஒன்றினை வெளியிடவிருப்பது இனிக்கும் செய்தி.அம்மலர் செம்மலராக, செந்தமிழ் இனிமையும் மணமும் ஏந்தி வரும் எழில் மலராக, வெளி வருக! நமக்கெல்லாம் களி தருக! தணிகைக்கோ ந .அ. ரஷீது அவர்கள் தண்பொருநையாற்று மணலினும் பல்லாண்டு இனிது வாழ்க!

பெருமந்தூர் ரோடு
ராஜேந்திரா பவுண்டரி அருகில்
சோபா, மெத்தை,
கலபத்தவணையிலும்
குறைந்த விலையில் ரொக்கத்திற்கும்
கிடைக்குமிடம்

**மதினா ஏஜென்சீஸ்**

பூந்தமல்லி நெடுஞ்சாலை,
மணவாள நகர்,
திருவள்ளூர்-602002.



# எங்கள் வற்றாத அருளே வாழி!

கோ. திருமாவளவன், எம்.ஏ.,
94, முனிசாமி ரெட்டியார் நகர்,
கொடுங்கையூர்,
சென்னை-600051.

1. அகவைசீர் ஐம்பத் தேழில்
அடியெடுத்து வைக்கு மண்ணா!
முகனமர் முறுவல் கூட்டம்
முகம்மது வதனங் கண்டோர்
அகனமர் அன்பைத் தந்தே
ஆடுவர் அன்பி னாலே
நகைமுக நயனத் தூடே
நலம்பல விளையு மாமே!

2. தணிகையை மீட்டுத் தந்து
தமிழகத் தெல்லை கண்டீர்
அணியெனத் திரண்ட அன்பர்
ஆணையை யேற்று நிற்கப்
பணிபல ஆற்றி நிற்பீர்
பதவிக்கு ஓட மாட்டீர்
துணிவினில் உம்மை விஞ்சுந்
தூயவர் ஒருவ ரில்லை

3. தணிகையைப் பெற்ற மக்கள்
தலைமையாம் அன்பி னாலே
**"தணிகைக்கோ"** வென்றே உம்மை
தயக்கமிலா தேற்றுக் கொண்டார்
அணிவிளக்கே! எங்கள் வீட்டு
மணித் தேரே! மாண்பு நல்லாய்!
தணியாத தமிழின் காதல்
தந்ததே "டாக்டர்" பட்டம்

4. குணங்குடி கொண்ட கோவே
குன்றெனும் கொள்கை வீர!
குணங்குடி மஸ்தான் பாடல்
குறைவற உரையும் கண்டெம்
மனங்குடி கொண்ட மன்ன,
மனந்தனில் தத்து வார்த்தம்
பணங்குடி கொண்ட பாங்காய்
படிந்திடும் பாண்மை என்னே!

5. சிங்களத் தீவி னுக்கும்
சேர்ந்துள மலேசி யத்து
சிங்கப்பூர் நன்னாட் டிற்கும்
சீரியர் நீர்தாம் சென்ற
மங்கள நன்னா ளெங்கள்
மனத்தினில் மகிழ்வே யூட்டும்
அங்குளத் தமிழர் பங்கில்
ஆற்றிய சொற்பெ ருக்கே!

6. வடதென்னர் எல்லை காக்க
வடுகரொடு போர்தொடுத்தீர்
மடந்தேடிப் போவார் பின்னால்
மதிப்பிழக்க வொண்ணா திருந்தீர்
இடந்தேடி இணைந்து நின்றீர்
இனியுமக்குப் பெருமை யாமே!
கடந்தகால தமிழின் தொண்டு
கல்வெட்டாம் கலைஞ ராலே

7. ஆழிப்போல் அன்பைக் கொண்ட
அருளுளக் கலைஞ ராலே
தாழியில் கண்ட வெண்ணெய்
தகுநிலை பெற்றே யோங்கும்
வாழி நீ ரஷீத் அண்ணாஎம்
வயலினில் விளைந்த வித்தே
வாழிநீ வாழி எங்கள்
வற்றாத அருளே வாழி!

63

# அனைத்துலகம் வாழ்த்தட்டும்!

நாவேந்தன்,
4, அருணாசலம் தெரு, சிந்தாதிப்பேட்டை, சென்னை-600002.

உள்ளத்தைப் போலவே உயர்ந்ததோர் தோற்றம்!
பிள்ளை மனங்களுடன் பேசுகின்ற கனியூற்று!
பழுத்த அனுபவங்கள் பதுங்கியுள்ள அகராதி!
விழியிழந்த மாந்தர்க்கு வெளிச்சமிடும் பெருவிளக்கு!
அயராது உழைக்கின்ற ஆதவனின் மறுஉருவம்!
வயதுக்குத் தொடர்பில்லா வாலிபச் செயல்வேகம்!
இதய ஒலியெல்லாம் எப்போதும் தமிழொலியே!
கதியற்றோர் கண்ணீரைக் களைகின்ற தாய்க்கரங்கள்!
தென்றலின் மென்மை தெரிகின்ற பேச்சினிலும்
புயலின் அழுத்தம் புதைந்து கிடக்கும்!
வரலாறு உரைக்கின்ற வரலாறு; வாழ்வில்
தகராறு எண்ணாத தத்துவத்தின் முதலெழுத்து
வெள்ளை நெஞ்சத்தை வெளியே காட்டுதற்குத்
தலைமுடியும் மீசையும் தலைதெரிக்கப் போட்டியிடும்!
கணக்கிட்டு இக்கருத்தைக் கற்பனையில் பார்க்கையிலே
**"தணிகைக்கோ"** முன்வந்து தரிசனம் தந்திடுவார்!
ஐம்பத்-தே ழாண்டை அளந்துவிட்ட தமிழ்மூச்சு
ஆயிரம் ஆண்டுவாழ அனைத்துலகம் வாழ்த்தட்டும்!

காந்தி சூரியன் உன் ஆடை!
கருப்பு சூரியன் உன் கொள்கை!
உதய சூரியன் உன் பாதை!
சிவப்பு சூரியன் உன் சிந்தனையில்!

வாழ்க பல்லாண்டு!

**பூம்புகார் சில்க் ஹவுஸ்,**

மொத்த ஜவுளி வியாபாரம்,

**செல்வ விநாயகர் கோவில் தெரு,**

**விளாப்பாக்கம்.**



வ. ஆ. மா.



# காற்று வெளியிடையே
# கண்சிமிட்டும் அகல்விளக்கு

ஏ. ந. செல்வராசன்.
சென்னை-11

ஐந்துபத்து ஒரேழு அகவையினை அடைகின்ற
அண்ணனும் தணிகைக்கோ! ஆருயிரே நீடுவாழ்க!
செந்தமிழால் பாட்டெழுதி சீருயர்த்தி அய்யனைநான்
சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன்! சீராளன் சிறந்திடுக!
தணியாத தாகத்தைத் தமிழ்மீது கொண்டஇவர்
தணிகையிலே போராடி தணிகைக்கே "கோ" ஆனார்
அணிகின்ற ஆடையுடன் அன்புள்ளம் பண்புடைமை
அஞ்சாமை தன்மானம் அணிந்தவரே தணிகைக்கோ 1

எல்லையிலே போராடித் தமிழ்மண்ணை மீட்டதோடு
தொல்லையிலும் துவளாது தூயதமிழ்க் காக்கின்றார்.
கொல்லைப்புற வழிபார்த்து குடியேறும் இந்தியினை
முல்லைஇதழ் தமிழ்ப்பேச்சால் முறியடிக்கும் தமிழ்மறவர்
பிறப்பதனால் குறிப்பிட்ட மார்க்கத்தின் பெயர்ச்சொல்லை
பெயர்க்காது கொண்டாலும் இவர்பேச்சு பகுத்தறிவே—இவர்
திறப்பது பேழையன்று தீரமிகு இளைஞருள்ளம்
அடைப்பது கதவன்று; அறிவிலிகள் ஆணவத்தை 2

தவழ்ந்துவரும் நதிநீராய் தணிகைக்கோ பயன்படுவார்
தமிழ்மொழியை தமிழினத்தைத் தன்னுயிராய் கொண்டிடுவார்
மகிழ்ந்துவரும் பிள்ளைகளாய் மனந்திறந்து பேசிடுவார்
மமதைமிகு பகைவர்களை மண்டியிடச் செய்திடுவார்—இவர்



கண்கவரும் வண்ணங்களில்
ஜவுளி வாங்கச் சிறந்த இடம்:

**செல்வம்**
**டெக்ஸ்டைல்ஸ்,**

ராஜாஜி சாலை, (தேரடி சமீபம்)
திருவள்ளூர்-602001.



ஆய்வெழுதி ஏடுகண்டு அஞ்சியஞ்சி வாழ்ந்துகொண்டு
யார்தருவார் பதவியென்று தேடும் அறிஞரல்லர்
தாய்தமிழால் உணர்வுகொண்டு தன்மானம் துணைகொண்டு
வாய்மொழியால் வாழ்வதனால் வார்க்கின்றார் இலக்கியத்தை 3

மோதுகின்ற காற்றினிலே உலவிவரும் "தென்றல்" இவர்
சூதுவாது இல்லாத சுந்தரநல் "மனிதர்" இவர்
சேதிசொல்லும் பாங்கினிலே தூதுசெல்லும் "தோழி" இவர்
சாதிமத பேதமதை சாய்க்கின்ற "வேழம்" இவர்
நீதிகேட்டு நெடும்பயணம் நடந்தவர்க்கு "தொண்டர்" இவர்
ஆதியந்தம் இல்லாத அன்புக்கோர் "அண்ணன்" இவர்
ஆயிரத்தில் ஒருவரென்று அண்ணனை நாம்வாழ்த்திடுவோம்

ஆற்றொழுக்கு சொல்லுக்கு அழகுமிகு கருத்தூற்று
அரிமாவின் நோக்கினிலே அன்றாட நடைமுறைகள்
சாற்றுகின்ற மொழியனைத்தும் சரித்திரத்தின் முன்னோட்டம்
சண்டாளர் வாய்மூடி சரணடையும் சவுக்கடிகள்
தோற்றத்தில் அய்யாவின் ஆற்றல்மிகு கம்பீரம்
தொலைதூரப் பார்வையிலே அண்ணாவின் கண்ணோட்டம்
காற்றுவெளியிடையே கண்சிமிட்டும் அகல்விளக்கு
கருத்துவிட்ட தமிழ்நாட்டின் இருளகற்றும் பகல்விளக்கு
போற்றுகின்றார் இதைநினைத்து பொன்மலரை புலவரெல்லாம்
போற்றிடுவோம்! போற்றிடுவோம்! புகழ்பெற்று வாழ்க! வாழ்க! 4



எல்லைத் தமிழர்களின்
இணையில்லா உறக்கத்தை
ஏற்றமிகு தொண்டாலே எழுப்பி விட்ட இனியவரே!
என்றும் தொடரட்டும்! உமக்கென்றும்
இன்பம் பெருகட்டும்!

**சிந்தாமணி சில்க் ஹவுஸ்,**

தரமான சூரத், ஜோத்பூர், ஆமதாபாத்
ரகங்கள் தயாரிப்பாளர்கள்

மொத்த ஜவுளி வியாபாரம்

**70/49, கிடங்குத் தெரு, சென்னை-1.**

# தணிகைத் தொண்டர்

பேராசிரியர் செ. உலகநாதன், எம். ஏ.,
அருள்மிகு சுப்பிரமணியசாமி அரசினர் கலைக் கல்லூரி,
திருத்தணி.

ஆந்திரத்திலிருந்து திருத்தணிகைப் பகுதி தமிழகத்துடன் இணைக்கப்பெற வித்தூன்றிய சான்றோர் மங்கலங்கிழார் ஆவார். அந்த விதை கிளைத்து மரமாக வளர நீராக உதவியவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் ஆவார். பல்வேறு உரங்களாக அமைந்து உதவிய வர்கள் பலராவர். அவர்கள் அனைவரும் பற்பல ஊர்களைச் சார்ந்த தமிழன்பர்க ளாவர். சேலம், மதுரை முதலிய ஊர் களினின்றும் தெலுங்கைத் தாய்மொழி யாகக் கொண்ட சிலம்புச் செல்வரின் கட்சித்தொண்டர்கள் சிலர் வடவெல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது வியப்பளிக்கும்.

திருத்தணிகை, திருஆலங்காடு, வங்க னூர், அம்மையார்க்குப்பம், அத்திமாஞ் சேரிப்பேட்டை, இரா. கி. பேட்டை, பொதட்டூர்ப்பேட்டை, புத்தூர், நாரா யணவனம், அரக்கோணம் முதலிய ஊர் களினின்றும் பல்லாயிரக்கணக்கான தமிழ் வீரர்கள் வடக்கெல்லைப் போராட்டத் தில் ஈடுபடாமல் இருந்திருந்தால் நிலைமை எப்படியிருந்திருக்கும்? தாய்ப் பசுவைப் பிரிந்த கன்றின் நிலையாகியிருக்கும். பள்ளி களிலும் கல்லூரியிலும் நம் குழந்தைகள் தமிழ் கற்றிருக்க மாட்டார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்டு உழைத்த அன்பர்கள் தமிழகத்தின் எல்லையை வேல -வன் குன்றம் வரைக்குமாவது கட்டிக் காப்பாற்றிய பெருமைக்குரியவரா கிறார்கள் அந்தப்பெருமை யார் யாரால் கிடைத்து?

மங்கலங்கிழாரால் கிடைத்தது; தளபதி வினாயகம் அவர்களால் உற்றது; சித்தூர் வழக்கறிஞர் அரங்கநாத முதலியார் அவர்களால் பெற்றது; ந.அ.இரசீத் அவர் களால் கிட்டியது; கோல்டன் சுப்பிர மணியம் அவர்களால் ஏற்பட்டது; ஏ.ச. தியாகராசன் அவர்களால் வந்தது.

மேலும், திருமலைப்பிள்ளை, சரவணய்யா, சடகோபாச்சாரியார், அம்மையார் குப்பம் கண்ணப்ப முதலியார், வங்கனூர் காள. பாலசுப்பிரமணியம், க. நரசிம்மன் முதலிய பல தொண்டர்களால் அப்பீடு கிடைத்தது எனலாம்

தூண்டுகோல் தந்து ஊக்கிய தமிழ் அறிஞர்கள் யார் யார்? திரு. வி. கலியாணசுந்தரனார், அறிஞர் அண்ணா, ப. ஜீவானந்தம், தெ. பொ. மீனாட்சி -சுந்தரனார், டாக்டர். மு. வரதராசனார், கவிஞர். கா. மு. ஷெரீப், கவிஞர். வானம்பாடி,ஜனார்த்தனம் போன்வர்கள்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் எல்லைப் போராட்டத்தில் பேராவல் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கலைஞர். தி. க. சண்முகம், திரு. ஜி. உமாபதி போன்றோர் வருகைதந்து எல்லைப் பகுதியில் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

அந்நாளில் என்னைப்போன்ற இளைஞர் கள் பலர் கிராமந்தோறும் சென்று தமிழர் களைப்பற்றியும் தமிழகத்தோடு இணைய விரும்பிய தெலுங்கச் சகோதரர்களைப் பற்றியும் புள்ளி விவரங்கள் எடுத்தோம். மேடைகளில் பேசியும், பாடியும் மக்களுக்குத் தமிழ்ப்பற்றை ஊட்டினோம்.

எனினும், அன்று கல்லடிபட்டும் சிறைக்குச் சென்றும், அடிக்கடி போராட்டங்கள் நடத்தி வீறுகாட்டி விழுப்புண் பட்டும் எல்லைப் போராட்டத்தை வெற்றி முகத்திற்குத் திசை திருப்பியவர்களுள் குறிப்பிடத்தக்க தணிகைத்தொண்டர், தணிகைக்கோ டாக்டர். ந. அ. இரசீத் ஆவார்.

பொது உடைமைக் கட்சித்தலைவர்— தமிழறிஞர் ப. ஜீவானந்தம் அவர்கள் தலைமறைவாக இருந்தபோது தணிகை மலைக்குகை யொன்றில் (கன்னிகையர் கோயில் காட்டுக்கு எதிரில் உள்ளது) அவரைப் பாதுகாத்து சில மாதங்களுக்கு உதவியர்களுள் தணிகைக்கோ ஒருவர் என்கின்றனர்.

அவர் எல்லைப் போராட்டத்தால் உயர்ந்தவர். தமிழ்ப்பற்றும் ஊக்கமும் நிறைந்த தணிகைத் தமிழர்.

வாணிகம் புரிந்து, பொருள் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடாமல், எல்லைப் போராட்டத்திலும் கட்சிகளிலும் ஈடுபட்டு உழைத்து வருபவர்.

தமிழ் இலக்கியப் பயிற்சியும் மேடைப் பேச்சாற்றலும் நிறைந்தவர்.

வடக்கெல்லைத் தந்தை மங்கலங்கிழார் புகழோங்க அவர்தம் இளவல் புலவர். **ந. அ. அ. மாலிக் எம். ஏ.,** அவர்களுடன் தணிகைப் பதியில், "மங்கலங்கிழார்" மன்றம் கண்டவர்.

இலக்கியப் பணியாக மஸ்தான்சாகிப் பாடல்களுக்குத் திரு. இரசீத் அவர்கள் உரை எழுதியுள்ளார்.

டாக்டர். ந. அ. இரசீத் அவர்கள் தொண்டு தமிழகத்திற்குத் தேவை. அத்தொண்டு இலக்கியத் தொண்டாக அமையட்டும். அவர் தோற்றுவித்த மங்கலங்கிழார் மன்றம் கட்சிச் சார்பற்றுத் தமிழ்க் களமாக இனிது விளங்கி நீடுழி வாழ வாழ்த்துகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க குறள் நெறி!
உலகம் உவந்து உய்க!


திரும்பும் பக்கமெல்லாம்
தீப்பொறியாய் —
திருத்தணிகைப் போருக்கு
புயலைத் திருப்பி
மறியல் செய்த
மறவர்படை நாயகரே —
வாழ்க பல்லாண்டு



**ஜமுனா டெக்ஸ்டைல்ஸ்,**
மொத்த ஜவுளி வியாபாரம்,

**2-வது தெரு, சஞ்சீவி இராயன்பேட்டை**
**திமிரி, வ.ஆ. மா.**



# ஆசிரியர் ஓர் அகல் விளக்கு

இராம. அண்ணாமலை,
தமிழாசான், அரசு மேநிலைப் பள்ளி, திருத்தணி.

ஏற்றமாம் மங்கலம் எங்குமே தங்கிட
நாற்றமி குநல்லப் புகழா ளரே!நீர்
சேற்றிலே முளைத்தசெந் தாமரை போலயெம்
கூற்றிலே விளைந்தெழுந்த கொய்யா தமலரே!
காற்றின் திசையெலாம் பாய்மரம் அசையலாம்
ஆற்றா பிள்ளைக் காறுதல் கூறலாம்
நாற்றும் நட்டபின் பட்டுப் போகலாம்
கூற்றும் வந்துனை அழைக்கலாம் கூவி—ஆனால்
ஏற்றுநீர் எமைவிட் டெப்படிப் போகலாம்
தேற்றினும் தேறுதல் கொள்ளவில்லை மனம்
ஆற்றிய பணிகளை அளக்கிறேன் ஒருகணம்
பெற்ற தாயினும் பாடுபட் டெமக்கு
பற்று வைப்பதில் பெருத தந்தையாய்
குற்றமே இழைப்பினும் பொறுக்குமன் னையாய்
நற்றிற நன்றிக் குகந்ததென் னையாய்
கற்றதைப் படைப்பதில் கனியதோர் விருந்தாய்
உற்றநோய் தீர்ப்பதில் உரியதோர் மருந்தாய்
முற்றுமே லேற்ற வல்லதோர் ஏணியாய்
மற்றுங் கரையது சேர்க்குமோர் தோணியாய்
சுற்றும் இருளகற் றுமோரகல் விளக்கே
சற்றும் சலியா துழைத்த உம்பெருமை
சாற்றவும் எளியதோ ஐயா!!
போற்றுகின் றேம்புகழ் பேரூழி வாழி!!!



'நாகரீக உலகத்தின் சிற்பி'
தையற் கலைஞர் சுந்தரம்



**சுந்தரம் தையலகம்**

காந்தி ரோடு, திருவள்ளூர்-602001.



# தணிகைக் கோ எனும் தன்மான இயக்கம்

அரு. கோபாலன்,
சென்னை.

"எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

திருக்குறள் உலகப் பொதுமறையாயினும், குறளாசான் வள்ளுவன், இந்தக் குறளைத் தமிழ் மக்களுக்கென்றே தனியாக எழுதிவைத்திருப்பாரோ என்று எண்ண வேண்டியதிருக்கிறது.

பொதுவாக மனிதர்களுக்கு மறதி அதிகமெனினும், தமிழர்களுக்கு அது மிகமிக அதிகம் என்பதால் போலும் அதை அவன் மறக்காமல் எழுதிவைத்துப் போயிருக்கிறான்!

பொட்டி சீராமுலுவை,
பிரகாசம் பந்துலுகாரை,
இவர்களோடு தோள்கொடுத்து உழைத்த ஒவ்வொரு சிறு தொண்டரையும் கூட, ஆந்திரம் மறப்பதில்லை.

ஆந்திர மக்கள் இன்றைக்கிருக்கின்ற அவர்களின் கொள்ளுப்பேரன், பூட்டன் முதலியவர்களுக்குக்கூட நன்றிபாராட்டத் தயங்குவதில்லை.

ஆனால், இன்றையத் தமிழகத்தின் சிற்பிகளை-

இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்களைக்கூட,

தமிழகம் மறந்து விடுகிறது.

தமிழ் மக்களாகிய நாம் அவர்களுக்கு நன்றி பாராவிட்டாலும் கூடத் தாழ்வில்லை; அவர்களின் உழைப்பை, தியாகத்தை மதிக்கவாவது கற்றுக் கொள்ளவேண்டும்.

இது அவர்களுக்காக அல்ல. ஏனென்றால் இந்த நன்றியை-மதிப்பை எதிர்பார்த்து அவர்கள் அந்த உழைப்பை, தியாகத்தை மேற்கொள்ளவில்லை. காலம் தமக்குத்தந்த கடமை என்றே அவற்றை அவர்கள் செய்து முடித்தனர்.

ஆனால், நம்மிடையே மேன்மேலும் அத்தகைய உழைப்பாளிகள் தோன்றவும், தியாகச் செம்மல்கள் வெளிப்படவும், நாம் முன்னர் வழிகாட்டியவர்களை, மதிக்கக் கற்றுக்கொண்டால்தான் மதித்தால்தான் வழிபிறக்கும்.

இல்லையென்றால், நடிப்புச் சுதேசிகளும் அரசியல் வியாபாரிகளும், பொது வாழ்க்கைப் போலிகளும்தான் நம்மிடையே தோன்றுவார்கள்; தோன்ற முடியும்.

அதுதான் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கிறது. தமிழகம் நாறிக்கொண்டிருக்கிறது. தமிழினத்தின் மானம் மரியாதைகள் சந்திசிரித்துக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையை மாற்ற தமிழினத்தால் மதிக்கப்படவேண்டிய ஒருவர்தான், தமிழ்

நாட்டின் வடவெல்லையைக் காத்தமறவர் தான் தணிகைக்கோ டாக்டர் ந.அ. ரஷீத் அவர்களாவார்கள்.

இந்தியா மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட அன்றைக்கே, ஒன்ருக இருந்த சென்னை மாகாணத்தைக் கூறு போட்டு "ஐக்கிய கேரளா" என்று மலையாளிகளும், "விராட் கர்நாடகா" என்று கன்னடியரும், "விசால ஆந்திரா" என்று ஆந்திராக்காரர்களும் தனி ராஜ்ஜியம் கோரிய அன்றைக்கே,

தமிழர்களும் "பரந்த தமிழ்நாடு" என்ற கோரிக்கையை முன்வைத்துக் குரல் எழுப்பியிருப்போமாஞல், இன்றைக்கு உள்ளதைப்போல இரண்டு பங்கு பரப்பளவை நம் தமிழகம் பெற்றிருக்கும்.

ஆனல், அன்றைக்கு ரஷீதண்ணன் போன்றவர்கள் முன்னின்று நடத்திய எல்லைக்காப்புப் போராட்டத்திற்குக்கூட தமிழகம் போதிய ஆதரவு தரவில்லை.

தந்திருந்தால்,திருத்தணியை மட்டுமல்ல திருப்பதியையும் அவர் கொண்டுவந் திருப்பார்.

இருப்பினும், "மாலவன்குன்றம் போனு லென்ன? வேலவன்குன்றம் இதோ" என்று தமிழகத்தின் வடவெல்லையைப்போராடிப் பெற்ற பெருமைக்குரியவர்தான் தணிகைக்கோ டாக்டர் ந. அ. ரஷீது அவர்களாவார்.

திருத்தணி, தமிழ்க்கடவுள் என்று போற்றப்படும் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்று. ரஷீதண்ணனே அல்லாஹ்வைத்தவிர, வேறுகடவுள்இல்லை யென்னும், அவனுக்கும் உருவமென்று ஒன்று இல்லை யென்னும் ஏக இறைக் கொள்கையுடைய இஸ்லாமானவர்.

அதுமட்டுமல்ல,உருதுமொழியைத் தாய் மொழியாகக்கொண்டு, தெலுங்கைச் சரளமாகப் பேசத் திறமை கொண்டவர் அவர்.

இருந்தாலும், தமிழ்க்கடவுளை ஆந்திரர் களிடமிருந்து போராடி மீட்டார் என்றுல், தமிழ்நாட்டின்மீதும், தமிழ்த்தேசியத்தின் மீதும் அவர் கொண்டுள்ள தணியாத காதலே அதற்குக் காரணமாகும்.

அந்தக் காதல்தான் சிறைப்பட்டுசித்திர வதைப்பட்டு, கல்லடியும், சொல்லடியும் பட்டு, தமிழ்நாட்டு வடவெல்லைக் காப்புப் போராட்டத்தில் அவரை ஈடுபடத் தூண்டியது.

ஆனல், அவரால் எல்லை காக்கப்பட்ட தமிழ்நாடு அவருக்குச் செய்த கைம்மாறு என்ன?

ஆந்திரா பிரிந்தபோதிருந்த ஆந்திரத் தலைவர்கள் அத்தனைபேரும் அவருக்குப் பழக்கமானவர்கள். தமிழகத்தோடு சேர வேண்டுமென்ற போராட்டத்தைக் கைவிட்டால், மந்திரி, வாரியத் தலைவர் போன்ற பெரிய பெரிய பதவிகளெல்லாம் தருவதாகஅவருக்கு வாக்களிக்கப்பட்டது.

அவரோ, அதையெல்லாம் துச்சமாக மதித்துத் தூவென்று ஒதுக்கித் தள்ளி விட்டுத்தான் தன் கால் பதித்த மண்ணைத் தமிழகத்தோடு இணைப்பதில் சலியாது உழைத்து வெற்றிகண்டார்.

தமிழகத்தில் அவர்பெற்றதோ, வறுமை யும், எதிலும் ஒதுக்கப்படும் கொடுமையும் தான். இன்றைக்கும் தனக்கென ஒரு நிரந்தர வருவாயின்றி, திருத்தணிக்கும் சென்னைக்கு மிடையே அல்லாடுகின்ற "தொங்கட்டான் நிலை" வாழ்வைத்தான் அவர் வாழ்ந்து வருகின்றுர்.

ஆனல், இன்றும் கூட தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்ற உரிமைக்காப்பு முயற்சிகள் எங்கே தோன்றினும் அங்கே முதலாளாக, முதல்தொண்டனுகஉழைக்க முன்னிற்பவர் ரஷீதண்ணன் அவர்களே ஆவார்.

இந்த 57 வயதிலும், 17 வயது இளைஞனைப் போல பொது வாழ்க்கையில்

உழைப்பதற்கு முன்னிற்கும் ஒருவர் தமிழ் நாட்டிலேயே ரஷீதண்ணனைவிட்டால், வேறு ஆள் இல்லையென்றே சொல்லி விடலாம்.

அதுமட்டுமல்ல, அவர் ஒரு சகலகலா வல்லுநர்.

பத்திரிகையாளர்,
நூலாசிரியர்,
பதிப்பாசிரியர்,

அரசியல் மட்டுமின்றி, கலை, இலக்கியம், சமயம், தொழில்நுட்பம், வணிகம், விவசாயம், சமையல் முதலிய எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அந்தத்துறையில் மட்டுமே ஊறித்திளைத்த வர்களைவிட அதிக ஆற்றல் பெற்றவர். உருது, தமிழ், தெலுங்கு, இந்தி முதலிய பல மொழிகளையறிந்த பண்பாளர்.

உலகத் தமிழினத்தின் ஒரு பெருந் தலைவரான டாக்டர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்; தி. மு. கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர் என்றாலும்; அனைத்துக் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றவர்.

அமைப்பு வேலைகளில் அசகாயசூரர்.

தேர்தல், பேரணி, மாநாடு, போராட்டம் என்றால், எந்தக்கட்சியைச் சேர்ந்தவர் களும் ரஷீதண்ணனின் ஆலோசனையைப் பெற முந்திநிற்பர். அந்த அளவுக்கு எதையெதை எப்படிச் செய்யவேண்டும், யாரைக்கொண்டு செய்விக்கவேண்டும், என்னென்ன தேவை என்பதிலெல்லாம் கரைகண்டவர்.

வயதானவர் என்றால் சிலபேர் அந்த மட்டத்து ஆட்களுடன்தான் பழகுவர். இளைஞர்களும் அவர்களோடு பழகக் கூச்ச மடைவர்.

ஆனால், ரஷீதண்ணனோ எல்லா மட்டத் தினரோடும் சரளமாகப் பழகுவார்.


தணிகைக்கோ ந. அ. ரஷீத் அவர்களின்
57-ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இவண்,

**ஆ. ப. கணேசன்,**
தலைவர்.

**B. பாண்டுரங்கராவ்,**
கௌரவத்தலைவர்.

**தமிழ்நாடு தலைமை இளைஞர் நற்பணி மன்றம்,**
9, இளங்குப்பன் தெரு, ஆற்காடு. வ. ஆ. மா.

[இது ஒரு அரசியல் சார்பற்ற மன்றம். கிளை மன்றங்களைத் துவக்கத்
தொடர்பு முகவரி: ஆ. ப. கணேசன். நெ. 9, இளங்குப்பன் தெரு, ஆற்காடு]

அவரைச் சுற்றி எப்போதும் இளைஞர் கூட்டம் மொய்த்துக்கொண்டே இருக்கும்.

பழகிய ஊர்களில்தான் என்றில்லை, எல்லா இடங்களிலுமே அவருடைய இந்த வசீகரத்தை நான் கண் கூடாகவே கண்டேன்.

*1982*ஆம் ஆண்டு மேமாதம் *31* நாளும் நான் அவருடன் இலங்கைச்சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தேன். பெருங்கவிக்கோ டாக்டர் வா. மு. சேதுராமன் அவர்களும் எங்களுடன் வந்திருந்தார்.

அந்தப் புதிய இடத்திலும் முற்றிலும் புதியவர்களான இளைஞர்கள் எப்போதும் அவரையே மொய்த்துக் கொண்டிருப் பதைக் காண எனக்கே பொறாமையாக இருந்தது. இத்தனைக்கும் சென்றிருந்த மூவரில் நான்தான் வயதில் இளையவன்.

இருந்தும் அவரையே இளைஞர்கள் மொய்த்ததற்குக் காரணம், நாங்கள் சில துறைகளில்தான் இளைஞர்களைக் கவர முடிந்தது. அவர் எல்லாத் துறைகளிலும் அவர்களின் அறிவுப்பசிக்கு ஈடு கொடுத்தார்,

அங்கே டாக்டர் இராசசுந்தரம் என்பவர் "காந்தீயம்" என்ற ஒரு அமைப்பைக் கட்டிவளர்த்து பல அற்புத மான வேலைகளைச் செய்துவருபவர்.

நம்முடைய இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களை ஆயிரக் கணக்கில் வடக்குக் கிழக்கிலங்கையில் குடியேற்றி, ஏதிலிகளாக இருந்தஅவர்களை அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக மாற்றிவருகிறார். சுருங்கச் சொன்னால் ஒரு அரசாங்கம் செய்யும் வேலைகளை அந்தக் காந்தீயம் அமைப்பு செய்து வருகிறது.

அவர் அமைப்பு வேலைகளில் நிபுணர்; சகலகலாவல்லவர். அவரே ஒவ்வொன்றுக் கும் ரஷீதண்ணனை ஆலோசனை கலந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அதுமட்டுமல்ல Master of all Subjects என்று தன்னைத்தானே தமிழ்வாணன் போட்டுக் கொள்வதை நான் "கல்கண்டு" பத்திரிக்கையில் பார்த்திருக்கிறேன். டாக்டர் ரஷீத் மூலம் இப்போதுதான் அப்படிப்பட்ட ஒருவரை நான் நேரில் பார்க்கிறேன் என்று, டாக்டர் இராச சுந்தரம் அவர்கள் ரஷீதண்ணனை மனந் திறந்து பாராட்டியதை நான் கண்குளிரக் கண்டு, காது குளிரக்கேட்டேன்.

அப்படிப்பட்ட ஒருவரை தமிழகம் இன்னும் உணரவேண்டிய அளவுக்கு உணர்ந்து, பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்பதை நினைக்கிற போதுதான் என்போன்றவர்களுக்கு வேதனையைத் தருகிறது.

தணிகைக்கோ டாக்டர் ரஷீதண்ணன் ஒரு தனிமனிதரல்ல, ஒரு இயக்கம், தன்மான இயக்கம். தமிழ்மான இயக்கம்.

அந்த இயக்கம் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழகத்தின் முழுஉரிமை களையும் பெற்றுத்தரட்டும் என வாழ்த்து கிறேன்.

# திரு. ஆசிரியர் மங்கலங்கிழாரும் தமிழும்

வே. ஆறுமுகம்,
தி. மு. க. தொண்டன்
ராணி புகைப்பட நிலேயம், திருத்தணி.

1951-ஆம் வருடம் நான் தணிகைக்குக் குடியேறினேன். என் புகைப்படத் தொழிலும் துவங்கியது. பேரறிஞர் அண்ணு அவர்களின் (தி.மு.க.) இயக்கத்திலே உறுப்-பினன் ஆனதும், பெரியவர் மங்கலங்கிழார் எனும் காவி அணிந்த சாதுவின் அறிமுகமும், அவர் அன்பும் கிடைத்த ஆண்டு 1951 ஆகும். மகிழ்ச்சியான இந்த ஆண்டை என்றும் மறைக்கவோ, மறக்கவோ முடியாது.

ஆந்திரத்தில் இணைந்த சித்தூர் மாவட்டத்தின் தமிழ்ப்பகுதிகளைத் தமிழகத்தில் இணைக்க வேண்டுமென்ற, எண்ணத்தை வெளியிட்டு, மாவட்டத்திலுள்ள தமிழர்களாகிய முக்கியஸ்தர்களைச் சந்தித்து: நாம் ஏன் தமிழகத்தில் இணைய வேண்மென்றும், அதன் பயன் என்னவென்றும் விரிவாக எடுத்துக் கூறி, யார் ஆண்டாலென்ன என்று உறங்கிக் கொண்டு இருந்த தமிழர்களை விழிக்கச் செய்து, பல ஊர்களில் பல கூட்டங்களை நடாத்தி, மாநாடு கூட்டி, வடஎல்லைப் போராட்டக் குழு நியமித்து மறியலும் போராட்டமும் நடத்தியவர்.

குறிப்பாக, சித்தூர் மாவட்டத்தில் தமிழர்களாகிய நெசவுத் தொழிலை, தன் குலத் தொழிலாக நடத்திவரும் செங்குந்தர் வாழும் ஊர்களான, பொதட்டூர்ப் பேட்டை, அத்திமாஞ்சேரி, அம்மையார் குப்பம், வங்கனூர், மத்தூர், இன்னும் சிறிய சிறிய கிராமங்களுக்கும், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள குருவராஜப் பேட்டை, வளர்புரம் வாழ் தமிழர்களுக்கும் கல்வி என்பது ஏது? என்று, அறியாது இருந்த அவர்கள் ஊர்களுக்கு ஏதும் கைம்மாறு எதிர்பாராது முதியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் மாதத்தில் குறிப்-பிட்ட ஒரு நாளில் சென்று, அவர்களுக்கு எழுத்து 'அறிவித்து' பல படித்த மாணவர்களை உண்டாக்கிய பெரியவர், ஆசிரியர் மங்கலங்கிழார் ஆவார்.

மறியல்களிலும், போராட்டங்களிலும் முன்னின்று நடத்தியபோது போராட்டம் நடத்தும் தொண்டர்களைத் தனித்தனியே சந்தித்துப் பாராட்டியும், வாழ்த்தியும் உற்சாகப்படுத்துவார்.

என்னைச் சந்தித்து என்னை வாழ்த்தும் போது தலைவர்களாகிய நாங்கள் தினம் தினம் நடக்கும் போராட்டங்களில் கலந்து கொள்ள முடிவதில்லை. ஆனல் நீங்கள் தினம் தினம் நடக்கும் போராட்ட வீரர்களைப்புகைப்படம் எடுத்து எங்களுக்கு பேருதவியாக இருக்கிறீர்கள். தமிழன் என்ற உணர்வால் நீங்கள் இந்த இயக்கத்தில் கலந்துக் கொள்கிறீர்கள். ஆகவே இப் போராட்டத்திலே உங்களுக்கு முக்கியமான பங்கு உண்டென்று கூறி வாழ்த்தினர். அதனை என்றும் மறக்க முடியாது.

அன்று பிரதமராக இருந்த திரு. ஜவகர்லால் நேருவைச் சந்திக்க போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சில முக்கிய தமிழர்களும், தலைநகரம் டெல்லிக்கு சென்ருர்கள். அதுபோது திரு. மங்கலங்கிழார் அவர்களை அழைத்துச்சென்று இருக்கலாம். அவரை அழைத்து செல்லாதது; அவருக்கு பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது. அதனல் அவர் உடைந்தார். பல பேர்கள் இடத்தில் பெருங்குறையாகவே சொல்லிக் கொண்டும்; என்னிடம் பொருளாதாரம்

இல்லையே, இருந்தால் நானும் சென்று இருப்பேன் என்று சொல்லிக் கொண்டும், அதனால் அவர் மனமும், உடலும் நலிவுற்றது. அவர் மறைவுக்கு அது ஒரு காரணமாகவே அமைந்தது. வடஎல்லைப் போராட்டத்திற்கு தந்தையாகிய, திரு. மங்கலங்கிழார், அரசியல்வாதிகளான மல்லர்கள், அவரை மூடி மறைத்துத் தாங்களே எல்லாவற்றிக்கு முக்கியமானவர்கள் என்று பறை சாற்றிக் கொண்டு தன் அறியாமையை வெளிப்படுத்திக்கொண்டார்கள்.

குறிப்பாக சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழர்கள் திரு. மங்கலங்கிழார் அவர்களை என்றும் மறக்க முடியாது.

அவரை தெய்வம் போல் கருதி பூஜை செய்பவர்களும் உண்டு.

அவர் ஒரு சீர்திருத்தவாதி. அவர் பெயரால் இயங்கும் மங்கலங்கிழார் இலக்கிய மன்றத்திற்கும் பத்தாம் ஆண்டு நிறைவு விழா, நடைபெற இருக்கிறது. அது நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டுமென்று வாழ்த்தி, திரு. மங்கலங்கிழார் புகழ் ஓங்குக, எனக் கூறிக்கொள்கிறேன்.

எனது அருமை உடன்பிறப்பு தணிகைக் கோ, டாக்டர். ந. அ. ரசீத் அவர்கள், 1951-ஆம் ஆண்டு தி. மு. கழகத்தில் உறுப்பினனாகப் பதிவு செய்து என்னை அரசியல்வாதியாக மாற்றிய பெருமை அவர்க்கே உண்டு. சித்தூர் மாவட்டத்தில், தி. மு. கழகம் வளர்வதற்கும், பல கிளை அமைவதற்கும் காரணமாக இருந்தவர் திரு. ந. அ. ரசீத் அவர்கள்.

வடவெல்லை போராட்டம் ஆரம்பகட்டத்திலிருந்து அதில் பங்கு கொண்டு கிராமம், கிராமமாகச் சென்று தொண்டர்களை உற்சாகப்படுத்தி இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள ஊக்கமளித்தும், தி. மு. க. இதில் பங்கு கொள்ளத் தலைமை தாங்கியும், தடியடி பட்டும், சிறைசென்றும் என்னை இந்தப் போராட்டத்தில் பங்கு பெறச் செய்தும், எனக்கு பெருமை அளித்தவரும் ஆவார்.

போராட்டத்தின் போது தட்டிகள் எழுதுவது முதல், போஸ்டர் ஒட்டுவது முதல் பந்தல் போடுவது வரை எல்லாப் பொறுப்புகளையும் அவர் இடத்தில் ஒப்படைத்தார்கள். தொண்டர்களை உற்சாகப்படுத்திக் கொண்டும், உணவு உறக்கத்தை மறந்தும் செயல்பட்ட வீரர் ஆவார். டீ குடிப்பதுதான் முக்கியமென்று கருதி வீட்டையும், மனைவி மக்களையும் மறந்து செயல்பட்ட செயல்வீரர் ஆவார்.

வடவெல்லை போராட்டம்மட்டும் அல்ல தி. மு. கழகம் நடத்திய போராட்டங்களில் கலந்துகொண்டும். பொதுமேடையிலே பேசும் பெரும்பேச்சாளராகவும் உண்மையை மறைக்காமல் கூறும் நல்ல பண்பாளராகவும், இளைஞர்களை அரசியலில் ஈடுபடச் செய்ய நல்ல பயிற்சியாளராகவும் பொதுமேடையில் பேசும் திறமையில் பல இளைஞர்களுக்கு ஆசானாகவும் இருந்தவர், இன்றும் இருப்பவரும் ஆவார்.

அவரை என் அரசியலுக்கு முன்னோடி என்பதனை தெரிவித்துக் கொள்வதுடன், அவர் தொண்டு இன்னும் தொடர வேண்டுமென்றும் இன்னும் பல ஆண்டுகள் தமிழர்க்காக அவர் வாழ்ந்தும் இன்னும் இலக்கிய படைப்புகள் படைக்க வேண்டுமென்று உளமார வாழ்த்தியும் வணங்குகிறேன்.

வணக்கம்

# போராட்டச் சகதியிலே பூத்திட்டப் புதுமலரே!

துரை. சுப்பராயன்,
தலைவர், தங்கவயல் தாழ்த்தப்பட்டோர் பேரவை.

காட்டினில்வி லங்குகள்போல் கடுமைச்சிறைக் கைதியாகி
கனத்தநெஞ்சில் துயர்தாங்கி காலந்தள்ளி வாழுகிறோம்
பாட்டிலேஇ வைப்புணைத் தணிகைக்கோர சீதுஅண்ணன்
பண்புடனு ணர்த்திநின்ற முத்தமிழ ணிந்துநின்றார்
கூட்டிலே பறவையாய்க் குள்ளமனக் குக்கல்பலர்
குணம்பெற்று வாழச்சொன்ன குணக்குன்று அவர்வாழி!
ஏட்டையவரெ டுத்துக்குணங் குடிமஸ்தான் சாயபுவின்
பண்பட்டப் பாடலுக்குரை யமைத்துப் பாடத்தந்தார்.

போராட்டச் சகதியிலே பூத்திட்ட புதுமலருமைப்
பாராட்ட மறுப்பவரும் யாரிந்தப் பூவுலகில்?
போராடி மீட்டளித்தாய் வடக்கெல்லைத் திருத்தணிகை
பேராட்டம் போட்டனரே தமிழர்தாம் நும்நிழலில்
போறாத காலமையா, பொல்லாங்கு மனிதர்தாம்
பேராளர் உமைமறந்தார் பேராசைக் காரராகி
போராட்டந்த னைக்கண்டால் போய்ப்பதுங்கும் மூடரையும்
பொன்போட்டு வணங்குகிறார், புரியாமல் திணறுகின்றேன்.

வாடிநின்ற சிங்களர் தமிழர்நிலைச் சென்றறிந்தாய்
கோடிப்பொன் கொட்டஐந்து பத்துமூன்று அகவையிலே
ஓடிவந்த என்மனைவி ஓலமிட்டழு திருந்தாள்
ஓர்பொருளு மில்லையென் றொடிந்திருந்தா ளென்செய்வேன்?
தேடியிருளில் நான்நடந்தேன் தெளிந்தநீல வான்வெளியில்
கோடிக்கோடி யாய்விண்மீன் கொம்மாளம் போட்டதுவே
கூடிச்சிரித்த அவையாவும் வானப்பெண் ணுமிழ்ந்ததுவாம்
கூட்டிசேர்த்துச் சரமாக்கியு மக்களித்தேன் நீர்வாழி.

## மங்கலங்கிழார் புகழ்!

புலவர். ச. மு. பட்டாபிராமன், திருத்தணி

மங்கலங்கிழார் புகழைப் பாடுவோம்—என்றும்
மாறாத மாலைதனைச் சூட்டுவோம்!

தேன்தமிழைக் குடங்குடமாய் தந்தவர்—அறிவு
தேரோட்டம் கொண்டு புகழ்பெற்றவர்!
வான் மழையாய் தமிழ்ப்பயிரைக் காத்தவர்—கிழார்
வாழுகின்ற கவிதைபல யாத்தவர்! (தேன்தமிழை)

பாரதியின் தாசரென வாழ்ந்தவர்—அவர்
பாதைவழி சென்று பல முடித்தவர்!
சீர்திருத்த புதுமை பல செய்தவர் — மக்கள்
திருந்திடவே நன்மை பல செய்தவர்! (தேன்தமிழை)

தொழிலாளர் நலசங்கம் முதல்அமைத்தவர்-கிழார்
தமிழ்நாடு வளம் பெறவே உழைத்தவர்!
சாதிமதபேதம் நீங்க துணை செய்தவர் — அவர்
சமய உயர்வு தாழ்வு நீங்க வாழ்ந்தவர்! (தேன்தமிழை)

பெண்ணுரிமை வேண்டுமென்று பாடினார்-கிழார்
பெருமுதலை பணச்செல்வர்களைச் சாடினார்!
மண்ணிலுள்ளோர் துயர் நினைந்து வாடினார்-கிழார்
மக்கள் வாழ்க்கை விடியலுக்கே பாடினார்! (தேன்தமிழை)

மங்கலங்கிழார் புகழைப் பாடுவோம்-என்றும்
மாறாத மாலைதனைச் சூட்டுவோம்!

## அண்ணன் ரசீது!

கி. உருத்திரன்,
தலைவர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம், திருத்தணி கிளை.

இன்று தணிகைக் கோ டாக்டர். ந. அ. ரசீது என்று எங்களாலும் மற்றவர்களாலும் போற்றப்படுகிற, பாராட்டப்படுகிற அவரை அண்ணன் என அழைப்பதற்கே தனி உரிமைப் பெற்றவர்களில் நான் முதன்மையானவன்.

தணிகை ஒரு காலத்தில் சித்தூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்து ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட்ட காலத்தில் தமிழ் படித்து, தமிழகத்தில் இருக்க முடியாத சூழ்நிலையில் வாழ்ந்த அந்த காலத்தில் தமிழ் படித்த எங்களுக்கெல்லாம் ஆதரவளித்து, வழிகாட்டி எங்கள் வாழ்வின் கலங்கரை விளக்காக திகழ்ந்து, இன்றைய எங்களின் ஆக்கத்திற்கு அன்று ஊக்கமளித்தவர்.

அவரது ஐம்பத்தேழாவது பிறந்த நாளில் அவரை வாழ்த்தி வணங்கி பின்பற்றி அவர் நெறி நின்று தொண்டாற்றுவோம் என உறுதி கொள்வோம்.

# மங்கலங்கிழார் மாட்சிகள் !

மங்கலங் கிழார் மாட்சி தன்னை
  உரைப்பதற்கு ஆயிரம் நாப்போதா!
சங்கத் தமிழ் முழுதும் அவர்க்குத்
  தங்கு தடையின்றி வரும்.
கள்ள மற்ற தூய நெஞ்சம்
  காண்பதற்கு எளிய தோற்றம்!
கொல்ல வரும் கொடிய வரையும்
  மலைக்கச் செய்யும வர்தோற்றம்

பள்ளிப் படிப்பு முழுதும் அறியாதவரும்
  பல்கலைக் கழகம் செல்ல வழிவகுத்தவர்
சொல் வன்மையால் மாணவர் இதயக்
  கோயிலில் இடம் பிடித்தவர்.
பழுத்த மரத்தைத் தேடிச் செல்லும்
  பறவைக் கூட்டத்தைப் போல்
அழுக்காறு அற்ற மாணவர் கூட்டம்
  அவரிடம் நாடிச் சென்றனர்.

கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
  என்ற தமிழ்மூதாட்டியின் மொழிக்கேற்ப
வற்றாத அன்புள்ளம் கொண்ட மாணவர்கள் இவர்
  சென்ற இடமெல்லாம் இதயக்கோயில் எழுப்பினர்!
தேனில் ஊறிய பலாச்சுளை போல்
  அவர் வாயில் ஊறியன தமிழ்ச்சொற்கள்
அதனைச் சுவைத்துச்சுவைத்து இன்பமாய்
  மகிழ்ச்சிக் கடலில் திளைத் திருந்தனர்.

தமிழுக்கு அவர் தொண்டு செய்தார்
  எனக் கூறுதல் பொருந்தா!
தமிழ் மொழியே அவரால் வாழ்ந்தது
  எனக் கூறுதல் பொருந்தும்!
வடஎல்லைப்போருக்கு வழிவகுத்துச்சிறைச்
  சாலைக்குச் செல்லவும் அஞ்சாதவர்
அவரின் நாட்டுப் பற்றிற்கு நல்ல
  எடுத்துக் காட்டு இஃதன்றோ!

காவியுடை அணிந்த தூய நெஞ்சம்
  கொண்ட துறவி யாவார்!
ஆவி முழுதும் தமிழுக்கே அர்ப்பணித்த
  தன்னல மற்ற தியாகி யாவார்!
தனக்கென அவர் வைத்துக் கொண்டதோ
  காவியுடையும் கைத் தடியுமே!
பிறர்க்கென வாழ்ந்த பெரியோருள்
  இவர்போல் எவருண்டு இவ்வுலகில்!

புலவர்.
சொ. கோ. இராசகோபால், B.Litt.,
தமிழாசிரியர்.

# எங்கள் நெஞ்சில் தணிகைக்கோ !

**உழுவலன்பினர் சேகர் — சிட்டி**

'தமிழா தோள்கொட்டித் துள்ளியெழு' என்று தூங்கிக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தில் உணர்ச்சியூட்டி, இன்று தமிழகத்தோடு இணைந்திருக்கும் தணிகையும் அதைச்சார்ந்த பகுதியையும் மீட்க அன்று முதல் முழக்கம் செய்து வித்திட்ட உத்தமர் ஆசிரியர் திரு. மங்கலங்கிழார் அவர்களாவார்கள். அவர் திருப்பெயரால் தமிழிலக்கிய மன்றத்தை இத்தணிகையம் பதியிலே துவக்கி பத்தாண்டுகாலம் அரிய தொண்டாற்றிய தன்நினைவாகவும்,அம்மன்றத்தின் தலைவர் டாக்டர் திரு. ந. அ. ரஷீத் அவர்களின் 57ஆம் ஆண்டு பிறந்தநாள் மலராயும் இம்மலர் மலர்வது சாலப்பொருத்த மென்றெண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றோம்.

'தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே" என்று ஔவை பாடியது போல் இவரது பெருமை சொல்லப்புகின் சொல்லிலடங்கா. இவரது செயல்திறனை நேரில்கண்டவர்கள் என்ற முறையில் ஒரு சில நிகழ்வுகளை எழுத்தில்வடிக்க முயல்கின்றோம்.

நாங்கள் பள்ளி மாணவர்களாக இருந்த காலை இந்நகரில் "வடக்கெல்லைப் பாது காப்புக் குழு" அமைத்துத் தொடர் போராட்டம் நடத்தியபோது தணிகைக் கோ அவர்கள், திரு. K. விநாயகம் திரு. கோல்டன் ந. சுப்பிரமணியம், திரு. T. M. திருமலைப் பிள்ளை போன்ற பெரியவர் களோடு சேர்ந்து இடையறாது ஆற்றிய தீவிரத் தொண்டினை எண்ணியெண்ணி வியக்கின்றோம்.

1960 ஏப்ரல் முதல் நாள் தணிகையம் பதி தமிழகத்தோடு இணைந்த பின்னர் வடக்கெல்லை பாதுகாப்புக் குழு கலைக்கப் பட்டதும் பலர், சில அரசியல் கட்சிகளை ஆவலாய் அணைத்துக்கொண்டனர். ஒரு மித்த கருத்துடைய நாங்கள் மட்டும் சிலம்புச்செல்வர் டாக்டர்திரு. ம. பொ. சி அவர்களின் இயக்கமான தமிழரசுக்கழகத் தில் சேர்ந்து தணிகைக்கோ அவர்களைத் தணிகைநகர் தலைவராகவும், சேகர், சிட்டி ஆகிய நாங்கள் செயலாளர், பொருளாள ராகவும் செயலாற்றினோம். அரசியலோடு இலக்கிய அறிவும் வளர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் திரு. ம. சி. தணிகாசலம் அவர்களைத் தலைவராகக் கொண்டு இளங்கோ மன்றத்தைத் தணிகைக்கோ, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடத்தி வந்தோம் வருகின்றோம். 1962அக்டோபர் 2ஆம் நாள் சீனன் இந்திய மண்ணை ஆக்ரமித்தபோது இளங்கோ மன்றத்தின் மூலம் எதிர்ப்புகாட்டி, இந்தியாவிலேயே இரண்டாவதுமுறையாக சூ-என்-லாய்க்கு கொடும்பாவிகட்டி ஊர்வலமாக எடுத்துச் சென்று விநாயகம் திடலில் தீயிட்டுப் பொசுக்கினோம். அத்துடனமையாது யுத்த நிதி வசூலித்து அன்றைய முதல்வர் திரு. கு. காமராசருக்கு அனுப்பிவைத்தோம். குறுகிய காலத்தில் எங்களால் தயாரித்து நடிக்கப்பட்ட "வெல்கபாரதம்" என்னும் நாடகத்தைச் சிலம்புச்செல்வர் அவர் களின் முன்னிலையில் நடத்திக்காட்டி பாராட்டினைப் பெற்றோம். இந்த வெற்றிக்கு தணிகைக் கோ அவர்கள் ஒப்பனைக்காரராகவும் இருந்து உதவினார்.

1964 மார்சு மாதத்தில் தணிகைக்கோ அவர்கள் இந்நகரில் தமிழரசுக்கழக மாநில மாநாட்டினை இரண்டு நாள்கள் சீரும் சிறப்புமாக நடத்தி அரிய சாதனை நிகழ்த் தினார். தலைவர்முதல் தொண்டர்வரை அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்றார். அதனை நினைக்கும்போது எங்களின் கண்கள்படக்காட்சியாய் செயல்படுகிறது.

# வலம்புரிச் சங்கு உன் வரலாறு!

கவிஞர். இ. பதுருத்தின்

திருத்தணி இவரூர்!
ஆனல் இவரோ-
திரு தணியாதவர்!

வெண்மேகம் சூழ்ந்த
கரிய வானமிவர்!
புரியவில்லை......?
இவர் மேனிநிறமும்
மேலாடையும்
வேறு என்னவாம்?

அணைக்கட்டின்
நீர்வீழ்ச்சியோ
இவரின் மீசை......!

இவர்,
இசுலாமியர்தான்!
ஆனல்-
அரசியலைப் பாதியும்
இலக்கியத்தைப் பாதியும்
தன்னுள்
ஐக்கியப்படுத்தியுள்ள
இவரை-
அர்த்தநாரீஸ்வரன் என்று
அழைக்கலாமோ?

தென்துருவப்
பனிப்பிரதேசம் போல்-
சில்லிடவைக்கும்
இவரின் சிநேகம்!

இலக்கிய-
விமர்சன உலகில்
இவரோர் வில்விஜயன்!
இவரது காண்டீபம்
குறி தவறியதுமில்லை;
கூர் மழுங்கியதுமில்லை!

இவர்
எளிமையில்
இன்னெரு வினேபா!

இவர் மேடை ஏறிவிட்டால்
கைத்தட்டலுக்காக
கைகளை மேலும்
கடன்வாங்க வேண்டிவரும்!

வலம்புரிச் சங்குபோன்றது
இவரது வரலாறு!
ஆம்
தேச வீதியில்
தேடுதற்கரியது!

---

முன்பக்கத் தொடர்ச்சி......

அதே ஆண்டு அக்டோபரில் இந்நகர் வந்த அன்றைய முதல்வர் மாண்புமிகு திரு. மீ. பக்தவச்சலனர் அவர்கட்கெதிராய் தமிழரசுக் கழகத்தின் பெயரால் (ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு) கருப்புக்கொடி காட்ட திட்டமிட்டிருந்தோம். ஆனல் முன் கூட்டியே திரு. ந. அ. ரஷீத், திரு. ம. சி. தணிகாசலம், சேகர், சிட்டி, ஜானகி மற்றும் பலர் கைதுசெய்து சப்-ஜெயிலில் அடைக்கப்பட்டோம்.

தணிகைக்கோ டாக்டர் திரு. ந. அ. ரஷீத் அவர்கள் எங்கள் நெஞ்சில் நிறைந்தவர், அன்பில் கலந்தவர், மிக்க ஆற்றல் பெற்றவர். மேடைப் பேச்சால் பல இளைஞர்களைக் கவர்ந்தவர். "இளைஞர்கள் இறைவழியில்" என்ற அறிவூட்டும் நூலையும், குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் பாடலுக்கு உரை எழுதியும் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தியுள்ளார் என்று எண்ணும் போது எங்கள் மனம் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறது. தனது வாழ்நாளில் சில காலமேனும் தன் குடும்பநலனுக்காகப் பாடுபட்டிருப்பாராஞல் பணக்காரர் வரிசையில் இவரும் ஒருவராகியிருக்கலாம். எல்லாம் வல்ல இறையருளால் நூறுண்டு வாழ்ந்து தமிழுக்குத் தொண்டுசெய்க என்று மனமார வணங்கி வாழ்த்து கின்றேம்.

---

# மேனிலைக் கல்வியில் நாங்கள்!

த. பொ. ஞானதுரை

குறுமனங் குவிந் தரும்பிடும்
அகவையின் ஆர்பரிப்பு!
நறுமணத் தென்றலின்
ஏகாந்த சிரிப்பொலிகள்!
பொறுமன மில்லா பொல்லாப்பு
சிந்தனை எதிரொலிகள்!
உறவினந் தெரியா மனத்தின்
உயர்மிகு பாசங்கள்!
பறவினம் போலப் பறந்து திரிந்திட
சுதந்திர எதிர்பார்ப்பு!

ஓடு பாம்பினை உயர்த்தி மிதித்திடும்
உள்ளத்து மாணக்கர்
ஏடுகள் ஏந்தி அரங்கினில் கழித்திடும்
அறிவுச் சுடரொளிகள்
பாடுகள் வந்தாலும் ஊழலை எதிர்த்திடும்
எரிமலைப் பித்தான்கள்; பாகு
பாடுகள் தன்னை தீர்க்கமாய் எதிர்த்திடும்
எச்சரிக்கை தூதுவர்கள்

காடுக ளழித்து நாடுகள் செய்திடும்
சோழப் பெருந்தகைகள்
ஈடு சந்திரனைச் சாதிக்கத் துடிக்கும்
சாகித்ய அகடாமிகள்; வாழ்க்கை
மேடு பள்ளத்தை கடக்கத் தெரியா
கனைத்திடும் கன்றுளங்கள்
மூட நம்பிக்கையை ஒழிக்க
முனைந்திடும் வலுவான வல்லரசுகள்.

ஆசிரியப் பெருந்தகையீர்!

அறிவை இன்னும் வளர்த்துவிட
அறிஞர் நாங்கள் ஆகிவிட
பயிற்சி இன்னும் கொடுத்திடுங்கள்
பயனுற வாழச் செய்திடுங்கள்
முயற்சி நாங்கள் செய்திடுவோம்.
முனைந்து இன்னும் உயர்ந்திடுவோம்
"மேனிலைக் கல்வி கற்றிடுவோம்
மேனிலை தன்னை எய்திடுவோம்"

வெள்ளை இருட்டுக்கு விடிவைத்தே
எல்லை இருட்டுக்கு எழுச்சியூட்டி
தொல்லை நீங்க தமிழை வளர்த்து!
"நூலின்" இருட்டை நீக்க நின்ற
பெரியார் தொண்டரே தொடர்க உம்பணி!

என வாழ்த்தும்,



**கோமாதா டெக்ஸ்டைல்ஸ்,**

மொத்த ஜவுளி வியாபாரம்,

பிள்ளையார் கோவில் தெரு,

சஞ்சீவி இராயன்பேட்டை, திமிரி வ. ஆ. மா.



# தகைசால் தணிகைக் கோ

## (தணிகைக் கோவின் வாழ்க்கை வரலாறு)

தணிகைத் தம்பி

தணிந்த தன்மை பெற்றதால் சிறந்த
தணிகைப் பதியணியாய் பெறத்திகழ்ந் நன்
மணிகளி லொன்றினை விளக்கப்
பணிவாய் முயலுமென் பணிக்கே சார்வாய்
கனிவாய் அருள்வாய் இன்தமிழே! நன்றே
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ
பாவேந்தர் பாரதிக்குச் சாற்றிய மொழியிது
சாவோலை வழங்க நேர்ந்தாலும் தமிழுக்குச்
சாவதற்கே பெற்றதிப் பிறவி என்றே
தமிழக வடவெல்லை தனையே குறைந்து
அமிழ்தான அவர்வாழ் வதனைச் சிதைக்கவென்றே
பெரியோர் செய்கைச் செயலால் சிறிதே!
பெரியோர் பெற்றியன் றென்றே யுணர்திட
முனைந்த முன்னோன் முனைவாய் இன்றும்
தொண்டே துணையாய்ப் பெற்றிலங் குந்தூயோன்,
துண்டுகொண் டுயர்ந்திட முனையுமிந் நாளிலும்
பண்டிருந்த நிலையிலே நிற்குந் நல்லோன்
பண்பாலே தொல்லையைத் தகர்க்கும் பண்பாளன்,
அன்பாலே அனைவர்க் குந்துணையாந் தகவோன்,
தணிகை வருவோர்க் கெல்லாம் கனிவாய்
இனிமையாய் வரவேற்குஞ் சான்றோன் என்றே
அறிந்தே யன்பால் வண்ணனூர் பகன்றார்
பரிந்த அவ்வுரை பெற்றிட்ட
வள்ளலாரின் பொதுமை நெறியில் நின்றே
துள்ளும் கருத்துக்களை வழங்கும் இலகுதேன்
விரிந்த உள்ளத்து வள்ளல்
சிரித்து மகிழுந் தன்மையால் ரசித்து
மாச்சரியங் கொண்டோர் பகையை மறக்குஞ்
சித்து முறையைக் கற்ற
சித்தர் முறையோடு செருமானிய மருத்துவ
வித்தை பயின்ற மருத்துவ நல்லோன்
மருந்தாம் தமிழை அமிழ்தாய் வடுகளுக்கு
அருந்தவே கொடுத்த பழக்கத்தால் ஆசான்
ஆசானாய் ஏற்ற சிலம்புச் செல்வரின்

பாசத்தின் தொண்டன் பெருந்தகை அண்ணாவும்
சோர்விலா கலைஞரும் போற்றிடுஞ் செயலோன்
ஓர்கிலா உள்ளத்தார் உடனுறைய அவர்தம்
போர்க்கோர் பழியும் என்னான் அவர்க்கும்
உற்றதைத் துடைத்துக் கடனைக் கழிப்போனைப்
பெற்றதாலே தணிகை பெற்றதோர் அணியை
உள்ளும் வள்ளுவராண் டிலாயிரத் தெஞ்சிய
தொள்ளா யிரத்தையும் பத்தெட்டில் பிறரின்
பங்காய் பாங்குறவே பணியாற் றின்புற
பங்குனித் திங்கள் பதினான் காம்நாளில்
பசித்தோர்க் குணவே யளித்த அட்சயமாய்
நலிந்தோர் வாழ்வுக்கு நம்பிக்கைச் சுடரென
வையகத்திற் வழங்கினா ரையன்
பையவே உழைப் லழகைப் பெற்றதால்
"அம்மூர்" பேரேற்ற சிற்றூர் தன்னில்
எண்ணிக் கையில் மூன்றுமவர் எனினும்
எண்ணுகையில் முதல்வர் சிந்தனையில்,

இல்லாமை இளமையில் இருந்த தெனினும்
கல்லாமை இருந்ததில்லை பாங்காய்
பள்ளிக் கொதுங்கிய தில்லையியன் பார்மேடையில்
பள்ளியில் கற்றால் தான்கல்வி என்போமா?
துள்ளும் பருவத்தின் முயற்சியால் கற்றார்
கொள்ளும் அவருள்ளம் இலக்கியத்தை ஏற்றது
எள்ளும் இயல்பில் லாமையால் கல்லாமை
அறியாமை அவரிடத் தில்லாத தாயிற்று
சரியாகத் தமைப்போல் முயன்று கற்ற
சலியாத சிலம்புச் செல்வரின் தொண்டராக
பிறந்த சிற்றூர் ஏற்றதன் றெனவே
துறந்து வந்தாரோ தணிகைக்கு, அவ்வூர்
தன்னை யணிசெய்ய வேண்டும் நீவாவென்
றழைத்தே வந்தாரோ, ஏதோ குடும்ப
வாழ்வுச் சிக்கலில் சிக்குண்டு சின்னாள்
கருநாட கத்தலைநக ரெனவின்று திகழும்
பெருநகர் பெங்களூரில் இருந்தும் வளர்ந்தார்
தந்தையை யிழந்ததால் திசைமாறித் திகைத்த
நொந்த குடும்பத் தொடுவந்தார் சொந்தமென
உற்றார் உதவியை நாடியே நயந்து
வேண்டிய போதா தரவளித்த தணிகை
ஈண்டிய பெருமை கொஞ்சமே யன்று.
தொழிற்கூட மொன்றில் சேர்ந்தே பயின்றார்
மரத்தொடு தகரத் தொழிற்செய் கூடமது
உரத்தொடு சில்லாண்டு பணியாற் றியேதன்
திறனோடு உசாவிடுந் நண்பரைப் பெற்றார்

ஆண்டுகள் சிற்சில கழிந்திடு முன்னரே
மாண்டதந் தொழிற்கூட மெனவே
மாண்ட மரபின் பெருமையே நாட்டிட
ஆண்ட அந்நியர் பிடியிலிருந் தேவிடுபட
கொண்ட காந்தியத் தினிளந் தொண்டராய்
அகவை யிருபத்தை நெருங்கு முன்னே
தகையான தொண்டராகி கூட்டங் கூட்டியே
மதுக்கடை மறியலில் துடுக்குடன் சென்றார்
உள்ளத் தெழுச்சியால் உயர்வாழ்வை நாடியே
கொள்ளத் தக்கதென நாடகத்தை நாடினார்
உலகமே நாடகமேடை அனைவரும் நடிகரே!
உலகப் பெருங்கவி சொன்னதால் வாழ்வில்
நடிக்காமல் நடப்பாலே வாழவும் முடியுமென
நடித்தே வாழ்வோர்க்கு காட்டிடவே விரும்பி
நடிப்புக்கு அரசியல் என்னுது முழுமையாய்
துடிப்புடன் பணியாற்றிட வென்பதனை யுணர்ந்த
விடுதலை இயக்கம் அந்நியரை எதிர்க்க
விடுதலைப் பெற்றால் மக்களுக்குப் பணியாற்ற
விடுதலையின் சிறப்பினை மக்களுக் குணர்த்தும்
பொறுப்பு இளைஞர்க் குண்டென எண்ணியே
பொறுப்புடன் இளைஞர் அணியைச் சேர்ந்தே
வங்கம் பெற்றளித்த சிங்க மறவர்
"தங்கம்" அவரின்பெயரால் வாலிபர்
சங்கங் கண்டுமுறை யாய்ப்பணி யாற்றிடுந்
நாட்டுத் தொண்டராய்த் திகழ்ந்த வந்நாளில்
நாட்டுப் போர்ப்படையி லொருவராய்த் தமையனார்
ஐராவதிக் கரையில் சப்பானியரை எதிர்த்தார்
நீண்ட விடுதலைப் போரினிதாய் முடிந்தது
வேண்டிய விடுதலைநாள் குறித்தா யிற்றால்
ஈண்டிய பெருமைக் களவில்லை யெங்கும்
கொண்டநற் கொள்கை வெற்றியே பெறுவதால்
ஊரெங்கும் நடந்த விழாக்களில் உவந்தே
பங்கேற்றுச் சிறப்புக் கொண்டார்.
காந்தியப் பாதையே இந்தியப் பாதையென
வெற்றிக் கொண்டாட முடியு முன்னே
சாதியவெறி திண்டாட் டத்தையே தந்ததால்
காந்தியம் தோற்குமோ காந்தி காலத்திலேயெனக்
கலங்கிய நேரத்தில் காந்தியார் மறைந்தார்
கலங்கித் தவித்தது நானிலம் - அக்காலக்
கலக்கத்தைத் தீர்க்கவே கைராட்டைத் துணையுடன்
காந்தியார் ஆன்ம அமைதி கொளவே
நயந்தே நூற்பு வேள்வியினைத் தொடர்ந்தே
நடத்தினார் நண்பர் தந்துணை யுடனே!
அண்ணல் உருவச்சிலை யமைக்கும் பணியேற்றே

கண்ணென அப்பணியைக் காத்துச் செய்தும்.
மருட்சி கொண்டோர் தவக்கத்தால், விரைவாய்
உருவான சிலைதிறப்பு சின்னாள் தவிர்ந்தது,
முந்திச் செல்லும் முயற்சியா லென்றும்-
உந்துவண்டித் தொழிலர் பேரைத் தவிர்க்க
பெருமுயற்சி கொண்டவூ ராட்சியினராவர்-
பேருந்துத் தொழிலாளர் என்பதால்
வெறிகொண் டிருந்த சாதியந் நாளினில்-
சமத்துவம் வேண்டிய வெறியாட்ட மானதால்,
தெளிந்தாரை ஐயுறும் நிலையே தோன்றியது.
அரசினரின் பொதுமைக் கணிப்பில் ஒருவராய்,
கண்காணிப்பால் கண்ணோட்டச் சென்றதப் பொதுமைக்கோ-
உடமை யொருவர்க் கென்பதாலே இல்லார்க்கும்
உடமைப் பொதுவாக்க வேண்டுமெனு முணர்வு
மிகுந்தே இல்லாமை இல்லாம லாக்கவே
இயைவது பொதுவுடைமை ஒன்றாலேயே எனுமவ்
வெண்ணம் வளர்ந்ததால் பொதுவுடைமை யாளராய்
மாற்றிக் கொள்ளாது அத்தத்துவத்தைத் தம்மோடு
போற்றும் வகையால் மன்றம் அமைத்துத்
தத்துவ விளக்க மளிக்குஞ் சுவடிகளை
நயந்தே வாங்கி நூலகமும் படிப்பகமும்
அமைத்தே பணியாற்றி விளக்கமே பெற்றதால்,
இல்லாதார் இருப்போர் நிலையோடு இருந்தும்,
இல்லாராய் இல்லாதிருந்துமி ருப்போராய்-
வாழ்ந்திடு நடுநிலை வகிப்போர் உளரேயவர்.
வாழ்ந்திடு வகைதான் என்னே! இந்நிலை
இந்நாட்டில் மட்டுமா,? பிறநாட்டி லுமுண்டே-
சிந்தித்து விடைபெறுதல் இயலுமோ, என்றும்
உழைப்பை நம்பியே வாழ்தல் நன்றால்,
உழைக்காமல் உல்லாசமாய் வாழ்வோ ரையுமவர்
வாழ்வுக்குத் துணையாய் இருந்திடு மிறையும்
தாழ்வு பிறர்க்குத் தோன்றவே காரணமாம்.

"ஆயிரமுண் டிங்குசாதி யெனில்
அந்நியர் வந்துபுக லென்ன நீதி''
"சாதியை களைந்திட்ட ஏரி நல்ல
தண்டமிழ் நீரினை யேற்கும்'' என்ற
பாவலன் பாரதியின் சொற்களோடு
"சாதிமதங்க ளண்டா நெருப்பவன்'' என்றே
சாதியைத் துறந்த பாரதியின் நிலையைப்
பாவேந்தர் பகன்றதை யுணர்ந்து, தேர்ந்து
சாதியற்ற சமுதாயம் அமைத்தல் நன்று
சோதியான வாழ்வை யளிக்க அஃதே ஏற்றது
சமுதாயப் பணியைப் பெரிதெனக் கொண்ட
பெரியார் பாதையில் நடந்திடவே நயந்து

பெரியாரோடு மாறுபட்டும், அவர்தம் பாதையை
சரியாகவே தொடர்ந்த இளைஞர் வழிகாட்டி,
உரிமையாய் இளைஞர்களை மயக்கிடு மாற்றலோன்!
போற்றிடுஞ் சொல்வல்லோன்! மேடைப் பேச்சின்
ஆற்றலுக்குக் கரியாய்த் திகழ்வோன்! அவனியில்
கல்லாததில்லை அவன்வாய் சொல்லாததில்லை யென்றே
அவர்காலத் தறிஞர் போற்றும் அறிஞர்
பெருந்தகை, பொருந்தா நிலையைப் போக்கிட
உருவான நல்லுணர்வை யளித்திடு திறலோன்!
செருவான பகையை நகையால் வெல்வோன்!
இன்றைய நிலையை மட்டுமே யெண்ணுதினி
தோன்றும் சமுதாயத்து நல்வாழ்வை யெண்ணியே
அவர் செயல்பட விழைந்த பெருந்தகை
இவர்க்கு ஏற்ற வழிகாட்டி யாய்த்திகழ
தன்னோடு பலரையுஞ் சேர்க்குந் திறத்தால்
முன்னுகைப் பகுத்தறிவுப் படிப்பகங் கண்டும்.
விருப்பால் 'கலைஞர்' கழகம் அமைத்தும்,
கலைஞர் கழகத்தின் முதற்காணிக் கையாக
'கருணாநிதி நாடக மெழுதி இயக்கி
சிறப்புற நடத்தி நாடகத்தின் நட்டத்தால்
படிப்பகத்தில் நாட்டம் முழுமையாய்ச் செலுத்தி
படிப்பகம் விரிவாகி பலரும் அறிந்திட
திருத்தணியில் திராவிட முன்னேற்றக் கழகந்
தொடங்கி செயல்பட முனைந்தே செய்தார்
நவம்பர்த் திங்கள் பதினொன்று நாற்பத்தொன்பதில்
குன்றத்தூரிலடக்கு முறை தொடர்ந்த நிலையால்
தலைமையேற்று தொடங்க வேண்டியோர் வராததால்
தலைமையேற்று, மணியான நண்பரே தொடக்க
செயல்படுதலே தனது நிலையென்றே தொடர்ந்து
கொள்கை முழக்கமிட்ட வந்நாளில்
சென்னைமா நகரத்தந்தை இராமசாமி நாயுடு
சித்தூர் மாவட்டத் தமிழர் முதலாய்க்
கூட்டிய மாநாட்டுத் தலைமை யேற்கவே
நடந்தது விடுதலை வீரர் சிவஞானம்
கட்டபொம் மனொடு புகழ் பரப்பிய
தமிழெல்லைக் காவலராக குரல்கொடுத் ததுடன்
தமிழ்முரசுத் திங்களேட்டில் எழுதியும் உணராத
தமிழர்க்கு அவர்நிலையை விளக்கியே யுரைத்தார்
தமிழ்வளர்ச் சிக்கழகம் தொடங்கியது தணிகையில்
தமிழ்வளர்ச் சிக்கழகம் தமிழர்க்குத் தமிழுணர்வை
வளர்க்கவே முனைந்து திங்கள் தோறும் கூடி
உயர்வாய் உணர்வும் இலக்கிய அறிவும்
செறிவாய் உணர்த்த முயன்று வந்தது.
தணிகைத் தமிழர் தாழுந்தமிழர் என்றேயறிந்

தணியாய்த் தம்நிலேயே உன்னினர் ஆதலின்
தமிழ்பரப்பும் பெரும்பணி யதனேயென்றும்
கமழும் வகையில் செய்திடுந் தி.மு.க. தன்
மேலாதிக்கஞ் செலுத்தியே வாழ்ந்தோர் சற்றே
திகைக்கவே தமிழார்வம் வளர்ந்த திங்கே!
தொடக்க நிகழ்ச்சிக்கு வருகை தராதிருந்து
தொடர்ந் தடுத்தே வந்திருந்த 'சம்பத்'
பேச்சை 'சம்பத்' பேசுகிருர் நூலாக்கி
பரிதி பதிப்பாய் வெளியிட்டார், வாழ்வின்
பரிதி யொளியாய்த் திகழவில்லே யந்நூல்
ஆண்ட அரசின் சூழலால் கழகத்தின்-
ஆணேயால் இந்தியப் பேரரசின் பேராளர்
தகைமை பெற்ற ராசாசி யவர்களால்
பன்மொழிப் புலவர் அப்பாத் துரையுடன்
நன்முறையில் கருப்புக் கொடிபிடித்துத் தடியடி பட்டார்.
மணவினே கொளவே பணித்தனர் நாட்டுப்
ப ணியை விடுத்திவ் வினேயை யேற்ருலப்
பணியை இனிதே செய்தல் இயலுமோ?
ஐயமிக் கிருந்தும் காத்திடுந் தமக்கைச்
சொல்லுக்குச் சிதைவின்றி மணங்கொண் டுந்தம்
செயலுக்குத் தடையிலா நிலேயைக் கொண்டார்.
இல்வாழ் வுக்கும் பொதுத்தொண்டு விரோத
மில்லேயென் பதாலோ என்னவோ 'விரோதி'
யாண்டில் தைத்திங்கள் பதிஞறில் வாழ்வில்
துணேயைக் கொண்டார், கசப்பிலா நிலேயில்
நாள்கள் ஓடின இயல்பான தன்மையில்,
நாட்டின் நிலேயைப் பொதுவில் பேசித்தீர்த்து
வாட்டம் போக்கலே என்னும், மாற்றத்தினே
காட்டிட பொதுவோசை தந்தே முழக்கும்,
மேடைகளும், சுவரொட்டி களுமோதிட முதல்
பொதுத்தேர்தல் அறிவிப்பு வெளியாயிற்று.
பொதுவான நிலேயையே காணமுடியா தன்மையால்
போட்டிகள் தோன்றின தமிழ் வளர்ச்சிக்
கழகமோர் அணியிலும் திராவிட முன்னேற்றக்
கழகமோர் அணியிலும் மோதியே நின்றன
கட்சிகள் இங்கே மோத வில்லேயால்
கட்சியற்ற நிலேமாறிகள் அறுவர் மோதியே
கட்சிக்கே வாகைதந்தனர். போர்
ஓய்ந்த பின்னர் விளேவுகளே எண்ணுவர்
ஆய்ந்த முடிவெடுக்கு முன்னே உடல்நலிந்து
காய்த்த வரெல்லாம் பரிந்திடு மளவுக்கு
மரணப் படுக்கைக்கே தள்ளியதால்
ஈரிரு திங்கள் படுத்தே கிடந்து
ஓரோராறு உடலுந் தேறிஞர். உருவம்

பெருமளவு மாறியே தோன்றியது. மெலிந்த
உரம்பெற்ற அவ்வுருமாறி உளவுரத்தின்
தரம் பெற்ற தோற்றமே பெற்றூர்! ஏற்றம்
பெற்ற வாழ்வுக்குத் தோற்றமே வேண்டும்.
போற்றும் வாழ்வைப் பெற்றிருந் தோற்றமது
மெய்ந்நலம் பெற்றதால் தொடர்ந்த தொண்டால்
வடக்கு வளரவுந் தெற்குத் தேயவுமா
யடங்கி நொடிந்த வாழ்வையே மாற்றிட
நடுவ ரமைச்சர்க்குக் கருப்புக் கொடி காட்டுங்
கழகத்தின் முடிவுப்படி இந்தி பிரச்சார சபையின்
முன்னுல் அமைச்சர் திவாகருக்கு
அண்ணன் நடிப்பிசைப் புலவர் 'ராமசாமியுடன்'
கொடியசைத் தேகைதாகி சிறைக் கோட்டஞ் சென்றூர்
தமிழரின் பற்றினை உணர்வினை எழுப்பிடும்.
தமிழக இளைஞர் அணியே தோற்றி,
தெருவெங்குந் தமிழ்முழக்க மெழுப்பியவ்வொலி
சிற்றூர் பட்டிதொட்டி யெங்குமெதிரொலித்தது.
தணிகை யணிசெய் யுமந் நாளிலேயே
ஆற்றின் அழகெல்லா மணித்தான காட்டாலென
ஆற்காட்டுக் கோட்டமென வழங்கிடும் வட-தென்
பிரிவுகளோ டிந்நாள் வழங்கும் பகுதி வட
ஆற்காடு மாவட்ட மளித்தே யுள்ளதால்-
பேராளராய் மாவட்ட தி.மு.கழகத்தி லிருந்தார்.
சித்தூர் மாவட்ட தமிழர் மறுமாநாடு
சத்தான வகையில் முடிக்கவே பன்னுள்
பணியாற்றி மாநாட்டின் சிறப்புக்கே
காரண மானவரில் ஒருவராய்த் திகழ்ந்தார்.
மாநகரத் தந்தையாம் செங்கல் வராயனுர்
தலைமை யேற்றிடவும் தலைவர் ம. பொ. சி. யொடு
ஜீவாவும் மற்றும் பலரும் உரையாற்ற
தலைகளாலே வேலியமைத் தேனுந்தமிழக வட
வெல்லையை மீட்டிடவே வேண்டு மென்றூர்
சீற்றமே கொளாது தமிழ்த் துறவியாய்
போற்றவே வாழ்ந்த கிழாரும் எல்லையை
விளக்கியே முத்தான உரைநிகழ்த்தி தணிகைக்கு
வெளியே யிருப்போர் உணரவே செய்தார்.
யதார்த்தம் பேசியே மற்றவைகளைப் புறக்கணிக்கும்
யதார்த்த வாதிகளும் அன்றதனை ஏற்றனர்.
ஆந்திர மாநிலமமைக்கும் வேகத்தில்
ஆத்திர மாயறிவித்த மக்களின் உணர்வை
யறிவிக்க வெழுந்த நிகழ்ச்சி தொடர்ந்தன
தமிழ் வளர்ச் சிக்கழகம் தமிழக வடவெல்லைப்
பாதுகாப்புக் குழுவென மாற்றப் பெற்றது.
எல்லைக் காவலர் அதன்தனித் தலைவரானுர்

நிலைத்த புகழைப் பெற்றிட்ட விநாயகம்
சலியாத உள்ளமுடை நண்பர் பலரும்
குழுவினராய் இருந்தே தமிழர் உணர்வை
எடுத்தியம்பி எல்லையை வரையறுக்க வேண்டியே
நடுநிலை நிற்குந் நீதியாளர் வேண்டியே
மரமெனவே வாழ்ந்தார் மக்களாதல் கண்டுதம்
உரமழிந்த தெனமருண்ட மாற்றார், வளமெலாஞ்
செலுத்தியே ஆளுவோரின் துணையை அதிகமாய்ப்
பெற்றிருந்த தானிழந்த போராட்ட மன்றிவேறு
மாற்றமில் நிலை தோன்ற களங்கண்டார்.
புகுமுன்னே பெருஞ்சோறளித்து ரையாற்று
முன்னோர் நெறிப்படி ஏப்ரல் திங்கள்
ஒன்பதாந் நாள்குறித்தே யானை யிட்டுச்செரு
தணிந்து உணர்வும் தணிகை காணவே
வலம்வந்து வட்டாட்சி யலுவலக முன்னர்,
ஐவர்கொள் முதலணி மறியல் செய்யவும்
இவ்வாறே நாளுங் களம் மாற்றியே போரிடவே
முடிவே கொண்ட போராட்டந் தொடர்ந்த னூரால்,
ஊராட்சி மன்றத் தேர்தல் நெருங்கவே
பேராட்சி மக்கள் தங்கருத்தே ஏற்றதென
தேர்தலில் வடவெல்லைப் பாதுகாப்புக் குழுவினர்
பெரிதும் பங்கேற்றுத் தீர்ப்பை யுணர்த்தினர்
பத்துக் கொன்பது இடங்களில் வென்றவந்
நிலையறிந்த பின்னர் மாவட்ட முழுவதும்
ஆந்திரம் என்ற நாட்டரசு எல்லைத்
தீர்க்கப் படவேண்டிய தொன்று அதனைத்
தீர்க்க நீதியாளர் வாஞ்சையுடன்
முடிவெடுத் தறிக்கை யளிக்கப் பணித்தனர்,
வந்த வாஞ்சு எதிர் வாஞ்சையால்
நஞ்சத் தீர்ப்பையே வழங்கினர்- பிரதமர்-
மொழியால் வேண்டுவது அறியாச் சிறுமையென
பழித்துப் போராட்ட முறைமாற்றச் செய்தார்
வாகைபெறப் போராட்ட முறையை மாற்றவே
சாகையொடு ஆய்வுகள் நடத்திய அந்நாளில்,
மேதிங்கள் இருபத்தி ரண்டாநாளில் தமக்கையார்.
தம்மக்க ளொடனைவருங் கலங்கவே மறைந்தார்.
அப்பொறுப் பையுந் தாங்குந் நிலையே ஏற்றும்
எப்பொறுப் பெனினும் நாட்டுப் பொறுப்பைத்
தட்டிக் கழிக்கவே யெண்ணுது, அத்திங்கள்
முப்பத் தொன்றுந் நாளன்று நடந்த
பொதுக்குழுவில் கலந்துகொண்டே தணிகை எல்லைப்
போரில் நிலையினை தி.மு.கக் காவலர்க்
கெல்லாம் விளக்கியே, அப்போரில் கலந்துக்
கொண்டதைப் பாராட்டி அப்பொதுக் குழுவே

மற்றும் மொழியுணர் வுப்போரை யறியாத்தனமென
சற்றும் எண்ணாமலே சாடியதைக் கண்டித்து,
மாநில முழுதும் வண்டிநிறுத்த மொடு-
மும்முனைப் போராட்டம் சூலைத் திங்கள் பத்தொடு
ஐந்தாந்நாள் நிகழ்த்து வதையறிவித்தனர்
போராட்ட முறையை மாற்றவே யெண்ணிப்
போராட்டம் நிறுத்தப் பட்டிருந்ததை மாற்றிட
கருத்தறிந்து செயலாற்றும் இளைஞர் அணியைத்
திரட்டும் பெரும்பணியை அமைவரச் செய்ததால்
திரண்ட அணியின் நவமணிகள் சூன் திங்கள்
இருபதாந் நாளன்று மறியல் களமெனத்
தொடர்வண்டி முன்னர் இருந்தே மறித்தனர்
நோக்கமொன்றாய் ஆகஸ்ட்டுப் புரட்சி
என்றே கேட்டதுண்டு தன்மை யறியோம்-
அன்றே அஃதென்ன வென்றறிந் தோமென
தொடர் செய்திகளைத் தரவுமியலா நிலையில்
தகர்ந்தன கம்பிகளும் செயலிழந்து நறுக்குண்டு
தொடர்வண் டித்தொடர்ந்து நின்றதிங்கே
மாற்றார் மருளவும், உற்றார்- உணராமுன்
செருமுனை நோக்கியே சென்றவர் மீண்டார்
ஒருமுனை என்பதன்றி பன்முனையில் முறையின்றி
உருக்கொண்டது மக்கள் போராட்டம், களத்தில்
கண்ணுங் கொளவியலா லொரே முறையைக்
கண்ணான மொழியை யிழந்தோர் காட்டுவரோ
அண்ணலா ருமந்நிலையைக் காட்டவிய லாததை
எண்ணுகை யிலிவர்நிலை இயல்பே யன்றோ,
வானொலிப் பெட்டியுடன் பூங்கா இன்னன
பலவும் தகர்ந்ததால் காவலர் கலங்கிப்
பாய்ந்தே கைதாக்கினர் முதற்கள நவமணிகளை
தணிகையை மீட்கவே சிறைபுகுந்த நவ
மணிகளில் ஒருமணியை நடத்திச் சென்றவத்
தகையாளர் சிறைபுக்க முதல்வர் இவரே
காவல் நிலையக் காவலிலிருந்து திருப்பதி சிறைக்கே
கொண்டு சென்று பதினைந்து நாட்காவலில்
வைக்கப்பட்டனர். ஆனாலும்,
தொடர் வண்டி நிறுத்துப் போராட்டம் வகையாய்
தொடர்ந்தே நடத்தப் பட்டது வண்டியின்
சங்கிலியைப் பிடித்திழுத்தே நிறுத்தி
அணியணி யாய்ச் சிறைக்கோட்டமே சென்றனர்.
இருபதில் இருந்தே தொடர்ந்த வண்டி
நிறுத்தப் போராட்டம் மாநிலந் தழுவிய
நிலையை யொட்டியதால் சிறுபிள்ளைத் தனமெனச்
சொல்லியே சினந்தார் குழந்தைத் தனத்தை
யென்றுமே விரும்பிப் போற்றும் பெரியவர்

வட வேங்கடவன் குன்றச் சிறையிலடைத்தனர்.
வேங்கடத்தை வேலவன் மறவாதிருக்க வேண்டவே
வேங்கடத்தில் சிறைவைத் தனரோ அந்நாள்
சிறையில் இருந்தநாளில் அவர்தம் மூத்த
மகன் பிறந்தனன். பிறந்த மகனைக்
களத்திற் பகைவரை எரிந்த செங்கண்
சினமாருது கண்ட அதிகனின் நாட்டில்
மகனைக் காணவுமுடன் விழையாத் தந்தையிவர்
சற்றே வளர்ந்த தாடி வளர்ந்தல்லால்
சிறையென்ன செய்திடும் பற்றுளரை யென்றே
இவருக்குத் தலைவரன்று தந்த புகழுரை
பதினைந்தில் நடந்த மும்முனைப் போரில்
பங்கேற்க இயலாத நிலையால் இவர்தம்
தம்பியருள் ஒருவரிப் போரில் கலந்தார்
தம்பியுடை யான்படைக் கஞ்சான் அன்றோ!
மும்முனைப் போரிலொரு முனையான குலக்கல்வி
திட்டத்தை எதிர்க்கும் போரிலும் கழகம்
செலுத்திய நாட்டத்தை எதிர்த்து விநாயகம்,
வெளியிட்ட கருத்தால் எல்லைப் பாதுகாப்புக்
குழுவில் சற்றே விரிசல் தோன்றியது
இயல்பான குணத்தால் மாற்றுக் கருத்தினரை
ஒதுக்கவே முனைந்தாரவர் தம் செயலால்
பொதுமேடையில் வெறித்தனந் தோற்றுவித்தனர்,
கழகத்தா ரில்லங்களும் கல்லடி பட்டன
கழகமின் றும்பட்டு விடவில்லை இங்கே!
புதுடில்லி மாநகர்க்கு தூதுக்குழு சென்றே
பொதுவான நிலையையே ஆட்சிக் குணர்த்த
பெருங்குழு சென்றது எல்லையின் நிலையினை
உருவான வகையில் விளக்கிய கிழாரும்
செருமுனை யிலே முதல் வராயிருந்த இவரும்
குழுவிலே இடம் பெறவில்லை விந்தை
தமக்கென எதுவும் வேண்டாது என்றும்
நலமே வேண்டுவோர் ஏற்றனர் அதனை
எல்லையின் நிலையைத் தெளிவாய் கூறிடவே
மாநில மொழிவாரி அமைப்புக் குழுவ
மைக்குஞ் செய்தியே சேர்ந்தது.
மொழிக்கு ஏற்பட்ட இழிவைப் போக்கும்
அழியாத பணியைக் கொண்ட ஆசானும்
கிழார் சேதிகேட்கு முன்னே மறைந்தார்.
அச்சேதி தஞ்செவியில் சேர்ந்த கிழமையிலே
தகையான நண்பரை யிழந்ததால், கிழாரும்
நண்பரையே தொடர்ந்தே நடந்தார்
தமிழகம் தமிழ்த் தென்றலை இழந்தது.
தமிழ்ப் பெரியோ ரிருவரை யிழந்த நிலையில்

எல்லைப் போர் சற்றே தளர்ந்தே தணிந்தது.
சித்தூர் மாவட்டத் தி.மு.கழக முதல்மாநாடு
பொதட்டூர்ப் பேட்டையில் கூட்டப் பட்டதால்
மாநாட்டின் செயலாள ராயிருந்தே செயல்பட்டு
மின்னிணைப் பில்லாதிருந்த அவ்வூரில் அந்நாளில்
மின்னுக்கக் கருவியைக் கொண்ட மைத்தே
மின்னித் திரையில் வீசிக் கொண்டிருந்த நடிகரின்
அன்றைய ராமச்சந்தர் புரட்சித் தலைவரின்.
இடிந்த கோயில் நாடகத்தை நடத்திடவே
துணிந்தே வாய்ப்பளித்ததும் அண்ணாவின் இலட்சிய
நாடகமாம், சந்திரமோகனை, இலட்சிய
நடிகரேற்றே, நடிப்பிசைப் புலவரின் முன்னிலையில்
நடிகமணி, மகாலிங்கம், திருமலை, கிருட்டினனுடன்
நடத்தியே மாநாட்டிற்கே சிறப்புச் செய்தார்
மொழிவழி மாநில அமைப்புக் குழுவொரு
வழியாய்ப் பணிக்கர் தலைமையி லமைந்தது
பணிக்கரின் பணியால் மொழிக்கு வாழ்வில்லை
கணிக்கும் வகையில் பெரிதுமி டரெனவே
எண்ணியதால் எல்லைப் போராட்டந் தொடங்கியது.
போர் தொடர விரிசல் இணைந்தது· ஆந்திர
மாநிலச் சட்டப் பேரவை கலைந்ததால்
மாநில இடைத்தேர்தல் வந்தது.
மூன்றே தொகுதிகளில் எல்லைக்குழு போட்டிக்கு
முயன்றே வரிந்து நின்றது. திருத்தணிக்கு
உரிய ஒருவரை நிறுத்திக் கழகத்தின்
அரிய ஒத்துழைப்பு வேண்டியதால் ஆய்ந்தே
அண்ணா தனித்தே அழைத்துக் கலந்தே
திராவிட நாட்டிலே எழுதினார் அன்றே
கழகத் தோழர்களோடு ரசீத்தைத் தனித்தே
யழைத்துக் கலந்திம் முடிவெடுத்தோம்.
கழகத் தோழர்கள் எல்லைக் குழுவின்
வேட்பு நர்க்கே வாகைதர முயலல் வேண்டுமென,
ஆணையிட்ட தலைவரை மீறிடாத் தொண்டராய்
முனைவான பணியையே யாற்றினார்.
மூன்றிலொரு தொகுதியில் எல்லைக்குழு வென்றது.
தணிகையில் வாகைபெறும் வாய்ப்புச் சற்றே
நழுவிற்று யதார்த்த வாதிகளால் மக்கள்
சோர்வுற்ற நிலையினை மாற்றிடவே
அயர்விலா பணியை மீண்டுங் கொளவே,
அன்னியர் ஆதிக்க மதையெதிர்த்து முழங்கிய
முதல்முழக் கந்நாடகத் தினைநடத்த எண்ணி
எல்லைப்பாது காப்புக்குழு நாடகத்தை
இயக்கும் பணியை யிவரே யேற்றும்.
நடித்தார் நாடகப் பணியின் பயிற்சியால்

இரண்டாம் மாநில மாநாடு திருச்சியில்
நாவலர் தலைமையில் கூடியது. பொதுக்
குழுவிலங்கம் பெற்றிருந் த.தாலங்கே சென்றே
குழுக்கூட்டத் திற்கலந்து தணிகை யெல்லைப்
போரினை யேற்றுக் கொள்ளும் நிலையிலாத
தன்மையைக் கண்டித்தே மாநாட்டிலிருந்து
திரும்பி யெல்லைக் குழுவில் தமையே முழுதும்
ஈடுபடுத் திக்கொண்டார். எல்லை வேள்வியில்
தன்னையே இந்தன மாக்கிய போதும்
என்னனை யோர்க்கு ஒளிதர தவறவில்லை.
போரின் திசை வீசிய அரசியற்
புயலுக்கேற் பக்களம் மாறியே சென்றதால்
சென்னையைக் களமாகக் கொண்டே நடந்தே
பயணஞ் செய்தே தமிழர்க் கெழுச்சி தர
தணிகையிற் தொடங்கிய தொண்டர் படை
அணியாய்த் திரண்டே நடந்தே சென்றனர்.
போராட நடந்தே சென்றவரை கைதாக்கிச்
சிறைசெய்தே மக்களுக் கெழுச்சி யூட்டியே,
மக்கட் போராட்டம் எல்லையை மீறிடுமோ-
வென்னும் அச்சமே வளர்ந்தே நிலைத்ததால்,
தலைநகரில் இப்படையைக் கண்டே தெளிந்த
தலைமக்கள் தலையாட்டி போரின் நிலையறிந்து.
சிலவற்றைக் கொடுத்துச் சிலதைப் பெறுவோமென
வழக்கமான வாணிபத்தைச் செய்தனரே!
எல்லையை வகுக்கவே நீதியறிந்த ஒருவரை
தொல்லையில் லாமல்தரவே உறுதி யளித்தார்.
உறுதியை உறுதியாய் நம்பியே போரின்
இறுதியை நெருங்கியதாய் நம்பி இருந்தனர்.
முடிவுதெரியு முன்னே இரண்டாம் பொதுத்
தேர்தலே இடைப்பட் டதால் தேர்தல்
பணிகள் துணிவான நிலையைத் தருமோவென
கனிவாய்க் காத்திருக்க நேர்ந்தது. அந்நாள்
அண்மை யிடைத்தேர்தல் முடிந்திருந்த
தணிகையிற் சட்டமன்றத் தேர்தல் இன்றாய்
நாடாளுமன்றத் தேர்தலே நடப்பதால் சிலையான
நாடாளுமன்றத் துணைத் தலைவர்
நிலையாய் வாகைபெறுந் தொகுதியாய் தணிகை
இருந்ததால் மாற்றமே யெண்ணி முனைந்து.
முயன்றும் முடியாத நிலையா லெல்லைக்குழுவின்
இயல்பு மாறாதவகை யான ஓரியக்க
மாயிருந்தாலே நன்றால் தணிகைத் தளபதி
ஓரணியிலும் தலைவரோர் அணியிலு மற்றோர்
ஓரணியிலும் இருத்தல் ஒல்லாதன் அனைவரும்
ஓரணியில் திரளுதல் எல்லையின் தொல்லைக்கு



நன்றென்றே ஓரணியில் திரண்டு பணியாற்ற
எண்ணியே கழகத்தி லிருந்து விலகினார்.
பண்ணாய் ஒளியாய்த் திகழவே தலைவரோடு
என்றுமே இருந்திட அவரோடு சேர்ந்தார்.
தேர்தல் முடிவு பெரிதான மாற்றமே
தோற்றாத தால்முன் நிலையே நீடித்தது.
போராட்டம் மீண்டுந் தொடங்க வெண்ணியே
போராட்டம் தணிகையிலே நடக்கவே-இருந்தே
ஆந்திர அரசினர் தொண்டரைக் கைதாக்கி
சிறைக் கோட்டமே யனுப்பினர். முன்னர்
திருப்பதி வரையே சென்றவர் இப்போது
திருப்பதி கடந்தே "ராஜமகேந் திரபுர"
சிறைக்கே கொண்டே சென்றனர். ஆறுமாத
தண்டனை யேற்றார். திங்களாறில் நிலையே
ஏதாகு மோயென்றே கலங்கினர். சிறையில்
சிவாவின் உருவை மாற்றினர். அந்நாள்-
சிதம்பரத் தண்ணலை மறக்கவே செய்தனர்.
தாளமுத்து நடராஜன் பிணமானார். என்னும்
நெடிய வரலாறே யுளதால் இப்போதும்.
கோவிந்தசாமி, பழனியும் பிணமே யாயினர்.
மற்றோர் நிலையை யெண்ணிக் கலங்கியே
உற்றோர்க் கலக்கமே தீர்க்கும் ஆற்றால்,
திங்கள் ஆறினுக்கு முன்னரே விட்டனர்.
போராட்டம் வாகையே பெற்றதால்,
நடுவராணை யேற்றே நடுவரான படாஸ்கர்
தங்கும் அமைதிகொள் தணிகைப் பதியொடு
பொங்கும் இன்பஞ் சேர்த்தமிழ்ப் பகுதிகள்
இன்றும் தமிழகத்தோடே யிணைதல் வேண்டு
மென்றே மகிழ்வான முடிவே தந்தாரென்னினும்
அன்றே தமிழகப் பகுதிகள் சிலவற்றை
ஆந்திரத் திற்கே யளித்துத் தீர்த்தார்.
பணிகளி லிருப்போ ரிங்குமங் குஞ்செல்வோர்.
ஆண்டுக் காலத்தை வரையறுத் திருந்தார்.
அரசினர் ஆண்டின் தொடக்கமே யெல்லைப்
பரிமாற்ற நாளென வறிவித் திருந்தார்.
ஆயிடை ஊராட்சி மன்றத் தேர்தல்
விளைந்து போராடி வாகையே பெற்றதால்
தேர்தல் களத்தில் பிறரை யேற்றியே
இருந்த ஏணியான இவரும் கலந்துகொள
ஏணியே ஏறக்கூடா தென்பதாலோலன்றி.
என்னவோ கலகத்தின் மகிழ்ச்சி யடையுங்
கலைந்த மனங்கொள் சிலரின் வஞ்சகம்
மலிந்த தேர்தல் தோல்வியே தந்ததால்.
சலியா மனங்கொள் தகையாள ரானதால்

வலிந்த எல்லைமாற்ற நாளாய்க் குறித்தநாளில்
வாகையைக் குறிக்குந் தோரணங்க ளமைப்பிலும்.
பாங்கான வகையில் வருவோரை யேற்றலும்.
உரித்தான பலபணிகள் முறையாய் முடிந்தன.
எல்லையைக் காத்தபின்னுந் தமிழ்ப் பணியே
தொடர்ந்த தால் தமிழரசுக் கழகத்
தொண்டராய் தொடர்ந்திணைச் செயலரானார்.
கொண்ட வுறுதியை இழக்காத செயலால்.
மாநில சுயாட்சியை எதிர்த்த தமை நினையா
தமிழக அமைச்சர் செல்லுமிட மெங்கும் கருப்புக்
கொடிகாட்டும் முடிவுப்படி தணிகையில் அன்றைய
முதல்வர் பக்தவச்சலனாருக்கும் எதிராய்க்
கருப்புக் கொடி காட்டியே கைதானார்,
அறிவொளி கிழமையேட்டின் பழக்கத்தால்
செங்கோல் பணியும் இருந்தது என்பர்
எப்பணி எதுவாயினுந் தொடங்கியப் பணியை
அப்பணி முடியுவரை விடாதே முடிக்குமிவர்
தலைவரின் மணிவிழா வளித்த அணியான
நிலையால் தம்பணியைக் கழகத்திற்கே துணையாக்கி
நாட்டின் நிலையையே தெளிவாக்கிய தேர்தலில்
போற்றிடுஞ் சனநாயகத்தையே தோற்றுவித்த
ஏற்றமிகு நான்காம் பொதுத்தேர்தல் நிலையே
நாடறிந்த தொன்றேயாகும். மறந்திலாரும்.
நாடறிந்த நல்லோன் நாடாளுமன்றத்திற்கு
தேர்வு பெற்றதும், தமிழக முதல்வராய்
பொறுப்புக்குப் பொறுப்பைத் தரும் பொறுப்பேற்றதும்
பொறாத மாற்றாரின் கூற்றுக்கே கூற்றாய்,
இருந்தும் என்றும். வாழ்கின்றார் உள்ளத்தில்
அவரடிச் சுவடுகளை யொற்றியே கலைஞர்.
ஆட்சிப் பொறுப்பில் தன்னாட்சி நிலையைத்தம்
மாட்சியாய்க் கொள நினைவுறுத்த.
மாநில சுயாட்சியை வேண்டியே வலியுறுத்தி
மாநில முழுதும் தொடர்ந்த அடையாள
மறியலை அஞ்சலகமுன் குடந்தையில் தலைமையேற்று.
அக்கொள்கையை நடத்தியதால் கைதாக்கி விட்டனர்
மாட்சியாய்க் கொண்டே யிருத்தலான்- நாடாளு
மன்றமே கலைத்துத் தேர்தல் வேண்டியே
மாநிலத் தேர்தலும் இணைத்தே நடத்திட
துணிந்தார். கலைஞர் தோழமைக் கட்சியாளருடன்
தணிந்த தணிகைப் பதியினர் கருத்தறியா
திருந்த நிலைக்கே மாற்றங் காணுமுன்
இருந்த நிலைக்கே மீண்டும் வந்ததால்
கழகத்தின் பணிகளிலே தமை யிணைத்தார்
தொடர்ந்த பணிகள் தொடரவே என்றுமுள

95

தென் தமிழ்த் துணைபுரிகவே!
தக்காரென் பதனைச் சாற்றவே யவரின்
எச்சம் என்றும் இருக்கு மெனினும்.
மக்கள் ஈரிருவர் ஐயன் தொண்டைத்
தொடரவே யீரிருவர் இயல்பான இல்வாழ்வினை
ஏற்றிட மகளிருவர் வளர்கவே நன்றே
நான் வாழ நாடுவாழ்ந்திடு மென்றே யெண்ணி
தமைவாழ் விற்குமியல் பாளரே நினைந்த
இந்நாளிலும் தாம்வாழ வெண்ணுதே வாழுமிவர்
தாழ்வுத் தமிழ்தந்த வாழ்வே யென்பேன்.
தமிழுக்குத் தொண்டு செய்யவே தமிழிலக்கிய
மன்றமே யமைத்து இயன்ற பணியை
என்றுமே செய்யுமிவர் தணிகை வட்டத்
தமிழர்க்குப் பணிசெய்தே 'மாய்ந்த'
மங்கலங் கிழாரிலக் கியமன்றத் தினுக்கே
ஓங்குத் தலைவராய் திகழ்கிறார். வாழ்கவே!
பணியில் படிந்தாலும் தாழ்வில் படியாத
அணியான வாழ்வைப் பெற்றே தழைக்கவே!

★


இடர் பட்டாலும் துயர் பட்டாலும்
இன்னுயிர் தமிழ்க்கேனன
இன்னும் தொண்டாற்றும்
எம் தணிகைக்கோவே
வாழிநீ பல்லாண்டு!

உயர்ந்தரக சில்க் வகைகள், காட்டன் பிரிண்ட் சேலைகளுக்குச்
சிறந்த இடம்:

**மரகதம் டிரேடர்ஸ்,**

மொத்த ஜவுளி வியாபாரம்,

**70/50. கிடங்குத் தெரு, சென்னை-1.**



# சித்தம் தெளிந்த மருத்துவன்

டாக்டர் V. சிவலிங்கம், R. I. M. P.
2, ஆலமரத் தெரு, திருத்தணி.

வரலாறு, காலச் சுழற்சியில் தன் பாதங்களைத் தானே பதிய வைத்துக் கொண்டு போகும். சில நேரங்களில் இவ் வுலகில் பிறந்தோர் தம் சுவடுகளை அழுத்த மாக வரலாற்றில் பதிய வைப்பதும் உண்டு. வாழுங்காலத்தில் மரியாதை பெறாமல் மீண்டும் ஓர் ஆராய்ச்சி -யாளனால் அறிமுகப்படுத்தப் படும்போது "ஆகா ஓகோ" என்று புகழப்படுவது இந்த தேசத்தில்சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று. இங்கே எழுதவேண்டியவர்கள் கையில் எழுத்தாணிகூடப் போய்ச் சேர்வதில்லை. அந்த அளவிற்கு வறுமை உண்டு.

எழுதுவதாகச் சொல்லி இங்கே கருத்து திருடி வாழ்பவர்களுக்குக் கிடைக்கும் 'மரியாதைகள்' ஏராளம். சாதியாலும் பல்வேறு பேதங்களாலும் நோயற்றுக் கிடக்கும் இச் சமூகத்தை, மாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் சித்தவைத்தியத்தைப் போன்று மறைக்கப்பட்டே இருக்கின்றார்கள். நிகழ் காலம் மறந்துவிட்ட மாமேதைகளில் ஒருவர் மதிப்பிற்குரிய தணிகைக்கோ டாக்டர். ந. அ. ரசீத் ஆவார்.

இன்றையச் சமூக அடிப்படையைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள அப் பெரியவர் வடக்கெல்லைப் போர் வீரராகத் தணிகையிலே சொல்லப்பட்டாலும் அன்னாருடன் நெருங்கிப் பழகும்போது தான், அவரிடமுள்ள அளவிடற்கரிதான ஆற்றலையும், சிந்தனையையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு சூரணமோ அல்லது பஸ்மமோ அளவிலே சிறியதாக இருந்தாலும், அதனால் குணப்படுத்தப் படும் நோயாளி இச் சமூகத்தின் அங்க மான மனிதனேயாகும். அதேபோன்று தணிகைக்கோ அவர்களின் கருத்துக்கள் இத் தேசத்தின் வளமான எதிர்காலத் திற்கு வழிகாட்டக் கூடிய சிந்தனையாக அமைந்துள்ளன. அவரை ஒரு எல்லைப் போர் வீரராகச் சித்தரிப்பது என்பது ஆகாயத்தை மடக்கி, சொம்புக்குள் போடு கின்ற கதை போலாகும்.

அன்னாரின் தமிழுணர்வும், இனஉணர்வும், இந்திய ஒருமைப்பாட்டின் மீதுள்ள நம்பிக்கையும், அதே நேரத்தில் தேசிய இனங்களைப்பற்றிச் சிந்திக்கும் பாங்கும், அடிமைத்தனத்திற்கான காரணங்களை அலசி ஆராயும் போக்கும், பொருளாதார விடுதலைக்கான தொலை நோக்கும், சமூக விடுதலைக்கான வழியினைத் தேடும் ஆய்வு நோக்கும், ஆய்வாளர்களாலோ அல்லது அறிஞர்களாலோ கௌரவிக்கப்பட்டு செயல்படுந் திட்டமாக்கப்பட வேண்டியவை.

காலம் தன்னை கௌரவிக்காவிட்டாலும் அதற்காகக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் தம் வழியினைத் தொடர்ந்து நடத்திச் செல்லும் அன்னார் பல்வேறு குணங்



# ஒரு நூறில் ஒன்று!

**செயப்பிரகாசு,**
அண்ணா நடமாடும் நூலகம்,
திருத்தணி,

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு புகழ் உண்டு. அது அங்கே அமைந்துள்ள கோவிலால் இருக்கலாம் — ஊரில் உள்ள கலையால், தொழிலால், பாரம்பரியத்தால், ஏதேனும் ஒரு காரணம்பற்றி இருக்கலாம். அதுபோலவே தணிகைக்கும் சிலகாரணங்களால் புகழ் மட்டுமல்லாது, வரலாற்றில் ஒருமுக்கியப் பகுதியாக இடம்பெற நேர்ந்ததால் சிறப்பானதோர் இடம் உண்டு. என்ன அது? அதுவே எல்லைப்போர். தமிழக வரலாற்றில் தெள்ளாற்றுப் போரும், இந்திய வரலாற்றில் பானிப்பட் போரும் தவிர்க்க முடியாதது போலவே தமிழக வரலாற்றில் எல்லைப்போர்.

எல்லைப்போர் வீரர்களைப்பற்றி நூலகத்தில் சில நூல்கள் உள்ளன. அதைக் கொண்டும், செவிவழிச் செய்திகளைக் கொண்டும் என்போன்ற இளைஞர்கள் அறிய முடிகிறது. அப்படி அறியும் செய்திகளில் முதன்மை பெறுவது ந. அ. ரசீத் அவர்களைப் பற்றித்தான்! மங்கலங்கிழார் மன்றம் மூலமும், வேறு தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளின் மூலமும் தணிகைக்கோ அவர்களின் இலக்கிய அறிவினை வியந்து பார்க்க நேரிட்டது மட்டுமின்றி, ஒரு பெரும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. நம்முடைய சமகாலத்தில் ஓர் பேரறிஞரைச் சந்திக்க முடிகிறதே! அதிலும் அவர் தணிகையைச் சேர்ந்தவராகவே உள்ளாரே! என்பதே அது.

குணங்குடி மஸ்தான் சாகிபு பாடலுக்கு உரை எழுதிப் பதிப்பித்த அப்பெரியார் அவர்களுக்கு உலகப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியதையும், அதை ஒட்டி நடந்த பாராட்டுக் கூட்டம் தணிகையில் நடந்தபோது அந்நிகழ்ச்சியால் இவ்வூரே பெருமை பெற்றது என்பதையும் நான் மகிழ்வோடு எண்ணிப் பார்க்கின்றேன். தணிகையில் என் போன்ற இளைஞர்கள் 100பேரை ஒன்றாகத் திரட்டி எங்களைக் கவிஞர்களாக்கி, பாரதி நூற்றாண்டு விழாக் கவியரங்கம் நடத்திக் காட்டிய சிறப்பு பெற்றவர் அவர். அவரது மொழிப் பற்றும், இனப் பற்றும், தேசப் பற்றும் என்னால் பின்பற்றப்படும் என்பதை நன்றியறிதலுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க அப்பெரியார் என்று வாழ்த்தும் வயதன்று. இருப்பினும் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து என் போன்றோரை வளர்க்க வேண்டுகிறேன். வணக்கம்.

---

முன்பக்கத் தொடர்ச்சி...

கொண்ட மருந்து வகைகளைப் புரிந்து, தெரிந்து வைத்திருக்கும் சித்த வைத்தியன் போலானவர். அவரிடமிருந்து கற்றுக் கொள்ளப்பட வேண்டியவை இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஏராளமுள்ளன.

ஒதுக்கப்படுபவர்களிடமிருந்துதான் புரட்சி வரும் என்றால் இன்றையத் தினம் சுயநலக் காரணங்களால் பலரிடமிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் இவராலும் ஒரு புரட்சி வரும். அது ஒரு விடியலைக் கொண்டு வரும். அன்னாரின் வழி நடக்கும் ஆர்வத்தோடு, அவருடைய 57-ஆவது பிறந்தநாள் விழாவிற்கான மங்கலங்கிழார் இலக்கிய மன்ற 10-ஆவது ஆண்டு நிறைவு மலரில் எனக்கு வாய்ப்பு அளித்தவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளத்தோடு வாழ்க பல்லாண்டு.

## பிறந்த நாள் வாழ்த்து



அ. பாபு, பி.ஏ., பி.எல்.,
8, சன்னதி தெரு,
வடபழனி, சென்னை-26.

தமிழன்னை ஈன்றுள் எத்தனையோமுத்து
தணிகைக்கோ ரஷீதும் அவளதுசொத்து

தோற்றத்தில் பார்த்தால் கம்பீரமானவர்
தோழமை வளர்க்கும் கனிவானமனத்தவர்

நாட்டில் வாழுகிறுர் ஒருசிலநல்லவர்
நானறிந்த அவர்களுள் இவரும்ஒருவர்

தான்வாழத் தமிழ்பேசும் மனிதர்கள்நடுவில்
தமிழ்வாழ தான்வாழும் தன்மானமனிதர்

இன்றுபோல் வல்லமை கொண்டுஇவர்
இம்மண்ணில் என்றும்வாழ வாழ்த்துகின்றேன்.

தணிகைக்கோ டாக்டர். ந. அ. ரஷீத் அவர்கள் பல்லாண்டு வாழ்க!

பெயிண்டிங், மின்சார ஒயரிங் சம்பந்தப்பட்ட சாமான்கள்,
சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ், ஜி. ஐ., பி. வி. சி. பைப்புகள்
குறைந்த விலையில் பெறுவதற்கு

அணுகவேண்டிய இடம்:

எங்கள்

**இந்தியன் ஸ்டோர்ஸ்,**

பூந்தமல்லி நெடுஞ்சாலை,
மணவாள நகர், திருவள்ளூர்-602002.

மங்கலங்கிழார் மன்றமும் தணிகைக்கோவும் பல்லாண்டு வாழ்க!



ஒலி, ஒளி அமைக்க சிறந்த இடம்:

**உமா சவுண்டு சர்வீஸ்**

அம்மையார் குப்பம்

உரிமை: கோபால்

நல்வாழ்த்துக்கள்:

## ஸ்ரீ சக்தி அச்சகம்

அச்சு வேலைகள் அழகுறச் செய்யுமிடம்
21-B, திருக்கச்சிநம்பி தெரு,
காஞ்சிபுரம்-3.

உரிமையாளர்: B. தாமோதரன்

ந. அ. ரஷீத் அவர்கள்
பல்லாண்டு வாழ்க!



**P. S. பார்த்தசாரதி, B.A., B.L.,**
திருத்தணி.

WITH BEST COMPLIMENTS FROM;

**For L I C Policy Holders Service Please Contact**

***K. Sankar Raj***
*Agent L I C*
Thiruthani.

**ST. MARY'S SCHOOL,**
THIRUTTANI.

**Her Aim is to SERVE**

கல்வியின் தரம் உயர
ஒழுக்கம் வளர
திறன் தழைக்க
பாடுபடுகிறாள்

**புனித மேரிப் பள்ளி**
திருத்தணி



# கோ. ரசீத் கொள்கை அண்ணல்

**— பெங்களூரான் —**

தணிகைக்கோ ரசீதின் தனித்தொண்டு
  தமிழுக்கு! தாய், நாட்டிற்கு;
பணித்திட்ட வரலாற்று நற்பணிக்கு
  நன்றிக்கடனாக நானிலத் தமிழருக்கு
மணிமுத்து புகழ்மாலை சூடுதற்கு
  ஐம்பத்து ஏழாண்டு அகவைக்கு
கணித்திட்ட காவியநல் நூலுக்கு
  வாணி தாசுழைப்புக் கோரசீதுக்கு

தொல்லைபல தாங்கி நின்றான்;
  தணிகை எல்லை மீட்க;
தொல்லுலகில் தனித்தமிழரசு கேட்டான்
  சொல்லொணா கொடுமை பட்டு!
அல்லலுறும் தமிழனாய் அவதியுற்றான்;
  அன்னை தமிழ் காப்பதற்கு!
சொல்லும் செயலாலே சிறப்புற்றான்;
  **கோ. ரசீத்** கொள்கை அண்ணல்!

குணங்குடி மஸ்தான் பாடலுக்கு,
  திறனாய்வு விளக்கந் தந்தான்!
பண்புடனே பைந்தமிழர் வாழ்வுக்கு;
  பயன்தரு உரைநூலாய் தானளித்தான்!
மணங்கமழ் இலக்கிய மலருக்கு;
  மங்காத வாசமிகு குடையளித்தான்!
கண்ணனைய அடக்கமிகு வாய்மைக்கு;
  தனிப்பண்பு நேர்மைக் **கோரஷீதான்**!

எண்ணம் சொல் செயலெல்லாம்;
  தமிழும் தமிழர் வாழ்வுக்காக!
கண்ணியம் கடமைக் கட்டுப்பாடாய்;
  அறிஞர் கலைஞர் தொண்டனாக!
மண்ணில் தான்வாழும் நாளெல்லாம்;
  லட்சிய வீரனாய் விவேகியாக!
என்னாளும் நலபலம் பெற்றுவாழ;
  வாயார! மனதார! வாழ்த்தினேன்!

# அறிஞர் ரசீத் வாழ்க!

**அமலநாதன், B.A.,BEd.,**
அம்பேத்கார் உயர்நிலைப்பள்ளி, தங்கவயல்.

வானத்தை தொடுகின்ற கீர்த்தி யேற்று
  வையத்துள் தனிச்சிறப்பு தமிழர் கொள்ள
மானத்தை காப்பதற்கு எல்லை மீட்ட
  மாமேதை தணிகைக்கோ ரசீது மஸ்தான்
கானத்தை விரித்துரைத்து அறிஞ ரானீர்
  காலமெல்லாம் நின்சேவை கருத்தில் நிற்கும்
ஞானமெல்லாம் சங்கதமிழ் அளித்த தாலே
  ஞாலத்தோர் தினம்வாழ்த்தும் தகுதி பெற்றீர்!

தாய்தமிழே! தரணியிலே நிலைத்து நிற்க
  தளராது உழைக்கின்ற பெரிய வாழ்வில்
ஓய்வின்றி இலக்கியத்தை வளர்ப் பதாலே
  ஒப்பாரும் மிக்காரும் உமக்கு நீயே!
காய்சினமே கனவினிலும் கொள்ளா மல்
  கண்ணியத்தை கடைப்பிடிக்கும் பண்பின் கோவே!
ஆய்வுதிறன் மிகஇருந்தும் அடக்கம் பெற்ற
  அருளாளர் ரசீதென்னும் அறிஞர் வாழி!

# அவர் ஒரு வீரமா முனிவர்.

நாபலூர் சீனிவாசன், B. A.,

மங்கலங்கிழார் இலக்கிய மன்றம் தோன்றக் காரணமாய் அமைந்தவர் தணிகைக்கோ ந. அ. ரஷீத் ஆவார். மங்கலங்கிழார் இலக்கிய மன்றம் தணிகையில் தமிழ் வளர்க்கச் செய்துவரும் தொண்டுகள் அளவிடற்கரியது. கவி அரங்கம், பட்டிமண்டபம், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆகியவற்றில் சான்றோர் பலரைக் கலந்து கொள்ளச் செய்து மொழி உணர்வினைத் தணிகையில் தக்க வைக்கும் முயற்சியில் கடந்த 10 ஆண்டுகளாக மங்கலங்கிழார் மன்றம் ஈடுபட்டுவருகிறது. தணிகைக்கோ அவர்களை நான் கடந்த மூன்று ஆண்டுகளாக நேரில் அறிந்திருப்பினும் அவரைப்பற்றி முழுமையாக அறியும் வாய்ப்புக்கள் எனக்கு இப்போதுதான் கிட்டியுள்ளது.

எனது ஆசிரியப் பயிற்சிப் பணி காரணமாக நான் சென்னையில் தங்கியிருந்த நாட்களில் சென்னையின் பல்வேறு இலக்கிய அமைப்புக்களில் ரஷீத் அவர்கள் உரையாற்றியிருப்பதை நான் அறிய நேர்ந்தது. தாய்மண் இலக்கியக் கழகம், இஸ்கஸ், புஷ்கின் இலக்கியப் பேரவை, Y. M. C. A. வில் நடக்கும் இலக்கியக் கூட்டங்கள் என்று காணும் இடமெங்கும் கலந்து இலக்கிய ஆர்வத்தோடு ஒன்றியுள்ளார் அப்பெருமகனார்.

வாழ்ந்த காலங்களை அசைபோடும் வரலாற்று நாயகர்களோடும் வாழும் காலத்தின் இலக்கியச் செம்மல்களோடும் வருங்காலத் தலைமுறைகளோடும் ஏற்றத் தாழ்வின்றிப் பழகும் நல்ல இயல்பு கொண்டவர். தூய கதராடை அணிந்து வெள்ளை உள்ளத்தோடு தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று தமிழ்த் தொண்டு ஆற்றிவருபவர். இலக்கியத்தைப் புதிய புதிய கோணங்களில் பார்க்கும் ஆர்வம் கொண்டவர். அவர் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டை வீரமா முனிவருக்கு ஒப்பிடலாம்.

தணிகையின் எல்லைப்போராட்டத்தின் போது திரு.ம.பொ.சி.,திரு.விநாயகம்,திரு. கோல்டன் சுப்பிரமணியம் ஆகியோருடன் இணைந்து முன்னணியில் நின்று போராடியவர். போராட்டக் களத்தில் முக்கியமானவர். ஆனால் இவர் ஒரு முஸ்லீம், ஏழை என்ற காரணத்தால் குறிப்பாக இவர் ஒரு தி. மு. க. தொண்டர் என்பதால் மாற்றுக் கட்சி அரசாங்கம் இவருக்குத் தாமிரப் பத்திரம்வழங்கவில்லை. தியாகிகள் உதவித் தொகையும் இவருக்குக் கிடைத்ததாகக் காணோம்.

பணமும் பத்திரங்களும், பதவியும் பட்டயங்களும் அவர் நோக்கினாரா? இல்லை. பிரதிபலன் எதிர்பாராது சேவை செய்யும் தொண்டுள்ளம் கொண்ட அப்பெருமகனார் என்றும் வாழ்க! இனிது வாழ்க!



# சகலகலா வல்லவர்

திருவள்ளூர் பச்சையப்பன்
மாவட்டத் துணைச் செயலர்
தி. மு. க. இலக்கிய அணி

திருத்தணி என்று நினைக்கும்போது என் ஆருயிர் அண்ணன் ரஷீத் அவர்கள் நினைவு வராமல் இருக்கமுடியாது.ஏன்? திருத்தணி மக்களுக்கே அவர் நினைவு என்றும் நிழலாடும். காரணம் திருத்தணியை மீட்க அவர் போராடிய போராட்டங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல! களம் பல புகுந்து சிறைகள் பலகண்ட தியாகச் செம்மல் தணிகை வீரர். அந்தச் செயல்வீரர்க்கு அகவை ஐம்பத்துஏழு. நேரில் அவர் புரிந்திடும் செயல்களை அறிந்தோர் நம்ப மறுப்பர்.

கட்டுத்தளரா உடல், கர்ஜனை மங்காத குரல், தட்டுத்தடுமாறு வீரநடை, பட்டுப் போகாத செயல் திறன். இத்தனையும் கொண்டு வேழமென அவர் வீதியில் வரும் போது யார்தான் சொல்வார்கள் இவருக்கு அகவை ஐம்பத்துஏழு என்று!

அவர் காலுக்கு உரம் ஏற்படக் காரணம்
கழகம் வளர்க்க ஊர் சுற்றியதால்!

அவர் கரத்திற்கு உரம் ஏற்படக் காரணம்
கழகக் கொடி ஏற்றியதால்!

அவர் உள்ளத்திற்கு உரம் ஏற்படக் காரணம்
ஐயா அண்ணா கொள்கைகளை ஏற்றதால்!

அவர் புகழுக்கு உரம் ஏற்படக்காரணம்
தலைவர் டாக்டர் கலைஞர் பின்நிற்பதால்!

தணிகைக்கோ ஆற்றிய பணிகள் சந்தித்த எதிர்ப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல! நாட்டிற்குமெழுகுவர்த்தியாகஇருந்தாரே தவிர அவர் வீட்டிற்குழைத்து நான்கண்டதில்லை! அன்னாரை திருத்தணி மீட்ட வெற்றி விழாவில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்ட காலத்திலிருந்து கடந்த 25 ஆண்டுகளாக அவருடன் நெருங்கிப் பழகி வருகிறேன்.

அன்பால் நட்பு ஏற்பட்டாலும் பாசத்தால் உறவு ஏற்பட்டாலும், அரசியல் ஆசானாகத்தான் அவரை நான் ஏற்று வருகிறேன். கழகமெனும் வானில் ஒளி வீசும் முழுநிலவு. ஆம்! கழகத்திற்காக இரவும் பகலும் அயராது பாடுபடும் கலங்கரை விளக்கு. எல்லைக்கும் எல்லை உண்டு! அவரின் உழைப்பிற்கு எல்லையே இல்லை.

1976ஆம் ஆண்டின் அவசர கால நெருக்கடியின் தொல்லை தாங்காது மின்னி



மறைந்து, எரிந்து கரியாகிப் போனவர்கள் ஏராளம். அப்போதுகூட கழகக் கொள்கைகளைத் தாங்கி தலை நிமிர்ந்து அஞ்சா நெஞ்சத்துடன் கலைஞர் பின்னே நடைபோட்ட வீரர்தான் இவர். [நெருக்கடி காலக் கட்டத்தில் தான் "நான் கண்ட கலைஞர்" என்ற நூல் வெளியிடப்பட்டது.]

1976ஆம் ஆண்டு நெருக்கடி காலத்தில் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் திருத்தணியில் ஒரு திருமணத்திற்குச் செல்கிறார். அப்போது மணவாளநகர் பகுதியில் கழகக் கொடியை கலைஞர் அவர்கள் ஏற்றுகிறார். அப்போது அவருக்கு உறுதுணையாக உடன்வந்தவர் அண்ணன் ரஷீத் அவர்கள்தான்!

என் பாசமிகு இளவல் சென்னை மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் தொழிற் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இரா. சிகாமணி அவர்கள் அண்ணனைப் பற்றிக் கூறியது.

"நடிகர் ம. கோ. இரா (M. G. R)வைக் கட்சியை விட்டு நீக்கிய மறுநாளே ரஷீத் அவர்களிடம், என்ன? ம. கோ. இரா. இப்படித் துரோகம் செய்து விட்டாரே என்று கேட்டபோது அதற்கு அண்ணன் அளித்தபதில் "அவர் நடிகர்தானே தவிர அரசியல்வாதியல்ல! கவர்ச்சி உள்ளவரை நடிகர் காலம் தள்ளுவார். பிறகு அவர் காலம் செல்லாது. அரசியல் என்பது திரைப்படம் அல்ல! தியாக உள்ளங்கள் உள்ள அரசியலில் அவரால் ஒன்றும்செய்ய முடியாது" என்று சொன்னார். அதன் மறுநாள் தலைவர் கலைஞர் முரசொலியில் கடிதம் எழுதியபோது இதேவாசகத்தைத் தான் எழுதினார்" என்று தம்பி சிகாமணி அவர்கள் சொல்லி மகிழ்வார்.

இப்படிப் பல தீர்க்கதரிசனமாக பின் நிகழ்ச்சிகளை முன்னால் கூறும் ஞானி, உழைப்பால் அவர் ஒரு முரட்டுக்காளை. கழகப் பணிகளை ஆற்றுவதில் அவர் ஒரு சகலகலாவல்லவர். அவர் என்றும் தூய கதராடையே அணிவார். நிதானமாய் நல்ல தமிழில் பேசுவார். பேசுவதில் கனிவு இருக்கும். எதிரிகளையும் ஈர்க்கும் வசிய மருந்தான பண்பு இருக்கும். அண்ணன் நீரைப் போன்றவர். நீர் எங்ஙனம் பள்ளப் பகுதிகளை நாடி ஓடுகிறதோ, அதுபோல் தொண்டுக்கு வாய்ப்பிருக்கும் இடங்களை நோக்கி எப்போதும் ஓடிக்கொண்டு இருப்பார். காற்றுக்கு எப்படி ஓய்வு இல்லையோ அதுபோல் பிறர் நலனுக்குப் பாடுபட ஓய்வில்லாமல் உழைக்கத் தயங்க மாட்டார்.

திருத்தணி எல்லையை மீட்கத் தளபதி யாக இருந்த K. விநயகம் அவர்கள் இன்று இல்லை. தி. மு. க.வின் கொள்கைத் தொண்டனாக அவர் மறைந்தாலும் அவர் சிலை உள்ளது.மங்கலங்கிழார் சிலைஉள்ளது. அவர்சார்பில் அண்ணன் ரசீத் இருக்கிறார். தணிகை எல்லைக்குப் போராடிய புடம் போட்ட தங்கமான ரஷீத் போன்றவர் களும் திருவள்ளூர் பகுதியில் ந. சந்திரன் தி. சு. பார்த்தசாரதி, கொத்தனார் சுப்பிரமணி போன்ற மேலும் பல கொள்கைத் தங்கங்கள் வாழ்கின்றனர்.

அரசியலுக்கு திருவள்ளூர் எனது தாய்வீடு என்று சொல்லி மகிழ்ந்த திரு. ம. பொ. சி. அவர்கள், எல்லைக்குப் போராடிய சிங்கக் காளைகளுக்கு கலை வாணர் அரங்கத்தில் நடைபெற்ற த.அ.க. விழாவில் தமிழக அரசின் கேடயம் அளிக்கப் பரிந்துரை செய்யாதது ஏன்? அந்த விழாவில் கலைமாமணி கு. மா. பா. கவிஞர் அருமைநாதன், ரஷீத் போன்ற தியாகிகள் இல்லை. காரணம் மாநில சுயாட்சிக்குப் பாடுபட கலைஞர் பின் நிற்பதால், சிலம்புச்செல்வருக்குக் கோபம் என்று கருதுகிறேன். அடுத்து அண்ணாவின் கொள்கையை ஏற்று கலைஞர் கரத்தைப் பின்பற்றி, கழகத்தின் கடைசித் தொண்டன் என்று கூறும் தில்லிப்பாராளு மன்றத்தில் துணை சபாநாயகராக வீற்று இருக்கும் திரு. G. இலட்சுமணன் அவர்கள் வடக்கே தமிழன் பெருமையை, தமிழின் பெருமையை பரவச் செய்து தமிழகத்தை பூரிக்க வைக்கின்றார். திரு. ஜி. இலட்சு மணன் வெற்றிக்கு காரணம் அயராது உழைத்த ரஷீத் அவர்களே ஆவார். அவர் குணநலன்கள் நிகழ்ச்சிகள் எழுத ஏடு போதா.

சென்னை மாவட்ட தி மு. க. இலக்கிய அணியின் புரவலர். ஆம் தமிழுக்குப் புரவலர். உழைப்பிற்குப் புரவலர். உற்ற துணைக்குப் புரவலர். கழகப் பணிகளுக்குப் புரவலர். திருத்தணி மங்கலங்கிழார் இலக்கிய மன்றத்திற்குத் தலைவர் மட்டும் அல்ல! அதன் செயல்களுக்கும் புரவலர். அந்த தன்நிகரில்லா இளைஞர் கழகத்திற்கு நாட்டிற்கும் தொண்டுகள் பல புரிந்து மேலும் நூற்றாண்டுகள் வாழ வேண்டும் என செங்கை மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் துணைச்செயலர் என்ற முறையில் டாக்டர். ந. அ. ரஷீத் அவர்களை வணங்கி, நலமுடன் வாழ வாழ்த்துகிறேன்.

வாழ்க அவரது குண நலன்கள்!
வாழ்க அவரது கழகத் தொண்டு!



# வித்து

T. சிவசங்கர், B. A.,

தன்நிலை தாழாமையும்;
அந்நிலை தாழுங்கால்,
உயிர் வாழாமையும்.

இது தமிழன் வகுத்துக்கொண்ட வழி: ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னால், அறுபடை வீடுகளில் ஒன்றான தமிழ்க் கடவுளாம் முருகன் கோயில்கொண்டுள்ள தணிகையிலே வாழ்ந்துவந்த தமிழன் இப்படி ஒரு வாசகம் இருப்பதே தெரியாமல் வாழ்ந்துவந்தான்.

ஆனால்!

தமிழனல்லவா! வந்தாரை வாழவைப்பவன்அல்லவா! எனவே வாழவைப்பதோடு திருப்தியடையாமல்; எங்கிருந்தோ வந்தவனுக்கு உயர்ந்த அந்தஸ்தை அளித்துவிட்டு, அவனுக்கு ஏவல் செய்துக் கொண்டு பரமதிருப்தியோடு வாழ்ந்தான். இன்றைக்கும் அதே நிலைதான் என்பதை எவ்வளவுபேர் அறிவார்கள்? இப்படி ஒரு நிலை இந்த தணிகைக்கு இருந்தது, அதை என் தலைமுறையினர் அனுபவிக்காதது நாங்கள் செய்த புண்ணியமே. காரணம் இன மானம் காக்க பொங்கி எழுந்தார்களே நமது திரு. மங்கலங்கிழார், திரு. ந அ. இரஷீத், திரு. கே. விநயகம், திரு வி. கே. சடகோபாசாரியார், திரு. கோல்டன் சுப்பிரமணியம், திரு. கே. இராமசாமி இன்னும் பலர். இவர்கள் இல்லை என்றால் இன்றைய தலைமுறை, யினரும் இனமானம் அழிந்து சீர்கெட்டு இருந்திருப்போம். எனவே இன்றைக்கும் நாளைக்கும், என்றைக்கும் இவர்களின் தன்னலமற்ற தொண்டினை நாம் மறக்க முடியாது.

இந்திய சுதந்திரப் போரைப்பற்றி சிலருக்கு தெரிந்திருக்கும். அதிலே தீரர் லோகமான்னிய திலகர் தலைமையிலே தீவிரவாத இயக்கமும், வீரர் கோபால கிருஷ்ண கோகலே தலைமையில் மிதவாதிகளின் இயக்கமும் சுதந்திரப்போரிலே ஈடுபட்டது. அந்த வகையிலே இந்த எல்லைப் போராட்டம் அமைந்திருந்தது. சுதந்திரப் போராட்டத்தில் தன்னலம் கருதாது போராடிய சுதந்திரப் போர் வீரர்களைப் போல் இவர்களின் எல்லைப்போராட்டம் அமைந்திருந்தது. குறிப்பாகச்சொல்ல வேண்டுமானால் நமது தணிகைக்கோ அவர்களின் தன்னலமற்ற தொண்டு என்று சொன்னால் மிகையாகாது.

இங்கே நான் குறிப்பிட்ட எல்லைப் போராட்ட வீரர்களுக்கு [இன்னும் சில முக்கியமானவர்களின் பெயர் தெரியாததால் விட்டுவிட்டேன்.] இந்த எல்லைப் போராட்டத்தில் என் தகப்பனார் K. M. திருவேங்கடம், எல்லைப் போராட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டு; தடையை மீறியதற்காக போலீஸ் தடியடி பட்டார் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழன் இனமானம் காக்கும் பொருட்டு நடந்த போராட்டமல்லவா ? அந்த தடியடிபட்ட வடு இன்றும் அப்படியே தலையில் உள்ளது திடீர் என்று இந்த உணர்வு ஏற்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே இன மான உணர்ச்சி நீறுபூத்த நெருப்பாக புகைந்துக்கொண்டிருந்தது. காரணம், பெருவாரியாக தமிழர்கள் வாழ்கின்ற தணிகையிலே தமிழைக்காண்பதே அரிதாக இருந்தநிலை. எல்லாவகையிலும் தமிழன் புறக்கணிக்கப்

பட்ட அவலநிலை. இதனால் திரு. இரசீது, திரு. கே. விநயகம் போன்றவர்களின் உள்ளம் பொருமிக்கொண்டிருந்தது.

இந்தத் தணிகை எல்லைப் போராட்டம் சில வீரர்களின் உள்ளத்தில் நீறுபூத்த நெருப்பாகயிருந்தது. சிலருக்கு போராட்டத் தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. இந்தத் தீயிலே தமிழ் இனத் துரோகிகள் வெந்து சாம்பலாயினர்.

நான் மேலே குறிப்பிட்ட எல்லைப் போராட்ட வீரர்கள் தீவிரவாதிகளானதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அப்படியே நம் தணிகை கொண்டார் ந. அ. ரசீத் அவர்களின் போராட்டம் தீவிர நிலை ஏற்படக் காரணம் பல இருக்கலாம்; ஆனால் எனக்கு தெரிந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே உங்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன்.

இப்போது நாம் சில ஆண்டுகளுக்குப் பின்னால் செல்வோம்......

அப்போது திருத்தணிகைக்கு தமிழனல்லாத ஒருவர் தலைவராக இருந்தார் [President]. அவர் காலத்தில் அவர் செய்த விநோதங்கள், வேடிக்கைகள், ஏட்டில் அடங்காது. அதையெல்லாம் நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. காரணம் அது நடந்து முடிந்த கதை. இப்போது ம. பொ. சி. சாலை என்று இருக்கிறதே இது அன்று சாலை வீதி என்ற பெயரோடு திகழ்ந்தது. இதன் ஒரு முனையில் அவர் வசித்து வந்தார். இப்போது இருக்கும் மக்கள் மன்றத்துக்கு [Panchayat Board] தன் வீட்டிலிருந்து தன் ரேக்ளா வண்டியில் [குதிரைவண்டி] புறப்படுவார். இந்த ம. பொ. சி சாலையில் அவருடைய குதிரை வண்டி செல்லும். அப்படி போகும்போது சாலையின் ஓரங்களில் நின்று கொண்டு இருக்கும் தமிழன் கூனிக்குறுகி வணக்கம் செலுத்துவான். தன் வீட்டுவாசல்களிலும் கடைகளிலும் அமர்ந்திருக்கும் தமிழன் எழுந்து வணக்கம் செலுத்திவிட்டுக் கையை கட்டிக்கொள்வான். (இந்த


வடக்கெல்லையில் தமிழ் வளர்த்த ஆசிரியர் மங்கலங்கிழார்
பெயரால் அமைந்த மன்றத்திற்கும்
எல்லைப் போராட்ட வீரர் இனமானம் காக்கும் நற்றொண்டர்
ந. அ. ரசீது அவர்களுக்கும்

**எனது வாழ்த்துக்கள்!**

**சொ. மு. எல்லப்பன்**

முன்னாள் தலைவர்,
கலைஞர் கருணாநிதி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம், K. H. 13 வங்கனூர்.
செங்கை மாவட்டம்.

காட்சியை இந்த கட்டுரை படிக்கும் வாசகர்கள் மனக் கண்முன் கொண்டு வாருங்கள்) அன்று தணிகையிலே வாழ்ந்து வந்த தமிழனின் இன உணர்ச்சி, தன் மானம் எப்படி இருந்தது என்பது உங்களுக்கே புரியும். இந்த அவல நிகழ்ச்சி தினமும் நடக்கும்.

"அப்பால் எவனோ செல்வான்
—அவன்
ஆடையைக் கண்டு பயந்தெழுந்து
நிற்பார்.

என்று கவிராசன் பாரதி பாடினார். அவர் பாடியது இந்திய மக்கள் அந்நியனுக்கு எப்படியெல்லாம் பயந்து வாழ்ந்தனர் என்பதைக் குறிப்பதாகும். ஆனால் இந்த வரி அன்றைய நிகழ்ச்சிக்கு எவ்வளவு பொருந்துகிறது பாருங்கள்.

இதைக் கண்ணுற்ற நம் தணிகைக்கோ அவர்கள் வன்மையாக இதை எதிர்த்தார். அதனால் ஏற்பட்ட விளைவுகளை துச்சமென மதித்தார். இந்த அவல நிகழ்ச்சியைப் பார்த்த அவர் மனதில் நீறுபூத்த நெருப்பாக இருந்த அவருடைய எல்லைப் போராட்ட வெறி கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

"மௌரிய சாம்ராஜ்ஜியத்தை மீண்டும் அமைப்பேன்" என்று சூளுரைத்தானே சாணக்கியன் அன்று. அதுபோல் தமிழ் இன மானம் காக்கும் பொருட்டு, இந்த திருத்தணிகையை தமிழகத்துடன் இணைத்து இங்கு நடக்கும் இந்த அவலங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காமல் ஓய்வதில்லை என்று சபதமெடுத்துக் கொண்டு, தன் எல்லைப் போராட்ட இயக்கத்தை தீவிர இயக்கமாக மாற்றிப் போராடி அதிலே வெற்றியும் பெற்றார் தணிகைக்கோ என்பது நாடே அறியும்.

நான் மேலே சொன்ன நிகழ்ச்சி தணிகைக் கோ அவர்களின் எல்லைப் போராட்டம் தீவிர இயக்கமானதற்கு வித்தாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. எல்லைப் போராட்டக் காலங்களில் தணிகைக் கோ அவர்கள் பட்ட இன்னல்கள், இடர்கள் சொல்லில் அடங்காது. அதைமட்டும் எழுதவேண்டும் என்றால் ஒரு தனிப் புத்தகமே வெளியிடலாம்.

இவருடைய எல்லைப் போராட்ட காலங்களில் இன்றைய இளங்கோ மன்றத் தலைவர் திரு. தணிகாசலம், செயலர், பொருளாளர் திரு. சேகர், திரு. சிட்டி இவர்கள் இவருக்குத் துணையாக இருந்து எல்லைப் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள் என்பதை குறிப்பிடாமல் இருக்கமுடியாது. திரு. சேகர் அவர்கள் அப்போது பள்ளி மாணவராக இருந்தும் தைரியமாகப் போலீஸ் அடக்குமுறைகளுக்கு பயப்படாமல், எல்லைப் போராட்டத்தில் தன்பங்கை ஆற்றினார். திரு. சிட்டி அவர்கள் அன்றைய நாளில் குடும்ப பாரம் முழுவதும் தான் மேற்கொண்டு இருந்தும் இன மானம் காக்கவேண்டி எல்லைப் போராட்டத்தில் செவ்வனே ஈடுபட்டார்.

திருத்தணிகையிலே வசிக்கும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் இந்த எல்லைப் போராட்டவீரர்களுக்கு என்றும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

நமது தணிகைக்கோ ரசீத் அவர்கள் பல்லாண்டுகாலம் வளமுடன்வாழ தமிழ்க் கடவுள் தணிகைமுருகனை வேண்டுகிறேன்.



# தடைகளை உடைத்தவர்

வி. குப்புசாமி
காந்திநகர், திருத்தணி.

தமிழ்கூறும் நல்லுலகில்
தமிழர்தரம் உயர்த்தி சீர்காட்ட
தளராதுழைத்த தலைவர்களில்
தரமான தலைவன் நீ! -தரணிக்கெல்லாம்
உனக்கது தக்கதே!

தமிழர்வாழும் தரணியெல்லாம்
உனதுபுகழ் பாடுதற்கு - தமிழர்க்கென்றும்
நினதுநிலை தக்கதன்றோ!

வடஎல்லைப் போராட்டத் தளபதியாம்
வைர நெஞ்சு வினாயகம்
திருமுருகன் பேர்பெற்ற சுப்பிரமணி
திருவாலங்காடு வாழும் பிள்ளையொடு சிறைசென்று

திருத்தணியைத் தமிழ்நாடு எல்லையொடு
சேர்த்திட்ட செம்மல் நீ - என்றும் வாழ
திருமுருகன் திருவருளை இறைஞ்சுகின்றோம்.
கொள்கையிலே கண்ணியத்தை கடமையாக
கோலமிட்டுக் காட்டிச்சென்ற கர்மவீரர்
காமராஜர், அறிஞர் அண்ணாவைப் போலே
தமிழர் வாழும் பெரும்பகுதி
தணிகைமலை பகுதியென்று
கரம்உயர்த்தி தமிழ்நாட்டு எல்லையோடு
இணைத்திட்ட இரசித்தேநீர் என்றும்வாழி.

தணிகைவாழ் தமிழரின்
தன்மான ஓடையில் சில
தடைக்கல்லாக இருந்த எத்தர்களை
தவிடு பொடியாக்கியவரே!

கண்டவருக்கு கால்பிடிக்கும் காலமிது!
-ஆனால்
கொண்ட கொள்கையில் என்றும் மாறாமல்
தன்னை இட்டுச் செல்லும்
தன்னிகரற்ற வள்ளலே
வாழ்க நீ! வடிவேலன் அருளாலே!

# அவர் ஒரு பொறியாளர்

N. இராஜசேகரன். நாகர் கோயில்.

அழகு மலர்கள் பூத்துக்குலுங்கும் பூஞ்சோலை. அங்கே வண்ண மலர்களைத் தாங்கும் தளிர்செடிகள் மாருமணம் வீசும் மல்லிகை. முகர முகர மகிழ்வுதரும் முல்லை மலரினத்தின் ராஜாவாம் ரோஜா! இப்படிப் பலமலர்கள் ஒரு பூஞ்சோலையில் பூத்துக் குலுங்குகின்றன. பல மலர்கள் பூத்துக்குலுங்கினுலும் ஒருசிலவேமக்களின் மனத்தை தனியாகக் கவர்ந்து புகழ்ந் தேத்தப்படுகின்றன.

அதுபோல சுதந்திரப்போராட்ட வீரர் களாக, இலக்கிய மேதைகளாக, அறிஞர் களாக, தியாகச்சுடர்களாக, பலர் இருந் தாலும் ஒருசிலரே மக்களால் புகழ்ந்தேத் தப்படுகின்றனர். அறிவுக்கூர்மை ஆற்றல், பழகும்பண்பால் வேறுபாடு உண்டாகிறது இவ்வேறுபாடுகளால் தனிமைப்பட்டு மக்களால் புகழப்படுபவர் டாக்டர் ந. அ. ரசீத் ஆவார்.

சுதந்திரப் போராட்டத்தில் உணர்வு களைப்பெற்று, பின் தணிகையை மீட்க எல்லைப்போராட்ட வீரரான அவர்பழகும் பண்பால் எதிரிகளின் நெஞ்சிலும் இடங் கொண்டவர். போர்டுமாட்டிக் கொண்ட தாலேயே தான் தலைவர் என்று இறுமாப் பெய்தும் மனிதர்கள் உலவும் இந்நாளில் தணிகைக்கோ என்போன்ற இளைஞர் களுக்குத் தலைவராகவும், தான்சார்ந்த கட்சிக்கும் மக்கட்கும் தொண்டராகவும் பணிசெய்பவர். மஸ்தான் சாகிபு பாட லுக்கு உரைஎழுதி டாக்டர்பட்டம் பெற்ற அவர் எடுத்துக்கொண்ட பொருளை சுவை படவும், அஞ்சாமல் உரைக்கும் ஆற்றலும் பெற்றவர். பதவிக்கு ஏங்காமல் பண்போடு வாழும் அவர், ;பாராட்டுகளுக்கும் ஏங்கா மல் வாழ்வதும் தொண்டு செய்வதும் நல்லோர் உள்ளத்தில் இடம்பெற வேண் டிய ஒன்று.

என்போன்ற இளைஞர்களின் தோளிலே கைபோட்டு அறிவுரை கூறியவாறு வரும் காட்சி.. அதை அனுபவப்பட்டவர்கள் தான் உணரமுடியும். பல்வேறு வகைச் சிறப்புக்களைப்பெற்ற அவர் என்பொறி யியலில் கல்விபற்றி உரையாடி, இயந்திர நுட்பங்களை உணர்த்தியபோது எனக்குப் புரிந்தது. அனைத்திற்கும் மேலாக அவர் பொறியாளரும் கூட! வாழ்க பல்லாண்டு.


வாழ்த்துக்கள்:

**S. I. M. செய்தி மடல்**

இந்திய மாணவ இஸ்லாமிய இயக்கம் நடத்தும்
தமிழ் மாத ஏடு

இஸ்லாமிய உலகத்தின் செய்திகள்
உலகப் பொதுச் செய்திகள்
அரிய விமர்சனங்கள் நிறைந்த
அழகுத் தமிழ் ஏடு

தொடர்புக்கு: **S. I. M.**
211, அங்கப்ப நாய்க்கன் தெரு, (முதல்மாடி)
சென்னை-1.



# அம்மையார்குப்பம் மகாத்மா காந்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்., நெ. K. H. 137

அம்மையார்குப்பம்-631301

திருத்தணி வட்டம். செங்கை மாவட்டம்.

எங்களது சங்கத்தில் தரமான 80s x 80s பாலியஸ்டர் வேட்டிகள்
ஜனதா ரகங்களான 60 x 60 x 47 x 5·5 மீ சாதா சேலைகள்,
70 x 60 x 47 x 5·5 மீ பேட்டு சேலைகள், 60 x 60 x 47 x 5·5மீ
பிரிண்டிங் சேலைகள் 40x40 வேட்டிகள் தரமான முறையில் தயாரித்துக்
குறைந்த விலையில் கிடைக்கும்

A. K. ஜெயவேல்
உப-தலைவர்.

A, S. கெங்காதரம்
தலைவர்.

இயக்குனர்கள்:

T. G. னிமுசாமி, K. S ஆண்டியப்ப ரெட்டி,
C. A. பொன்னப்ப முதலி S.G. சுப்பிரமணியன், P. பெருமாள்

## தணிகைக்கோ நீடூழி வாழ்க!







# மனோஜ் அன் கோ,

பூந்தமல்லி நெடுஞ்சாலை,
மணவாள நகர்,
திருவள்ளூர்-602002.





எங்களிடம் ரேடியோ, மின்விசிறிகள், சோபா, பீரோ, டெலிவிஷன், கடிகாரம் முதலியன உங்கள் வீடுகளை அலங்கரிக்கக் குறைந்த விலையிலும் சுலபத் தவணை-யிலும் கிடைக்கும்.

111

**கலைஞர் கண்ட நூலகம்**

★

பழனி,
7, கச்சேரி தெரு,
திருத்தணி.

வசந்த கால உறைவிடமே!
வரலாறு படைத்த புகழிடமே!
வளரும் இளைஞர் காப்பகமே!
தணிகை வென்ற தயாநிதியே!

நெருக்கடியிலும், கலைஞர் கண்ட நூலகமே!
வெண்தாடி வேந்தரின் செயலகமே!
கூடா அர்த்தத்தை சீராக்கும் சங்கமே!
நடமாடும் பல்கலைக் கழகமே!
வாழ்க்கையில் வறுமை தான் வரட்டுமே!
வளம் சேர்க்க எண்ணவில்லை என்றுமே!
பதவியிலா புகழ் இயலுமே!
படித்தவர் துதி பாடத் தகுமே!
தமிழன் தான் மாறவில்லை இன்னுமே!
மாதவி பால் கொண்ட மோகமே!
புல்லர்கள் உரு மாற வேண்டுமே!
அன்றே தேசமெல்லாம் நின் பெருமை போற்றுவோமே!


தண்டமிழ்த் தொண்டே தலையாய பணியாய்க்கொண்ட
மங்கலங்கிழார் புகழ் தழைக்கவே.

**மங்கலங்கிழார் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி&விற்பனைச் சங்கம் லிட்., நெ. J.J. 399**

**அத்திமாஞ்சேரிப்பேட்டை-631 202.**

*பள்ளிப்பட்டு வட்டம், செங்கை மாவட்டம்.*

**போன்: 22**

எங்கள் சங்கத்தில் கீழ்க்கண்ட இரகங்களை உற்பத்தி செய்கிறோம்.

40x50x1x8
40x48x2x8
60x45x1x6
40x45x1x6
} ஜனதா ரகங்களை தயார் செய்கிறோம்

M. சஞ்சீவி முதலி
முன்னாள் தலைவர்.
M. G. ஊரப்பன்
உப-தலைவர்

இயக்குநர்கள்:
S.G. கண்ணப்பன், S. சஞ்சீவி, S.K. கணேசன், N.A. நாகப்ப முதலி



# அம்மையார்குப்பம் அறிஞர் அண்ணு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட்., நெ. K. H. 88

**அம்மையார்குப்பம்**

பள்ளிப்பட்டு வட்டம். செங்கை மாவட்டம்.

**போன்: 63**

எமது சங்கத்தில் தரமான 80sx80s பாலியஸ்டர் வேட்டிகள்

60sx60sx47"x5·5மீ சேலை, பிரிண்டிங் சேலை,

40sx40sx46x5·5 பிரிண்டிங் சேலைகள்

40sx40sx48" 8 முழம் வேட்டி,

26sx26sx48" 4முழம் வேட்டி,

60sx40sx42" எக்ஸ்போர்ட் சர்டிங்,

40xs40sx45" பட்டு பார்டர் கலர் சேலை (6 கெஜம்)

2/60sx2/60sx42" ஸ்பன் பாலியஸ்டர் சர்டிங்

தரமான முறையில் தயாரித்து குறைந்த விலையில் கிடைக்கும்

**S. M. தருமன்**
உப-தலைவர்.

**S. சண்முகம்**
தலைவர்.

இயக்குநர்கள்:

**E. K. திருவேங்கடம்**
**P நரசிம்மன்**
**V. S. வீராசாமி**
**இராணி**
**K. E. கிருஷ்ணன்**



## தமிழ் உள்ளளவும் வாழ்க!

தணிகை ராமன்,
26, கன்னிகாபுரம் சாலை, திருத்தணி.

ஏழிசைபோல் இகமெங்கும் நிலைத்து வாழி!
எழில்கொஞ்சும் சேவையொடு இனிதே வாழி!
ஆழியென பேருலகில் நிலைத்து வாழி!
அறிஞரெல்லாம் போற்றுகின்ற அறிஞ! வாழி!
உத்தமர்கள் உள்ளளவும் சேவை வாழி!
உத்தமரே ஒளிக்கதிராய் உவந்து வாழி!
வாழிவாழி! தணிகைகோ ரசீதுவாழி
வண்ணத்தமிழ் உள்ளளவும் வாழி!வாழி!


**அம்மையார்குப்பம் மூவேந்தர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி&விற்பனைச் சங்கம் லிமிடெட் நெ. K. H, 119**

அம்மையார்குப்பம்-631301.

பள்ளிப்பட்டு வட்டம், செங்கை மாவட்டம்

எமது சங்கத்தில் தரமான 80x80·54" பாலியஸ்டர் வேட்டிகள் 40 × 40·45" சேலைகள், 40x40·45" அச்சிட்ட சேலைகள், 40x40·48" வேஷ்டி, காடா, 40x40x36" பிரிடவுன் முதலிய ரகங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

திரு. ச. மு. சச்சிதானந்தன்
துணைத்தலைவர்.

திரு. ச. அருணாசலம்
தலைவர்.

திரு. வி. கோ. அருணாசலம்
திரு. ச. கு. சுந்திரன்
திரு. மி. சு. முத்தப்பன்
திரு. ஏ. கோ. மாசிலாமணி
திருமதி. சி. ச. சாமுண்டீஸ்வரி
இயக்குநர்கள்:

114

தொலைபேசி: நெ. 36



# அம்மையார்குப்பம் கண்ணப்பனூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., நெ. K. H. 36

**அம்மையார்குப்பம்-631301. பள்ளிப்பட்டு வட்டம்**

செங்கை மாவட்டம்.

எமது சங்கத்தில் தரமான 80 × 80 54'' பாலியஸ்டர் வேட்டிகள் 60 × 40·50'' லுங்கிகள், 60 × 60·45'' சேலைகள், 40 × 40·45'' அச்சிட்ட சேலைகள், 40 × 40·48'' வேட்டிகள், காடா, 40 × 40·36'' பிரிடவுன் முதலிய ரகங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

திரு. K. சுப்பிரமணியன்,
கைத்தறி அலுவலர் / செயலர்.

திரு. S. ஊரப்பன்
தலைவர்,

திரு. S. M. பொன்னப்ப முதலியார்
செயலாளர்.

திரு. T. M. சஞ்சீவி முதலியார்,
திரு. M. K. முனியப்ப முதலியார்
திரு. V. G. ஊரப்பன்
திரு. S. முனிசாமி முதலியார்
திரு. C. S. தாமோதரன்
இயக்குநர்கள்.



# வழிகாட்டி

காஞ்சி விஜயபாரதி

தணிகைக் கோவைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அவரை அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்பு பெற்றது தமிழ் அரங்கம் மூலம்தான். வயதில் குறைந்தவனாக இருந்ததால் அவரிடம் அளவுகடந்து வாயாடி இருக்கிறேன். அந்த ஆழமான பக்குவப்பட்ட இதயத்தைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு பலமுறை கிடைத்தது. இலக்கிய மேதையை, ஒரு பத்திரிக்கை ஆசிரியரை பல துறைகளைப் பற்றி பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் உரையாற்றி நட்பு கொள்ளும் ஓர் அறிஞரை சம காலத்தில் சந்திக்க நேர்ந்தமை குறித்துப் பெரிதும் மகிழ்ந்திருக்கிறேன். எல்லைப் போராட்டம் மூலம் தணிகைக்கு அவர் உதவினார் என்றால் இன்று அவர் வாழ்க்கையும் சொல்லும் செயலும் அனுபவம் பெற்றார் ஆதரிக்கும் வகையிலும் இளைய தலைமுறை ஏற்றுக்கொள்ளும் வண்ணமும் உள்ளன. அரசியல்வாதியாய் சுயமரியாதைக்காரராய் திராவிட இயக்க வரலாற்றை அறிந்தவராய் தமிழ்த்தொண்டும் புரிந்து வாழும் அவர் இளையதலைமுறைக்கும் எதிர்காலத்திற்கும் ஓர் வழிகாட்டுதல். வாழும் தலைமுறைக்கும் வாழ்ந்த வரலாற்றிற்கும் ஓர் பாலம். எதிர்கலைத் தலைமுறை அறிந்து கொள்ள வேண்டிய வரலாறு

வாழ்க அன்னார் பல்லாண்டு!




With Best Compliments

**THIRUVENI AGENCIES,**

Proprietor: G. ANNAMALAI
3-A, CUDDAPAH TRUNK ROAD,
TIRUTTANI-631 209.
Chengalpattu Districi.

Dealer for: EMPIRE RADIO
TAPE RECORDER
T. V. SET Etc ,

With The Best Compliments From:

# GOPAL ENGINEERING WORKS,

**20, LOTUS. RAMASAMY STREET,**

**ROYAPURAM, MADRAS-600 013.**

PHONE: 553511 & 553349

GRAMS: "G O E N W O"

MANUFACTURERS OF ALL KINDS OF DRUMS & KEGS.

SPELIALIST IN SCREEN PRINTED DRUMS

# புன்னகையின் பின்னணியில் ஓர் பிரளயம்!

— பேராசிரியர் பெரியார்தாசன் —
8, அருணாசலம் தெரு, செனாய் நகர், சென்னை-30.

என்ன இது?
இந்தச் சுயமரியாதை
நெருப்பின்மீது
கதர்நீறு பூத்துள்ளதே!

என்ன இது?
எல்லாப் போரில்
வெற்றியைக் கொய்தெடுத்த
இந்த வீரவாள்
கேட்பாரற்று
வறுமை யென்னும்
கிழிந்த உறைக்குள்
கிடந்து தவிக்கிறதே!

ஆனாலும் தன்
மொழிக்கோ
இனத்துக்கோ
ஓர் ஆபத்தென்றால்
அதன்
விவேகப் பளபளப்பும்
வீரச் சலசலப்பும்
வீரியம் குறையாமல்
இன்றும்
வெளிப் படுகிறதே!

தமிழின் ஞானம்
தலைசாய்க்கும்
தாய்மடியாம்
மஸ்தான் சாகிபை
மறுபடியும்
தமிழ்த்தாய்க்கு
இவர்தான்
அறிமுகப்படுத்தினார்!

பெரியாருக்கும்
அண்ணாவுக்கும்
விபரீதப் பொழிப்புரை
சொல்லத் தெரியாத
திராவிடப் புலவர்
இவர்தான்!

அறுபதை எட்டுகிற
தன் வாழ்க்கை ஏணியை
எப்போதும்
இருபதுகளுக்கு மத்தியிலேயே
நிறுத்தி வைப்பவர் இவர்!

பழந்தமிழ்
அரண்மனையின்
அந்தப்புரம் வரை
போய் வந்த
இந்தத்
தமிழ்ப் பேரரசன்
புதுத்தமிழ்
முயற்சிகளுக்கு
ஒவ்வொரு நாளும்
ஊக்கமானியம்
அளித்துக் கொண்டிருக்கிறார்!

தமிழக அரசின்
தாமிரப் பட்டயம்
இவரைச் சேர்ந்து
தன்னைக்
கவுரவித்துக் கொள்ளத்
தவறிப் போனது!

அதனால் என்ன?
பட்டயத்துக்கெல்லாம்
கட்டுப் படாத
பெரியாரின் பாரம்பரியக்காரர்
இவரென்கிற
நிஜம்
நிச்சயமானது!

எந்தப் பாதத்தையும்
தாங்கிக் கொள்ள
இவர் சிரம்
தயாராயிருந்திருந்தால்
இன்றைக்கு
எத்தனையோ மகுடங்கள்
இவர் சிரத்தை
அலங்கரித்திருக்கும்!

ஆனால்
இவருக்கு
இதிலெல்லாம்
சிரத்தையில்லை!

எப்போதும் புன்னகைக்கும்
இவரது
இதழ்களுக்குப் பின்னாலே
ஒரு எரிமலை
குமுறிக் கொண்டிருக்கிறது!

இனத்தேசிய உரிமைகளை
தட்டிப்பறிக்கிற
போலித் தேசிய ஒருமைப்பாட்டை
பொசுக்குவதற்கான
நெருப்புக் குழம்பு
அங்கே
தகித்துக் கொண்டிருக்கிறது!

அனைத்துமக்களின்
அணிதிரளலால்
இவருடைய
எண்ணப்புயல் ஒருநாள்
எழுச்சிச் சூறாவளியாய்ச்
சுழன்றடிக்குமே!

அதில்
முதலாளித்துவக் கப்பல்கள்
மூழ்கிப் போகும்!

வறுமைச் சரக்குகள்
கவிழ்ந்து போகும்!

தமிழ் உணர்வும்
இன உணர்வும்
பொங்கிப் பிரவகிப்பதால்
ஏற்படவிருக்கும்
பிரளயத்தில்,
திசைதெரியாமல்
பயணித்துக் கொண்டிருக்கும்
தேசீயச் சுரண்டல்கள்
சிக்கித் திணறும்!

ஆமாம்!
இந்தப் புன்னகையின்
பின்னணியில்
ஒரு
பிரளயம் நிச்சயம்!

இது
வானசாத்திர
சோதிடக் கணிப்பல்ல!

வரலாற்றுப்
பொருள் முதல்வாதம்!

வர்க்கப் போரின்
முடிவுகள்
என்றும்
துல்லியமானவை!

தமிழால் வாழும்
தருக்கர் மத்தியில்
தமிழனை வாழும்
இவரை
வாழ்த்துவதற்கல்ல
இந்தச் சொற்கோலம்!

இவர் சார்ந்திருக்கும்
ஏழை வர்க்கம்
இவரால்
எழுச்சி பெறுவது
சாத்தியம் என்கின்ற
சத்தியத்தைப்
பிரகடனப் படுத்தவே!

118


தன்னேரில்லாத் தொண்டாற்றிய மங்கலங்கிழார் பெயரால்
விளங்கிடும் மன்றம் பல்லாண்டு நின்று நிலைத்துத்
தமிழ்த் தொண்டாற்ற

**உவந்த நல்வாழ்த்துக்கள்**



# ஸ்ரீ யோகலட்சுமி மில்ஸ் பிரைவேட் லிமிடெட்.,

மேல்வெங்கடாபுரம் அஞ்சல், சோளிங்கர் வ. ஆ. மா.

# தீபச் சுடரே.........!



தங்கவயல் வாணிதாசன்

தணிகை...
இந்த... மலட்டு மண்ணுக்கு
வீரிய வித்தை ஊன்றிய
விரல்கள் உனது கரங்கள்.

விதைகள்—
பூமியைப் பிளந்தன
கனிமரங்கள் நிழல் விரித்தன
வெளவால்கள் வாசம் புரியவா ?

தணிகைக்கோவே !
தன்மானப் பூவே!
தணிகை மண்—
தனிமைப்படுத்தியது உன்னை மட்டும்தானா ?

தேச சுபிட்சத்திற்காக
தன் உடைமைகளை இழந்தவர்கள்
தேடப்பட்டபோது...
இலுப்பைக்காடுகள் மட்டுமா
அவர்களுக்கு அடைக்கலம் தந்தன
உன்—
இதயமும்தானே!

கள்ளிமுள்ளும், கருவேலமுள்ளும்
உன்னைக்காயப்படுத்தினாலும்
புதுயுக மலர்ச்சிக்கு—
பூபாளம் பாடிய அவர்களுக்காக
புன்னகை சிந்தியவன்
நீ மட்டும்தானே !

போர்முரசே ! போர்வாளே !
ஆயிரம் பூக்கள்
மலர்வதற்காக
ஆசை கொண்டிருந்தோரின்
கேடயமும்
நீ அல்லவா ?

செவிட்டு செவிப்பறைகளும்
உனது உரிமை முழக்கத்தை
எதிரொலித்ததே...

குருட்டுவிழிகளில் கூட
தீபச் சுடரே—
உனது உதயக்கதிர்
ஒளி ஏற்றியதே !

சிறை வாசம்—
உனக்குச் சுகவாசம்
போராட்டம்—
உனக்குத் தேரோட்டம்

நீ...
வாழும் காலத்திலேயே
மறைக்கப்பட்ட
தியாக வரலாறு.
சோகம் தாங்கி நிற்கும்
பொன்னேடு.

உனது வரலாறு—
வார்த்தைகளால்
கௌரவிக்கப் படவேண்டிய
ஒன்றல்ல...!

வாழும் தலைமுறை
இங்கே
வசந்தத்தை வரவழைத்தபின்
சிறப்பிக்கப்பட வேண்டிய
ஒன்று !



# சரவணன்
# கைத்தறி நெசவாளர்
# கூட்டுறவு உற்பத்தி &
# விற்பனைச் சங்கம் லிட்.,
# நெ. K. H. 113

**அம்மையார்குப்பம்**-631301.

பள்ளிப்பட்டு வட்டம், செங்கை மாவட்டம்

சங்கத்தில் உற்பத்தியாகும் இரகங்கள்

80s × 80s × "54" நூலில் தயாராகும் — பாலியஸ்டர் வேஷ்டி
40s × 40s × "52" — பிரிண்டிங் சேலை ஜனதா
40s × 40s × "56" × 5·5 — 6 கெஜம் ஜனதா சேலை
40s × 40s × "56" × 3·65 — வேஷ்டி
40s × 40s × "56" × 7·30 — 8 கெஜம் ஜனதா சேலை
60s × 60s × "60" × 5·5" — 6 கெஜம் கலர் சேலை

எங்கள் சங்கத்தில் உற்பத்தியாகும்
இரகங்கள் எல்லா கோ-ஆப்டெக்ஸிலும் கிடைக்கும்

அ.மு.சம்பந்தன், M.G.அரங்காநாதன் ச.ரா.இராமலிங்கம் தலைவர்
சொ.அ.கோதண்டன் ப.அண்ணாமலை ச.க. குப்புசாமி
M.V.கோவிந்தசாமி இயக்குநர்கள் உப-தலைவர்.

WITH BEST COMPLIMENTS



Phone: 211 EKM Resi: 299 EKM

# SRI RAMA FASHION FABRICS,

NAGARI-517590.
Chittoor Dist. (A.P.)

தணிகைக்கோ நீடூழி வாழ்க!

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களால்
பெரிதும் விரும்பிப் பயன்படுத்துவது



**ரங்கா எபனைட் பேனாக்களே!**

பால்பாயிண்ட் பேனாக்களும் ரீபில்களும்
தயாரிப்பவர்கள்:

**செல்வம் அண் கோ.,**

**68-A, பெருமாள் செட்டித் தெரு,**

**திருவள்ளூர்.**

எபனைட் கிடைக்குடங்கள்:

**பென் கார்னர்**
38, சங்கூசாபேட்டை,
காஞ்சிபுரம்-1.

**பென் பேலஸ்**
544, காந்திரோடு,
காஞ்சிபுரம்.

**பென் கார்னர்**
120, மணியக்காரத் தெரு,
அரக்கோணம்.



தமிழ்த் தொண்டாலும்

தேசத் தொண்டாலும்

புகழ்பெற்று விளங்கும்

தணிகைக்கோ அவர்கள்

இன்றுபோல் என்றும் வாழ்க!

எங்களிடம் சைக்கிள்
ரேடியோ
மின்விசிறி
டெலிவிஷன்
வெட்கிரைன்டர்
மிக்ஸி
கடிகாரம்
சோபா
பீரோ

மற்றும்











வீட்டுக்குத் தேவையான சாமான்களை ரொக்கமாகவும் சுலபத் தவணை முறையிலும் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**ஸ்ரீ பாலாஜி அண் கோ.,**

**11, ராஜாஜி தெரு, திருவள்ளூர்-602001.**

123




# அம்மையார்குப்பம் திருமுருகன் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்., நெ. K. H. 22

பொன்னியம்மன் கோயில் தெரு, அம்மையார்குப்பம்

பள்ளிப்பட்டு வட்டம் செங்கை மாவட்டம்.

எமது சங்கத்தில் தரமான 80x80s பாலியெஸ்டர் தோதிகள்

ஜனதா ரகங்களான

60sx60sx47''x5·5மீ சேலைகள்

40sx40sx46''x5·5மீ பிரிண்டிங் சேலைகள் 40sx40sx48'' தோதிகள்

தரமான முறையில் தயாரித்துக் குறைந்த விலையில் கிடைக்கும்

G. R. குப்புசாமி
உப-தலைவர்.

G. D. கணேசன்
தலைவர்.

இயக்குநர்கள்:

S. மோகனவேல், C. G. ஷண்முகம் M. P. பொன்னுசாமி

M. N. சுந்தரன் N. P. குருபாதம்



# வங்கனூர்
# ஸ்ரீ ஜவஹர்லால் நேருஜி
# நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி
# & விற்பனைச் சங்கம் J. J. 585

வங்கனூர்-631304, செங்கை மாவட்டம்

எமது சங்கத்தில் 60x40·50'' லுங்கிகள், 60x60·45'' சேலைகள்

40x40x45 அச்சிட்ட சேலைகள்

40x40·48 வேட்டி, காடா, 40x40·36 பிரிடவுன் முதலிய ரகங்கள்

குறைந்த விலையில் கிடைக்கும்

★

**பி. எம். சஞ்சீவி**
உப-தலைவர்.

**வி. ஏ, சங்கரன்**
தலைவர்.

இயக்குநர்கள்:

**சாமி. ந. சஞ்சீவி**

**B. D. கன்னியப்ப முதலியார்**

**P. V, அண்ணுமலை முதலியார்**

**J. துரைசாமி செட்டியார்**

**திருமதி. V. K. மாணிக்கம்மாள்**

# தணிகைக்கோ அவர்களுடன்

## நேருக்கு நேர் கலந்துரையாடல்

**காஞ்சி விசயபாரதி — தங்கவயல் வாணிதாசன்**

மங்கலங்கிழாரைத் தாங்கள் முதன்முதலில் எப்போது சந்தித்தீர்கள்? விவரமாகக் கூற முடியுமா?

1947ல் சந்தித்தேன். அவரோடு நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு அப்போது இல்லை. விடுதலையின் தாக்கத்தால் திருத்தணி வட்டத்தினுடைய பல்வேறு ஊர்களுக்கு பேசுவதற்காகப் போனபோது மத்தூர், புச்சுரெட்டி பள்ளி, ராமகிருஷ்ண ராஜு பேட்டை, வங்கனூர் போன்ற இடங்களில் அறநெறித் தமிழ்ச் சங்கம் நடைபெறுவதும், அதனை வழிநடத்திச்செல்பவர் ஒரு சாமியார் என்றும் கூறினார்கள். மத்தூரில் காந்தி, நேரு சேவா சங்கம் என்ற பெயராலே ஒரு அமைப்பை செங்குந்தர் வகுப்பைச்சேர்ந்த திரு. வேதாசல முதலியார், திரு. வேலாயுத முதலியார் போன்ற பெரியவர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தின் ஆசிரியர் பொறுப்பில் இருந்தவர் புலவர். சம்பத் செட்டியார் ஆவார். அவரது அழைப்பை ஏற்று 1947 அக்டோபரில் காந்தி பிறந்த தினக் கூட்டத்தில் பேசுவதற்காக நானும் மறைந்து விட்ட V. K. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும். பழம்பெரும் தேச பக்தரான மதனபல்லி பாப்பன குப்தா அவர்களும், E. நாராயணசாமி அவர்களும் சென்றிருந்தோம், அங்கேதான் மங்கலங்கிழார் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. அதன்பிறகு 1948ல் நடைபெற்ற ஜில்லாபோர்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நிறுத்தப்பட்ட வேட்பாளருக்காக நாங்கள் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தோம். அந்தத் தேர்தலிலே தமிழர்களுடைய நலனைப் பாதுகாப்பது என்று அம்மையார் குப்பத்தைச் சேர்ந்த திருவாளர். அமுதாமுத்தப்ப முதலியார் அவர்களை அறநெறித் தமிழ்ச் சங்கச் சார்பில் நிறுத்தப்பட்டு, சித்தூர் வழக்கறிஞர் திரு. இரங்கநாத முதலியார் அவர்களும், கிழார் அவர்களும் அவரது வெற்றிக்காகப் பாடுபட்டு வந்தார்கள். அப்போது ஓட்டுப் பெட்டிக்குச் சின்னம் கிடையாது, வண்ணம்தான் உண்டு அவர்கள் ஊதாப் பெட்டிக்கு ஓட்டுக் கேட்க நாங்கள் மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுக் கேட்க, என்னுடைய உழைப்பைக் கண்டு பேரார்வம் கொண்ட கிழார் அவர்கள் என்னை எப்படியும் தன் வடக்கெல்லை விடுதலை இயக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று பெருமுயற்சி செய்து, மத்தூரில் இருந்தஎனது நண்பர் சம்பத் செட்டியார்மூலம் தன் வயப்படுத்திக் கொண்டார்கள்.

1948 முதல் நான் மங்கலங்கிழாருடைய வழிநடத்துதலுக்குட்பட்டேன். ஆனால் என் உழைப்பிற்கு அவர் மரியாதை கொடுத்த அளவிற்கு என்னுடையத் தனித்தன்மை மீதும், செயல்முறை மீதும் முழுமனதோடு நம்பிக்கை வைக்கவில்லை. அமைதியாகத் தான் நடத்துகின்ற போராட்டம், அமைதி குலைந்து கலகம் விளைவதற்கு முற்படும் என்று நான் இல்லாதபோதெல்லாம் அருமை நண்பர் (கோல்டன்) சுப்பிரமணியம் அவர்

களிடமும், திருமலைப்பிள்ளை அவர்களிட-மும் சொல்லுவார்கள். பின்னாளில் அவர் நினைத்தபடி பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றதுண்டு. என்றாலும் அவர் என்மீது காட்டிய பாசத்தையும், நேசத்தையும்,அவர் குறைத்துக் கொண்டதில்லை. அந்த வகையில் அவர் ஓர் அமைதிப் புரட்சியாளர்.



**எல்லைப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்ற உணர்வு ஏன் ஏற்பட்டது?**

நான் தமிழனாகப் பிறந்ததால்!

**தங்களுக்குப் பெரியார் கொள்கை மீது பிடிப்பு ஏற்படக் காரணம்?**

நான் என்னை அறிவாளி என்று ஏற்றுக் கொண்டதால்!

**பெரியார் கொள்கைகளோடு, எல்லைப் போராட்டக் கொள்கை என்ற அளவில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டதா?**

நான் எதிர்நீச்சல்காரன்!

**நான் எதிர்நீச்சல்காரன் என்று சொல்லுவதன் மூலம் இப்பகுதியில் தங்கள் கருத்துக்கு எதிர்ப்பு இருந்ததாகத் தெரிகிறதே. அதை எப்படிச் சமாளித்தீர்கள்?**

என்னுடைய செயல்படும் திறமையால்!

**எல்லைப்போராட்டத்தில் கலந்துகொண்டதன் மூலம் தங்களுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட மறக்க முடியாத நிகழ்ச்சி?**

வறுமை!

**எல்லைப் போராட்டத்தில் நீங்கள்தான் முதன்மையாக இருந்ததாகவும். பின்னாளில் பின்னுக்குத் தள்ளப்பட்டதாகவும், உலவும் செய்திகளுக்கு என்ன பதில் கூறுகின்றீர்கள்?**

ஏழ்மையை மூலதனமாகக் கொண்டவர்களுக்குக் கிடைக்கும் பரிசு எனக்கும் கிடைத்தது. அதில் ஒன்றும் புதுமை இல்லை.

**வெறும் ஏழ்மைமட்டும் தானா?**

சாதியை மையமாகக்கொண்டு இயங்கும் அரசியல் வானம் ஜனநாயகப் பூபாளம் பாடும்போது என்னைப்போன்றவர்களுக்கு இதுதான் கிடைக்கும்.

**அப்போதிருந்த காலச்சூழல் என்பது ஒரு பக்கம் தனிநாடு திராவிடநாடு. தமிழ்த்தேசியம் நாம் தமிழர், வடவேங்கடத்தொடு குமரி எனும் தமிழ் மாகாணம்,என இருந்திருக்கிறதே. இந்த எல்லைப்போராட்டம், பெரியார் கொண்ட தனி நாடு கோரிக்கைக்குப் பயன்படும் என்று நீங்கள் கருதினீர்களா?**

ஆமாம்.

**எப்படி?**

நான்பெரியார் அவர்களிடமும், அறிஞர் அண்ணா அவர்களிடமும் ஒரே நேரத்தில் வடக்கெல்லைப் போராட்டத்திற்கு அனுமதி பெற்று அவர்களது மனமார்ந்த வாழ்த்துக்களோடு இதில் ஈடுபட்டேன். தமிழரசுக் கழகம் இதற்கு உடன்பட்டுச் செயலாற்றியது. நாம் தமிழர் இயக்கம் வெறும் விளம்பர இயக்கமானதால் தமிழ்நாட்டின் இலட்சியப் பிரச்சினைகளில் கவனஞ் செலுத்தவில்லை. தமிழ்த்தேசிய கட்சியைத் தோற்றுவித்த தலைவர் என்னுடைய உற்ற நண்பரானதால் என்னுடைய கருத்துக்கு மாறாக எந்த முடிவையும் எடுக்கமுடியவில்லை! வடக்கெல்லைப் போராட்டம் அரசியல் இயக்கங்களின் நேரடியான அரவணைப்பிற்கு உட்பட்டதல்ல! அவர்களுடைய முரண்பாடற்ற இலட்சியங்களுக்கு இடையூறு அற்றது என்பதால் ஆதரித்தார்கள்.

இந்தப் போராட்டம் அரசியல் கட்சி சார்பற்றதாகத் தமிழர் என்ற உணர்வை மட்டும் முதன்மைப்படுத்தி நடத்தப் பட்டதாகும். அதனால் அதில் யாருக்கும் எந்த இடையூறும் இல்லை. அன்றைய அகில இந்தியக் கட்சிக்காரர்களான காங்கிரசும், (பிளவுபடாத) கம்யூனிஸ்ட்களும் ஒருசேர வாழ்த்திப் பெருமை பெற்றதுண்டு.

**'சுதந்திர இந்தியாவின் சிறைச்சாலைகள் உங்களுக்கு எப்படி அறிமுகம் ஆகின? என்ன வளர்ச்சியை உங்களுக்குத் தந்தன?**

சுதந்திரத்திற்கு முன்னால் சிறைச்சாலைகள் கொடுமை நிறைந்தது என்று கேள்விப் பட்டிருந்தேன். ஆனால் அந்தக் கொடுமையிலும்பல நன்மைகளை வெள்ளையர் செய்து கொடுத்திருந்தனர் என்று, அன்று சிறைக்குப்போனவர்கள் வரலாறு படித்துத் தெரிந்து கொண்டேன். உதாரணமாக சிறையில் கொசு கடிக்கிறது என்று கொசு வலை கேட்டு, அதைவாங்கிவந்து தருவதற்கான ½ மணி நேரத்தைப் பொறுத்துக் கொள்ளாமல்சிறை அதிகாரிகளைத் தாக்க முற்பட்ட பெருமைக்குரிய தலைவர் நாவலர் S. சத்தியமூர்த்தி என்று நான் படித்திருக்கிறேன். ஆனால் சுதந்திரத்திற்கு பின் உள்ள சிறைக்கூடங்களில், பட்டியில் அடைக்கின்ற ஆடுகளைப் போல அடைக்கப்படுகிறார்கள். ஒருவர் தங்குவதற்காகக் கட்டிவைத்த அறையில் மிகக் குறைந்த அளவு 13 பேரை போட்டு அடைக்கிறார்கள். காலைக் கடன்களைக் கழிப்பதற்கு போதுமான வசதிகள் இல்லை. ஏன்? தண்ணீரே கிடையாது! சிறைக்கு ஒருமுறை போய்விட்டால் அங்கு வழங்கப் படுகின்ற உணவும் உள்ள சூழ்நிலையும் மனித உணர்வையே அகற்றிவிடும். பல ஆயிரம் கிரிமினல் குற்றவாளிகளை இன்றையச் சிறைச் சாலைகள்தான் உற்பத்தி செய்கின்றன. அங்கேயும் சாதி உண்டு. முதல்வகுப்பு, இரண்டாம்வகுப்பு என்ற பாகுபாடு. கொலை செய்துவிட்டவனுக்குக் கூடப் பல நேரங்களிலே முதல் வகுப்பு கிடைத்துவிடும். ஒன்றும் அறியாதவர்கள் தங்கள் வாழ்க்கை வசதி காரணமாக இரண்டாம் வகுப்புக் கைதிகளாவார்கள். காவலர்களின் தடிகள், பழம்பெரும் குற்றவாளிகளின் பார்வையின் கொடுமை, அரசு, சிறைக்கைதிகட்கு வழங்குகின்ற உணவுப்பண்டங்களைத் திருடுகின்ற திருடர்களின் கொட்டம், மனிதஇதயமே இல்லாத மருத்துவர்களின் ஆளுகை, இவை அத்தனையும் சிறையில் தரப்படுகின்ற இன்பங்களாகும். மொச்சைக் கொட்டை அளவுள்ள மூட்டைப்பூச்சி, தன்னுடைய ஓங்கார ரீங்காரத்தால்உறக்கம்கொள்ள முடியாது தாளம் போடவைக்கும் கொசுக்கள், கட்டாந்தரைப் படுக்கை, இத்யாதிகள் அங்கே தாராளமாக உண்டு.

பிரத்யேகமாக சென்னை நகரத்திலுள்ள சிறையில் விதிகளுக்குப் புறம்பாக, பண மிருந்துவிட்டால் புகைக்கின்ற கஞ்சா? ஆறுய்ப்பெருக்கெடுத்து ஓடும் சாராயம்! மிகவும் தாராளமாகப் புழங்குகின்ற காட்சியைக் காண முடியும்.

**சிறைகளைப் பற்றி இவ்வளவு அறிந்துள்ள தாங்கள் எந்தெந்தக் காரணங்களுக்காக எந்தெந்த சிறையில் எவ்வளவு காலம் இருந்தீர்கள்?**

சென்னையில், மத்திய அமைச்சர் திவாகருக்குக் கருப்புக்கொடி காட்டி ஒருநாள் சைதை சிறையில் இருந்தேன். அதற்குப்பின்தணிகைப் போராட்டத்தில் 1953 ஜூன் மாதம் 20ந் தேதி ரயில்களை நிறுத்துகின்ற போராட்டத்தில் கலந்து கொண்டு திருத்தணி சிறையிலும் திருப்பதி சிறையிலும் இருந்தேன். அதற்குப் பிறகு 1956-ல் சென்னைக்கு நடை பயணம் சென்று 500க்கு மேற்பட்டவர்கள் சிறை பிடிக்கப்பட்டதில்



இறுதி நாளில் சிறைபிடிக்கப்பட்டு மூன்று நாட்கள் சென்னை சிறையில் இருந்தேன். அதன்பிறகு 1956லேயே கோர்ட்டுகளைப் பகிஷ்கரித்து, சிறை பிடிக்கப்பட்டு இரண்டுநாள் தணிகையிலேயும் 6-6 வாரங்களாக இருதண்டனைகள் பெற்று 160 பேர் இராஜமந்திரி சிறையிலும் இருந்தோம். அதன்பிறகு குடந்தையில்

நடைபெற்ற அஞ்சலக மறியலில் சிறை பிடிக்கப்பட்டு குடந்தை சிறையிலேயே 3நாள் இருந்தேன். திருத்தணி சிறையில் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு காரணமாக இரு நாட்கள் இருந்தேன். இது அல்லாமல் போலீசார் நினைக்கும்போதெல்லாம் ஒரு நாள், இருநாள் பிடித்து என்னுடைய நடவடிக்கைகளிலிருந்து தடுத்துவைப்பார் -கள். இறுதியாக கைலாசம் கமிஷனை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் சென்னைசிறையில் ஏழுநாட்கள் இருந்தேன் இப்படி நான் ஒட்டுமொத்தமாக 19முறை சிறை சென்றுள்ளேன். தண்டனை பெற்றுச் சிறையில் இருந்தது ஒருமுறைதான்!

எல்லைப்போராட்டத்தில் ஈடுபட்டவர் என்ற முறையில் தமிழக அரசு வழங்கிய தாமிரப் பட்டயம் உங்களுக்குத் தரப்படவில்லையே ஏன்?

நான் தி. மு. க. வில் இருந்து தான் வடக்கெல்லைப் போரில் ஈடுபட்டேன். அதை அன்றைய செங்கோல் பத்திரிகை பெருமையுடன் வெளியிட்டதுண்டு. ஆனால் இன்று நான் தி. மு. க. வில் இருக்கிறேன் என்ற காரணம்காட்டி அது எனக்கு மறுக்கப்பட்டுள்ளது. தி. மு க. வில் உள்ள கவிஞர் திரு. கு. மா. பா. அவர்களுக்குக் கொடுக்கப் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இதற்கெல்லாம் பதில் உங்களுடைய ஆரம்பக்கேள்விகளிலேயே நான் சொல்லிவிட்டேன் என்பதால் மீண்டும் அதை விவரிப்பது அரசியல் பண்பாடு ஆகாது என்பதால் விட்டுவிடுகிறேன். மன்னிக்கவும்.

எல்லைப் போராட்டம் மொழியை அடிப்படையாகக் கொண்டு நடந்தாலும், "அடிப்படையில் நிலமும், பொருளாதாரப் பரிவர்த்தனையும் ஆந்திரர்களிடம் மட்டும் உள்ளது. அது நம்மவர்களுக்கும் வரவேண்டும்'' என்ற நோக்கம் இருந்ததா? போராட்டம் முடிந்தபின் அந் நோக்கம் வெற்றி பெற்றதாகக் கருதுகின்றீர்களா?

வியாபாரம் அவர்களிடம் மட்டுமில்லை! நில உடமை அவர்களுடையது அல்ல! இவைகளுக்கு மேலாக மொழியை அடிமைப்படுத்தி, ஆதிக்கஞ் செலுத்தி வந்ததால், ஆறு உயர்நிலைப்பள்ளிகள் இருந்த, விடுதலை பெற்ற இந்தப் பகுதியில் தமிழ் படிக்க வசதியுள்ள பள்ளிக்கூடங்கள் இரண்டு மட்டுமே! திருத்தணி உயர்நிலைப் பள்ளியில் அந்த நாளில் 500க்கு மேற்பட்ட பிள்ளைகள் படிக்கின்ற சூழ்நிலையில் 10, 15 பேருக்கு மேல் தமிழ் படிக்க முடியாது. பிறக்கின்ற குழந்தைகளைத் தெலுங்கிலே படிக்க வைக்கவேண்டிய அவசியமும், தமிழர்களே ரெட்டியார்

## வாழ்த்துகிறேன்!

'எல்லாம் அவன் செயல்' என்று மூட நம்பிக்கையில் மூழ்கியிருந்த இந்தச் சமுதாயத்தை, ஏன்? எதற்கு? என்று வினாவினை எழுப்பி சுய சிந்தனையாளராக மாற்றிய 20-ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சுய சிந்தனையாளன், தந்தை பெரியாரின் வழித்தோன்றலாக, மொழி உணர்வை விழிப்போடு எல்லைப்புற மக்களுக்கு ஊட்டி, தமிழன், நான்! என்று மேதினியில் எடுத்துக்காட்டிய தமிழ்ப் பெரியார் மங்கலங்கிழார் நினைவால் அமைந்த மன்றத்திற்கு வாழ்த்து தெரிவிப்பதோடு என்னோடு எல்லைப் போராட்டத்தில் முன்னணித் தோழனாக இருந்து பணியாற்றிய, நான் சார்ந்த இயக்கத்தில் தமிழ்த் தலைமகன் டாக்டர் கலைஞர் அவர்களின் வழிநின்று தொண்டாற்றும் தணிகைக்கோ டாக்டர் ந. அ. ரசித் அவர்களின் 57-ஆவது பிறந்தநாளில் அன்னாரும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும்.

**கா. கு. சானகிராமன்**
எல்லைப்போராட்ட வீரர்
வங்கனூர்
செங்கை மாவட்டம்.

பிட்டஞ்சூட்டி தெலுங்கர்களாக மாற்றி விட்டக் கொடுமையும், தாழ்த்தப்பட்ட வர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே கூட தமிழ் பேசுவதைக் கூடச் சகித்துக் கொள்ள முடியாத ஆதிக்கம் வளர்ந்து பல தீமை களைச் செய்தது. அதன் எதிரொலிதான் வடக்கெல்லைப்போர்.

அப்போராட்டம் முடிந்து 1960க்குப் பின், பதினேந்திற்கும் மேற்பட்ட உயர் நிலைப்பள்ளிக்கூடங்களிலும், பல நூறு துவக்கப்பள்ளிகள், இடைநிலைப்பள்ளிகள் ஆகியவற்றிலும் தமிழர்களின் குழந்தைகள் மட்டுமின்றி, மொழியால் தெலுங்கர் களான தெலுங்கர்களின் பிள்ளைகளும், இன்று தமிழே படிக்கின்ற செய்தி தேனினு மினியதாகும்.

**தாங்கள் இளமைக்காலத்தில் நாடகங்களில் பங்குபெற்றதாகவும், பின்னுளில் திரைப்படம் எடுத்ததாகவும் உள்ள அனுபவங்களைப்பற்றிக் கூறுங்கள்?**

1942 போராட்டத்தின் போது ஏகாதிபத்திய அடக்குமுறை தாண்டவமாடிய நாட்களில் ஆட்சியாளர்களின் அடக்கு முறை அத்துமீறிப் போனபோது, கடைத் தெருவில் காங்கிரஸ்காரர்களைத் தாக்கிக் கொண்டிருக்க, காரணம் தெரியாமல் குறுக்கே சென்று நானும் அடிபட, அன்றைய தலைமைக் காவலர் அடித்து முடித்தபின் என்னை அடையாளம் புரிந்து வயது காரணமாக என்னை சிறைக்குக் கொண்டு செல்லாமல் உறவினர்களிடம் ஒப்படைத்தார். போலீசாரின் அராஜகத் திற்குக் காரணம் கண்டுபிடிக்க முனைந்து அதன் காரணமாக நான் குடும்பத்தை விட்டு வெளியே செல்ல நேர்ந்தது. அப்படிப்போனபோது, எனக்கு அடைக்கலம் தந்த இடம்தான் நாடகக்கம்பெனி. அப்போதே நான் குடியரசு, திராவிடநாடு சந்தாதார் ஆனதால் தமிழை நான் படித்துக்கொள்கின்ற வாய்ப்பும், அதனுல் அடுக்கு மொழியில் பேசுகின்ற வழக்கமும் இருந்ததால், அன்றைய நாடகக் கம்பெனியில் புதுமாதிரியான வசனங்களை எழுதுவதற்குச் சம்பளமில்லாத ஆளாக நான் பயன்பட்டேன். பாலசண்முகானந்த சபா என்ற கம்பெனி புதுவை ‘கெப்ளேர்’ தியேட்டரில் நாடகங்கள் நடத்திக்கொண்டிருந்தது. அதில் கண்ணகி நாடகத்தை விதிவசச் சிலம்பு என்று பெயர்மாற்றி நடத்தினேன். லட்சுமிகாந்தன் நாடகத்தில் பகவன்தாஸ் என்ற பேங்கர் வேஷம் எனக்கே சிறப்பைத் தந்தது. அந்த நேரத்தில் பிரபல சக்தி நாடக சபா கலைக்கப்பட்டு, இன்றைய நடிகர் திலகம் சிவாஜி கணேசன், M. N. நம்பியார். கலைஞர் (மறைந்த) A.P. நாகராஜன், நாடகஆசிரியர் S.D. சுந்தரம் போன்றவர்கள் வெளியே வந்து தனி நாடங்களில் வேஷம் அணியத் தொடங்கிய காலம். அதன் பயனுக எங்கள் கம்பெனி புதுச்சேரியைவிட்டு சென்னைக்கு வந்தது. நாடகக் கம்பெனி கலைந்தது. சிற்சில படங்களில் அவ்வப்போது சில காட்சிகள் அமைத்துத் தருகின்ற வேலையும், சில இயக்குனர்களுக்கு உதவியாளராக, காட்சி அமைப்புக்களை நடிகர்களுக்கு விளக்குகின்ற பணிகளும் செய்து வந்தேன். பெயரோ, பணமோ, பெரிய அளவிற்கு இல்லாமல் சில காட்சிகளுக்கு வசனங்கள் எழுதிக்கொடுத்து பசியாற்றிக்கொள்கின்ற ஒரு நிலைமை சுமார் 10 ஆண்டுகள் நீடித்தது. சொந்தமாகப் படம் எடுக்க வேண்டும், ‘காஸ்ட்யூம் செட் அப்’ உள்ளதாகவும் தமிழன் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணி, அதுவரை எந்தக் கதாசிரியனும் தொடாத ஒரு கதையை உருவாக்கி அதிலே, கூட இருந்த நண்பர்களால் வஞ்சிக்கப்பட்டு படம் முழுமை பெறவில்லை.

**அப்படியானுல் இப்போது படம் எடுக்கும் முயற்சியைக் கைவிட்டுவிட்டீர்களா?**

இல்லை! தொடர்கிறது. அடுத்த ஆண்டு அந்த வேலை நிறைவுபெறக் கூடும் என்று நம்புகிறேன்.

**கலைத்துறையில் தங்கள் பங்குபற்றிக் கூறியது போலவே இலக்கியத்துறையில் தாங்கள் யாரும்**

இதுவரை செய்யாத குணங்குடி மஸ்தான் சாகிபு பாடலுக்கு உரை எழுதி பதிப்பித்-துள்ளீர்கள். மேலும் சில நூல்கள் வெளியிட்டிருக்கிறீர்கள் இதில் ஏதேனும் முக்கியமான அனுபவம் பெற்றீர்களா?

தமிழ்நாட்டில் புத்தகங்களைப் படிக்கின்றவர்கள் குறைவு. பணங்கொடுத்து வாங்கிப்படிப்பவர்கள் அதைவிடக்குறைவு பணங்கொடுத்து வாங்கி-னாலும் அதை அலமாரியில் அழகு படுத்தி வைப்பதைத் தவிர வேறுவகையாகப் பயன்படுத்தாதவர்கள் ஏராளம். புத்தகம் பதிப்பிப்பது ஒரு பயனுடைய செயல் என்று நான் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்றாலும் ஒரு சிந்தனையாளனு-டைய அறிவின் ஊட்டத்தை எடுத்துக் காட்டப் புத்தகங்களைப் பதிப்பிப்பது அவசியம் என்று கருதுகிறேன். வருவாய்க்-காக எழுதாமல் தம்மை வளர்த்துக் கொள்ள அதனைப் பயன்படுத்த முடியும் என்றுநம்புகிறேன். அந்தவகையில் எனக்கு உலகப் பல்கலைக் கழகம் டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது என்னுடைய பெரும் அனுபவமாகும்.

பல்வேறு அரசியல் தலைவர்களைச் சந்தித்த தங்களின் நெஞ்சைக் கவர்ந்த தலைவர் யார்?

டாக்டர் கலைஞர்.

காரணம்?

இன்றையச் சமுதாயத்தில் ஏறியிருக்கின்ற சாதி ஆணவத்தால் பணத் திமிங்கலங்களின் பார்வையில் மிக மிகஅழுத்தப்பட்டு கொச்சைப் படுத்தப்படுகின்ற ஒரு குடும்பத்தில் பிறந்தவர். எந்தவிதப் பின்-னணியும் இல்லாமல் இயற்கையாகச் சூழ்நிலைகளைத் தனக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டு இந்தநாட்டு மக்களையும் அரசியலையும் நடத்திச் செல்கின்ற பாங்கு மனித சமுதாயத்தின் இதயமுள்ளவர்கள் எண்ணிப்பார்க்கும் செயலாகும்.

இலங்கையில் தமிழ் இனம் நசுக்கப்படுகிறதே தாங்கள் இலங்கை சென்று நேரில் கண்டவர் என்ற முறையில் என்னகூற விரும்புகின்றீர்கள்?

அது ஒருநாட்டின் முற்றிலும் உள்நாட்டு விவகாரமாக இருப்பதால் நாம் நேரடி





WORLD UNIVERSITY

DIPLOMA
TO ALL TO WHOM THIS DOCUMENT SHALL COME
GREETINGS
DECLARAMUS AC TESTAMUR

MR. N.A. RASHEED

having honorably fulfilled all the requirements imposed by the authorities of this Institution, upon Recommendation of the Faculty, do therefore confer the bearer of the degree of

DOCTOR OF LITERATURE (D. LITT.)
HONORIS CAUSA

DATUM 1st March 1982
President

யாக எதுவும் செய்ய முடியாது. நாம் அவர்களுக்கு அனுதாபங் காட்டலாம். அவர்களுக்காக இங்குள்ள தமிழர்களிடம் உணர்வுகளை ஊட்டலாம். இலங்கையில் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்ற செய்தியே இந்த நாட்டில் மிகப் பலருக்குத் தெரியாது. அங்கே உள்ளவர்கள் தமிழர்கள் என்று இங்குள்ளவர்களுக்கு உணர்த்துவது பெருங்கஷ்டமாக இருக்கின்றது. காரணம் கம்பன் காவியத்தால் அவன் தேன் தடவிக் கொடுத்துள்ள கவி நயம், இங்குள்ள புலவர்களாலும், தமிழர் விரோதிகளாலும், பட்டத்திற்காகப் படிக்கும் ஆசிரியப் பெருமக்களாலும், தங்களுடைய பட்டத்தை விலைபேசி கூலிக்குப் படிப்பிக்கின்றவர்களாலும்,அந்தநாட்டுத் தமிழர்கள் இராட்சசர்களாக்கப்பட்டு விட்டார்கள். அதனால் அங்கே தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று நம்ப வைப்பதே பெரும் பிரச்சினையாக உள்ளது இந்த நிலையில், அன்றைய வெள்ளையன் ஆட்சிக்கு இலங்கையும் இந்தியத் துணைக்கண்டமும் அடிமைப்பட்டுக் கிடந்தபோது சுலபக் கூலிக்கு (Cheap Labour) ஆட்களைப் பிடித்துக் கொண்டுபோய்க் குடியேற்றி அவர்களின் பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டார்கள். அதன் காரணமாக அங்கே இருப்பவர்கள் இந்திய வம்சாவழியினர் என்ற ஒரு புதிய சொல் தொடருக்கு இலக்காகி, அங்கே உள்ளவர்களிடையேயும் தொடர்பின்றி, இங்கேயும் தொடர்பில்லாமல், நிரந்தரமற்ற ஒரு நடு நிலையில் இருக்கின்ற தமிழர்களைப்பற்றித் தான் செய்தி தெரிகின்றது. இது இந்திய அரசியலில்,அரசியல் ஏற்படுத்தியபூகம்பம். இதை சீனக்காரன் பார்வையில் அவன் நாட்டு மக்களுக்கு அவன் தேடியுள்ள பரிகாரத்தை இந்திய நாட்டிலும்பெற்றுத் தருவதற்கு, இங்குள்ள அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்தி, முனைப்பாகச் செயற்படுத்த முயற்சி எடுத்துள்ளோம்; எங்கள் முயற்சி வெற்றி பெறுவது இந்திய நாட்டின் ஜன நாயகம் செயல்படுவதைப் பொறுத்ததே யாகும்.



**தாங்கள் இலங்கைக்கு எப்போது சென்றீர்கள்?**

1982 மே-1ந் தேதி சென்றேன்.

**இலங்கை தவிர வேறுநாடுகளுக்குச் சென்றதுண்டா?**

நான் 1974ல் மலேசியா, சிங்கப்பூர் சென்று வந்தேன்.

**அந்த நாட்டில் உள்ள தமிழனுக்கும் நம் நாட்டில் உள்ள தமிழனுக்கும் என்ன வேறுபாடு காண்கின்றீர்கள்?**

தமிழன் என்றோர் இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு என்ற பாடலுக்கு ஏற்ப அங்குள்ள தமிழன் பண்புநலம் காக்கும் தமிழனாகவாழ்கிறான். ஆடல், பாடல், அந்திமயக்கம், அறிவுக்கு அணை போடுதல், போன்ற சிலபழக்கங்கள் அவனைப் பலி கொண்டாலும் இங்குள்ள தமிழனைப்போல் சொரணையற்று இல்லாமல் சொரணையுடன் வாழ்கிறான்.

**சிங்கப்பூரில் ஏதேனும் புதுமையைக் கண்டீர்களா?**

ஆம்! காக்கை பறக்காத ஓர் அதிசய நாடு, சுத்தம் சுகம்தரும் என்று இங்கே சுவரொட்டிகளில்தான் பார்க்கலாம். அங்கே சுத்தமாக இருப்பதே கடமை. $1\frac{1}{2}$ வயது குழந்தைகூட வீதியிலே சிறுநீர் கழிக்காது. அதற்குப்பிறகு அந்தநாட்டின் கட்டுப்பாட்டைப்பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வீதிகளிலே போக்குவரத்து ஏற்பாடுகள் கொஞ்சமும் பிறருக்குத் தொல்லைதராதவாறு செய்யப்பட்டிருக்கிறது. அனைத்தும் ஒரு வழிப் பாதை 60கி.மீக்குறைந்து எந்த ஊர்தியும் வீதியிலே செல்ல முடியாது.

நாட்டைப்போல புகையைக்கக்கிக் கொண்டு செல்லும் ஊர்திகள் அங்கு இல்லை. வீதியை அடைத்துக்கொண்டு எந்த ஊர்தியும் அங்கு நிற்க முடியாது. வீதியில் தவறிப்போய் நின்று விட்டால் காவல்துறையினரால் அகற்றப்பட்டு ஏலம் விடப்படும். இரவு எந்த நேரத்திலும் அங்கே மின்ஒளி உண்டு. ஒரு குண்டூசி தவறிக் கீழே விழுந்துவிட்டாலும் எடுத்து விடலாம். அப்படிப்பட்ட ஒளிவிளக்குகள் அங்கே போடப்பட்டுள்ளன. குடிக்கத் தண்ணீரே அங்கு கிடையாது. 100 மைலுக்குஅப்பால் கிணறுகள் எடுத்து கடலுக்குள் குழாய் போட்டு சிங்கப்பூருக்குப் பஞ்சமில்லாமல் தண்ணீர் வழங்கப்படுகின்றது. அதைப்போலத்தான் மின்சாரமும்! நிலம் இல்லாததால் குடியிருக்கக் குறைந்தது 40 முதல் 60 அடுக்குமாடிகளை கொண்டகட்டிடங்களைக் கட்டுகிறார்கள். ஒரு கட்டிடத்தில் குறைந்தது 10, 12 லிப்ட்கள் வேலை செய்கின்றன. மூன்று வயதுக் குழந்தைகளே அதை இயக்கிக் கொள்கின்றன. அதற்கென்று தனி ஆள்இல்லை. ஒரு கட்டிடத்தில் குடியிருப்பவர்கள் வாக்கு, நம்முடைய நகராட்சியின் ஒருவார்டின் மொத்த வாக்கிற்குச் சமம். அரசு அலுவலர்கள் கூட பல்வேறு இடங்களில் பகுதி நேர ஊழியம் செய்து பணம் திரட்டிக் கொள்ளலாம். அதற்கு அந்த அரசு அனுமதி வழங்குகிறது. துப்புரவுப் பணிகளை இரவிலேதான் செய்கிறார்கள். ஏன்? அந்த நாட்டின் செலாவணிக்குத்தேவைப்படுகிற டாலர்களை அங்குள்ள சாதாரண அச்சகங்களிலே அச்சடித்துக் கொள்கிறார்கள். இத்தகைய அதிசயம் உலகில் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

**சிங்கப்பூரைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளத் தாங்கள் திருத்தணி நகர வளர்ச்சிக்கு என்ன கூற விரும்புகிறீர்கள் ?**

திருத்தணி தமிழர்கள் தங்களை முழுத் தமிழர்களாக உணருகின்ற நாள் வரும்போது இந்நகரம் வளரக் கூடும்!

**வாழ்க்கை வரலாறு எழுதும் எண்ணம் உண்டா ?**

நான் இன்னும் வாழவே இல்லை! நான் வாழ்ந்த பிறகு அதைப்பற்றி நினைப்பேன்.

**அப்படியானால் தங்களின் குடும்பத்தினர் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள் ?**

என் தந்தையின் பெயர் ந. அப்துல் அஜீஸ். தாயாரின் பெயர் காத்துனாபீ. உடன்பிறந்தவர்கள் ஒரு தமக்கையும், 5 சகோதரரும். தாய், தந்தை, தமக்கை இருசகோதரர்கள் இயற்கை எய்திவிட்டனர். நான் வாலாசா தாலுகாவிலுள்ள அம்மூர் கிராமத்தில் 4-ஆம் வகுப்புவரை தனிப் பள்ளியில் படித்தேன். எனக்குக் கல்வியறிவு புகட்டியவர் திரு. ப. திருமலை அய்யங்கார். கண்டதைப் படித்தால் பண்டிதனாவான் எனும் முதுமொழிக்கேற்ப நானும் பண்டிதனாகிவிட்டேன்.

**தற்சமயம் இலக்கிய மன்றங்கள் வைத்து நடத்தும் இளைஞர்களுக்குத் தாங்கள் கூற விரும்பும் செய்தி என்ன?**

இருக்கின்ற இலக்கியங்களைப் படித்தது போதும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளாமல் புதிய பார்வையில் புதுமையான இலக்கியங்களை மேலும் படைக்கவேண்டுமென்று விரும்புகிறேன். கவிஞர்களுக்கு, தாங்கள் வடிக்கின்ற கவிதைகளுக்கு தாங்களே சாட்சி சொல்ல வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து கவிதைகள் இயற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலைஞர்கள் இந்தச் சமுதாயச் சேற்றிலே பதிந்துள்ள சுவடுகளைப் பார்த்துப் பரவசப்படாமல், இரத்தச் சேற்றிலே தம் சுவடுகளைப் பதிப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிந்தனையாளர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, தான் சிந்துகின்ற வியர்வைத் துளிகள் இந்த சமுதாயத்தில் படிந்துகிடக்கின்ற சாதி அழுக்கைப் போக்குகின்ற வெள்ளமாக மாற்ற வேண்டும் என்ற, எண்ணத்துடன் செயல்படவேண்டும். கண்ணீர் சிந்திக் கழுவ எண்ணுபவன் கோழை. பேழையில் புரட்சியைப் பார்க்க முடியாது. வாளின் நுனியில் தான் பார்க்க முடியும். நன்றி! வணக்கம்.

# நன்றியுரை

மலரை நுகர்ந்து முடித்துள்ளஉங்களுக்கு எங்கள் நன்றி. மலரை உங்கள் கரங்களில் வழங்கக் காரணமானவர்களை ஒருகணம் கருதிப்பார்த்து அவர்கள் அனைவருக்கும் நன்றிசெலுத்தக் கடப்பாடுடையேம்.

நாங்கள் வேண்டியபோது சிறந்த அறிவுரைகளை வழங்கிய அறிஞர்கட்கும் விளம்பரங்களை உதவிய நல்லோர்க்கும், கருத்துரைகளையும், கவிதைகளையும் வழங்கிய சான்றோர்க்கும்,

பல்வேறு சிரமங்களுக்கிடையே தவக்கமின்றி இம்மலரை உரிய நேரத்தில் அச்சிட்டு வழங்கிய காஞ்சிபுரம் ஸ்ரீ சக்தி அச்சக உரிமையாளர் அவர்களுக்கும் பிழைதிருத்தியுதவிய புலவர் சி. கயிலாயம் (காஞ்சிபுரம்) அவர்களுக்கும், பல்வேறு உதவிகள் செய்த நண்பர்களுக்கும், அனைத்துத் துறைகளிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்த நல்லோர்க்கும் எங்கள் இதயங்கனிந்த நிறைவான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தணிகைக்கோ அவர்கள் 56 ஆண்டுகளைக் கடந்தார் என்பதற்கு அடையாளமாக 56 பேர் அவரைப்பற்றி தத்தம் உள்ளக்கிடக்கையைப் பல வடிவங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். அறிஞர் தணிகைக்கோவின் மணிவிழாவிற்கும் ஒரு மலர் தொடுக்க எண்ணியுள்ளோம், பல்வேறு அரசியல் தலைவர்கள் அதிலே எழுதுவார்கள் என்று நம்புகிறோம். தமிழுலகம் அந்த மலருக்கும் ஆதரவும் வரவேற்பும் தருமெனநம்புகிறோம். இறுதியாக இந்த மலரில் இடம்பெற்றுள்ள தணிகைக்கோ அவர்களுடன் கலந்துரையாடலில் உள்ள பெரிய அளவிலான குழுப் புகைப்படம் டாக்டர் பட்டம் பெற்றமைக்கு கவிஞர் குடியரசு, கவிஞர் அருமைநாதன் வாழ்த்துரை வழங்கிய காட்சிஆகும். உடனிருப்பவர்கள் மங்கலங்கிழார் மன்றத்தினர். சிறிய அளவிலான குழுப் புகைப்படம் இலங்கையின் தந்தை செல்வா அவர்களது மகன் சந்திரகாசன் அவர்களுடன் தணிகைக்கோ, வாணிதாசன், விசயபாரதிஆகியோர் இலங்கைப் பிரச்சினை குறித்து உரையாடுவதாகும்.

நன்றி.

**ந. அ. அப்துல் மாலிக்**
செயலாளர்
மங்கலங்கிழார் இலக்கிய மன்றம் &
மலர்க் குழுவினர், திருத்தணி.


தமிழுணர்வு காக்கும் நற்றொண்டர்
நண்பர் டாக்டர் **ந. அ. ரஷீத்** அவர்கள்
பலவளமும் நலமும் பெற்று வாழ வாழ்த்தும்

அன்பன்,
**D. பாலசுப்பிரமணியம்**
பாகஸ்தர்,
கமலா திரையரங்கம்
திருத்தணி.

134

மங்கலங்கிழார் இலக்கிய மன்றமும்
தணிகைக்கோ அவர்களும் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து
தமிழ்ப்பணி ஆற்ற வாழ்த்துகிறேன்!

—K. M. முருகப்ப செட்டியார்

★

தணிகையில்

தேங்காய், பழம், பொரி ஆகியவை
சகாய விலையில் மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்குமிடம்

★

**K. M. முருகப்ப செட்டியார்**

தேங்காய் பழம் வியாபாரம்,
பொரிகடலை மொத்த வியாபாரம்,
**செங்கல்வராயர் தெரு, திருத்தணி.**

— வறுமைக்கோடு எங்கள் வாசலில் கோலமிடுகிறது —
— கவிஞர் சிலம்பன் —



மங்கலங்கிழார் இலக்கிய மன்றத்திற்கும்

தணிகைக்கோ ந. அ. ரஷீத் அவர்களுக்கும்

வாழ்த்துக்கள்!

**அ. ரத்தினம்,**
ஒப்பந்தக்காரர்,
அகூர் அஞ்சல்,
திருத்தணி வட்டம்.

ஒருமைப்பாடு எங்கள் நதிகளில் தவமிருக்கிறது — கவிஞர் சிலம்பன்

மங்கலங்கிழார்

இலக்கிய மன்றத்திற்கும்

தணிகைக்கோ

அவர்களுக்கும்

வாழ்த்துக்கள்

**வெங்கடேசன்**

செயலாளர், நகர தி. மு. க.

பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்

**திருத்தணி.**





**அத்திமாஞ்சேரிப்பேட்டை**
**பெரியார் ஈ. வெ. ரா. கைத்தறி**
**நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி &**
**விற்பனைச் சங்கம் லிமிடெட்., நெ.K.H. 18**

**அத்திமாஞ்சேரிப்பேட்டை.**

திருத்தணி தாலுக்கா, செங்கற்பட்டு ஜில்லா

எங்கள் சங்கத்தில் கீழ்க்கண்ட ரகங்களை உற்பத்தி செய்கிறோம்

40 × 50 × 1 × 8 வேட்டி
40 × 50 × 2 × 8 வேட்டி
40 × 45 × 1 × 6 சேலை
40 × 45 × 1 × 6 காடா

40 × 50 × 2 × 1 ஜனதா வேட்டி முதலிய ரகங்களை நல்ல முறையில் தயார் செய்கிறோம். பிரிண்டிங் சேலை தயார் ஆனவை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்

இயக்குனர்கள்:
S. நாராயணசாமி
M. P. ராமசாமி
M. V. சுப்ரமணி
B. N. அய்யாவு
V. G. சுப்ரமணியம்

தலைவர்
M. ஊரப்பன்

செயலாளர்
M. பிச்சாண்டி முதலி




காமராஜர் கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச்
சங்கம் லிமிடெட், நெ. 151.

அம்மையார்குப்பம்-631301.

செங்கை மாவட்டம்.

சங்கத்தில் உற்பத்தியாகும் இரகங்கள்

1) 80 × 80 பாலியஸ்டர் வேஷ்டி
2) 40 × 40 6 கெஜம் ஜனதா சேலை
3) 60 × 60 சேலை
4) 40 × 40 காரிக வேஷ்டி 50 இன்ச்
5) 40 × 40 சலவை வேட்டி 48 இன்ச்
6) 60 × 60 காரிக காடா 50 இன்ச்
7) 60 × 40 காரிக காடா 42 இன்ச்
8) 60 × 40 லுங்கி 50 இன்ச்
9) 40 × 40 பிரிண்டிங் சேலை ஜனதா

எங்கள் சங்கத்தில் உற்பத்தியாகும் இரகங்கள் எல்லாம்
கோ-ஆப்டெக்ஸிலும் கிடைக்கும்

இயக்குனர்கள்:
V. G. இராமலிங்கம்
N. M. கந்தசாமி
K. P. ஆறுமுகம்
V. S. கோபால்
V. V. சீனிவாசன்

V. S. பாலகிருஷ்ணன்
தலைவர்.

G. K. கெங்காதரன்
உப-தலைவர்.